# பாரதி புதையல்

# 1

தொகுப்பு: ரா. அ. பத்மநாபன்

அமுத நிலையம்

# பாரதி புதையல்

(முதல் பாகம்)

இதுவரை வெளிவராத
தொகுக்கப் பெறாத
பாரதி எழுத்துக்கள்

பதிப்பாசிரியர் :
ரா. அ. பத்மநாபன்

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை :: சென்னை-18.

உரிமை பதிவு
அமுதம் மணிவு—16
நவம்பர்—1958

விலை 30 புதுக் காசு

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை—18.

# பதிப்புரை

மகாகவி பாரதியார் மறைந்து 37 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனால் இன்னும் அவருடைய நூல்களுக்கு முடிவான பதிப்பு வெளிவரவில்லை. இன்னும் பல பாரதி பாடல்களும் கதைகளும் கட்டுரைகளும் தொகுக்கப் பெறாமல் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. சில தற்சமயம் அச்சில் இல்லாத, பாரதி காலத்தில் வெளி யான நூல்களாக இருக்கின்றன; சில பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு வெளியான "இந்தியா" பத்திரி கையின் பக்கங்களில் இருக்கின்றன; இன்னும் சில ஓரிரு தலைமுறைக்கு முந்திய பத்திரிகைகளில் வெளியாகி, பிறகு சமீபகாலப் பத்திரிகைகளால் மறுபடி வெளியிடப் பெற் றுள்ளவையாக இருக்கின்றன.

இவ்வாறு பலவிடங்களில் சிதறிக் கிடக்கும் பாரதி எழுத்துக்களைத் திரட்டி வரிசையாக வெளியிட வேண்டும் என்பது என் அவா. இதில் முதல் படியாக, "பாரதியார் மொழி பெயர்த்த தாகூர் கதைகள்" என்ற நூல் ஏற் கனவே பதுப்பிக்கப்பட்டு, அமுத நிலையத்தினால் வெளி யிடப் பெற்றுள்ளது.

அடுத்தபடியாக இப்போது "பாரதி புதையல்" என்ற இந்த நூலை இரண்டு பகுதிகளாகத் தமிழ் மக்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இங்கு வெளியிடப் பெறும் பாக்கள், கதைகள், கட்டுரைகள் முதலியவை தற்சமயம் கிடைக் கும் வேறெந்த நூலிலும் சேர்க்கப் பெறாதவையாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு இடங்களிலிருந்து மிகுந்த பிரயாசையின் பேரில் சேகரிக்கப்பட்டுள்ளவை. இவை.

பாரதியாரைக் கவியாக மட்டும் நன்கறிந்துள்ள தமிழ் மக்கள் இந்நூல்களில் அவரது அரசியல், சமூக,

இலக்கிய சீர்திருத்த வாதங்களையும் அவ்வாதங்களை வற்புறுத்த அவர் கையாளும் எளிதான நேர் நடையையும் ரசிப்பார்கள் என்று நம்புகிறேன்.

இந் நூலிலுள்ள கட்டுரைகளில் பல "கலைமகள்" பத்திரிகையில் 1935 முதல் 1945 முடிய பத்து வருஷ காலத்தில் வெளியிடப் பெற்றவையாகும். இந்தப் பத்தாண்டு காலத்தில், பாரதி கட்டுரைகளைத் தேடி வெளியிடக் "கலைமகள்" செய்துள்ள முயற்சி குறிப்பிடத் தக்கது.

இதைத் தவிர, "ஹநுமான்" வாரப் பத்திரிகையும் பல பாரதி கதை கட்டுரைகளைத் தேடி வெளியிட்டது. மேலும், "கல்கி" பத்திரிகையிலும், "சக்தி" பத்திரிகையிலும் வெளியான இரண்டு பாடல்களும் இந்நூலில் சேர்க்கப் பெற்றுள்ளன.

"கலைமகள்" மாசிகையில் வெளியான கட்டுரைகளை இங்கு உபயோகித்துக் கொள்ள அனுமதித்த அதன் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதனுக்கும், "சுதேசமித்திரன்" பத்திரிகையிலும் "கதா மாலிகா" என்ற நூலிலும் வெளியான கதைகளை உபயோகித்துக் கொள்ள அனுமதித்த "மித்திரன்" காரியாலயத்தினருக்கும், பிற பத்திரிகைகளில் உதிரியாக வெளிவந்த விஷயங்களைச் சேர்க்க உதவிய அப்பத்திரிகை ஆசிரியர்களுக்கும், "எங்கள் காங்கிரஸ் யாத்திரை", "புதிய கட்சியின் கொள்கைகள்" இரு பிரசுரங்களின் பிரதிகளையும் கொடுத்துதவிய முன்னாள் "ஹநுமான்" ஆசிரியர் ஸ்ரீ. சங்கு சுப்பிரமணியத்துக்கும் நம் நன்றி உரியதாகும்.

"பாரதி நிலையம்"
32, முனா லேட் தெரு,
தி. நகர், சென்னை-17
15—11—58.

ரா. அ. பத்மநாபன்.

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|

**பதிப்புரை :**

**பாடல்கள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | சுதந்திர தேவியிடம் முறையீடு | ... | 1 |
| 2. | இந்தத் தெய்வம் நமக்கனுகூலம் | ... | 3 |
| 3. | குருவிப் பாட்டு | ... | 4 |
| 4. | காவடிச் சிந்து | ... | 8 |
| 5. | செல்வத்துட் பிறந்தனமா? | ... | 9 |
| 6. | பிரெஞ்சு தேசீய கீதம் | ... | 10 |
| 7. | மணிமுத்துப் புலவர் | ... | 10 |
| 8. | வந்தே மாதரம் | ... | 11 |
| 9, | பெற்ற தாயும் | ... | 12 |
| 10. | காலனுக்கு உரைத்தல் | ... | 12 |
| 11. | இறவாமை | ... | 13 |

**கதைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | பஞ்ச கோணக் கோட்டை | ... | 15 |
| 2. | பாம்புக் கதை | ... | 17 |
| 3. | காக்கை இலக்கணம் கற்ற கதை | ... | 18 |
| 4. | பூலோக ரம்பை | ... | 23 |

| | | | |
|---|---|---|---|
| 5. | மன்மத ராணி | ... | 36 |
| 6. | வேணு முதலி | ... | 44 |
| 7. | வேணு முதலி விசித்திரம் | ... | 46 |
| 8. | ஆவணி அவிட்டம் | ... | 49 |
| 9. | பிராயச் சித்தம் | ... | 52 |
| 10. | கதவு | ... | 60 |

**கட்டுரைகள் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | தென்றலுடன் பிறந்த பாஷை | ... | 63 |
| 2. | தமிழில் எழுத்துக் குறை | ... | 65 |
| 3. | தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள் | ... | 69 |
| 4. | தமிழ் நாட்டில் நாடகம் | ... | 73 |
| 5. | இந்தியாவுக்கு பொது பாஷை | ... | 74 |
| 6. | நமது கல்வி முறையிலே ஒரு பெருங்குறை | ... | 76 |

**மாதர் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | நாகரிக வளர்ச்சியிலே ஸ்திரீகளுக்குரிய ஸ்தானம் | ... | 78 |
| 2. | ருதுமதி விவாஹம் | ... | 80 |

# பாரதி புதையல்

## I. கவிதை

### 1. சுதந்திர தேவியிடம் முறையீடு

[இப்பாடல் பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு நடந்த "இந்தியா" வாரப் பத்திரிகையின் 1909-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆந் தேதி இதழில் வெளிவந்தது. இச்சமயம் "இந்தியா" புதுவையிலிருந்து வந்துகொண்டிருந்தது.

இப்பாடலுக்குத் தலைப்புத் தரப்படவில்லை. இங்குள்ள தலைப்பு இந் நூலின் பதிப்பாசிரியர் தந்துள்ளது.

1909-ஆம் ஆண்டு துருக்கியில் முடியரசை ஒழித்துக் குடியரசு நிறுவியதை வரவேற்று இப்பாடல் "துருக்கி மாந்தர் நல்ல பெரும் பதம் காணப் புரிந்திட்டாய்" என்று சுதந்திர தேவியை வாழ்த்துகிறது; பாரதநாட்டில் சுதந்திரம் வராதிருந்தது பாரத மக்களின் குறையாலேயே என்றும் இப்பாடல் குறிப்பிடுகிறது.

பாடல் "இன்னும் வரும்" என்று "இந்தியா"வில் அறிவித்திருந்தது. ஆனால், இதன்பின் வந்த அத்தனை "இந்தியா" பிரதிகளைச் சோதனை செய்தும், பாட்டின் தொடர்ச்சி வெளி வந்ததாய்த் தெரியவில்லை. இருப்பினும், வெளிவந்த அளவுகூடப் பாடல் பூர்த்தியாக இருக்கிறது.]

1. *அன்னையிங் குனைக்கூறப் பிழையில்லை, யாமே*
*நின்னருள் பெற்றோங்க*
*என்னனுந் தகுதியிலேம் மிகப் பொல்லேம்*
*பழியுடையேம் இழிவு சான்றேம்*
*பொன்னனை வழியகற்றிப் புலைவழியே செல்லு(ம்)*
*இயல் பொருந்தி யுள்ளேம்*
*தன்னால் வந்திடு நலத்தைத் தவிர்த்துப்பொய்த்*
*தீமையினைத் தழுவுகின்றேம்.*

2. எல்லை யில்லாக் கருணையுறுந் தெய்வதநீ யெவர்க்கு
மனமிரங்கி நிற்பாய்
தொல்லை யெலாந் தவிர்த் தெங்கள் கண்காண
நொடிப் பொழுதில் துருக்கி மாந்தர்
நல்லபெரும் பதங்காணப் புரிந்திட்டாய் பலகால
நவை கொண்டன் னோர்
சொல்லரிய பிழை செய்த(து) அத்தனையு மறந்தவரைத்
தொழும்பு கண்டாய்.

3. அரைக் கணமாயினுமுன்னைத் திரிகரணத் தூய்
மையுடன் "அன்னாய், ஞானத்
திரைகடலே அருட்கடலே சரணைத்துமுதவு
பெருந்தேவே யிந்தத்
தரைக்கணிய பெரும் பொருளே காவாயோ?"
என் றலறித் தாயுன் னாமம்
உரைக்கமன(ம்) எமக்கின் றி யாமறிந்தாற்பிழை
சிறிதும் உளதாங் கொல்லோ?

4. வேண்டுமென விளக்கில்விழுஞ் சிறுபூச்சிதனை
யாவர் விலக்க வல்லார்
தூண்டு மருளால் யாமோர் விளக்கை யவித்தா
லதுதான் சுற்றிச் சுற்றி
மீண்டுமொரு விளக்கிற்போய் மாண்டுவிழும்
அஃதொப்ப விருப்போ டேகித்
தீண்டரிய புன்மையினில் யாம் வீழ்ந்தா லன்னாய்
நீ செய்வ தென்னே?

5. அந்தநா ளருள்செயநீ முற்பட்ட பொழுதெலாம்
அறிவிலா தேம்
வந்தமா தேவிநினை நல்வரவு கூறியடி
வணங்கிடா மல்
சொந்தமா மனிதருளே போரிட்டும் பாழாகித்
துகளாய் வீழ்ந்தேம்
இந்தநா ளச்சத்தால் நீவருங்கால் முகந்திரும்பி
யிருக்கின்றோ மால்.

## 2. இந்தத் தெய்வம் நமக்கநுகூலம்

[புதுவையில் "இந்தியா" பத்திரிகையை நடத்தியவரும், பாரதி, வ. வே. சு. ஐயர், அரவிந்தர் முதலிய "சுதேசி"த் தலைவர்களுக்குப் பெருந்துணையாக இருந்தவருமான ஸ்ரீ. மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியாரின் புதல்வி யதுகிரி அம்மாள் எழுதி வைத்திருந்த கையெழுத்துப் பிரதியிலிருந்து கிடைத்த பாடல் இது.

இப்பாடலின் பிரதியைத் தாம் பாரதியாரிடமிருந்து பெற்றதாகவும், பாரதியாரின் மூத்த புதல்வி தங்கம்மாள் ருதுவான தினம் இது பாடப்பெற்றதாகவும் யதுகிரி அம்மாள் தமது "பாரதி நினைவுகள்" நூலில் குறிப்பிடுகிறார். அந் நூலில் வெளிவந்துள்ள இப்பாடல் பாரதி பாடல் தொகுதிகளில் சேரவில்லை.

மனிதர் தம் கடமையைச் செய்து, தெய்வம் எந்த வழியைக் காட்டுகிறதோ அதே நம் வழியென்று திடப்படுத்திக் கொள்ள வேணும் என்று கூறி பாரதியார் இப் பாடலை யதுகிரி அம்மாளுக்குப் பாடிக் காட்டினாராம்.]

*இந்தத் தெய்வம் நமக்கநுகூலம்*
*இனிக் கவலைக் கிடமில்லை. (இந்த)*

1. *மந்திரங்களைச் சோதனை செய்தால்*
*வையகத்தினை ஆள்வது தெய்வம்*
*இந்தத் தெய்வம் கதியென் றிருப்பீர்*
*ஆக்க முண்டென் றனைத்து முரைக்கும் (இந்த)*

2. *மரத்தின் வேரில் அதற்குண வுண்டு*
*வயிற் றினிலே கருவுக்குணவுண்டு*
*தரத்திலொத்த தருமங்களுண்டு*
*சக்தியென் றிலோ முக்தியுண்டு (இந்த)*

3. *உலகமே உடலாய் அதற்குள்ளே*
*உயிரதாகி விளங்கிடுந் தெய்வம்*
*இலகும் வானொளி போலறிவாகி*
*எங்கணும் பரந்திடும் தெய்வம் (இந்த)*

4. *செய்கை யாவும் தெய்வத்தின் செய்கை*
*சிந்தை யாவும் தெய்வத்தின் சிந்தை*
*உய்கை கொண்டதன் நாமத்தைக் கூறின்*
*உணர்வு கொண்டவர் தேவர்களாவர் (இந்த)*

5\. நோயில்லை வறுமையில்லை
நோன்பிழைப்பதிலே துன்பமில்லை.
தாயுந் தந்தையும் தோழனுமாகித்
தகுதியும் பயனும் தரும் தெய்வம் (இந்த)

6\. அச்சமில்லை மயங்குவதில்லை
அன்பும் இன்பமும் மேன்மையும் உண்டு
மிச்சமில்லை பழந்துயர் குப்பை
வெற்றியுண்டு விரைவினில் உண்டு

இந்தத் தெய்வம் நமக்கநுகூலம்
இனி மனக்கவலைக் கிடமில்லை.

---

## 3. குருவிப் பாட்டு

[புதுச்சேரியில் இளைஞர்கள் சங்கம் ஒன்றில் பாரதியார் அடிக்கடி வந்து, அளவளாவியிருப்பார். அந்தச் சங்கம் இருந்த அறையில் மேலே குருவிகள் கூடுகட்டி இன்பமாய் வாழ்ந்து வந்தன.

1909-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி, சங்கத்தைச் சேர்ந்த பொன்னு ராஜமாணிக்கம் பிள்ளை என்ற இளைஞரும் பாரதியாரும் குருவிகளின் இன்பமயமான வாழ்க்கையைக் கண்டு மகிழ்ந்திருந்த சமயம், ராஜமாணிக்கம் பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க இந்தக் குருவிப் பாட்டைப் பாரதி பாடினர்.

பொன்னு ராஜமாணிக்கம் பிள்ளை பாரதியை ஆதரித்த சீமான் பொன்னு முருகேசம் பிள்ளையின் உறவினர். மிக ஒழுங்கானவர். 1908-ஆம் வருஷத்திய சங்க நடவடிக்கைகள் கொண்ட ஒரு நோட்டுப் புத்தகத்தைக்கூட இன்னும் பத்திரமாய் வைத்திருக்கிறர். அதைவிட பத்திரமாக, 1908-ஆம் ஆண்டுமுதல் தாமறிந்த பாரதி பாடல்களை ஒரு கெட்டி நோட்டுப் புத்தகத்தில் எழுதிவைத்துப் பத்திரமாய்க் காத்து வருகிறர். அந்த நோட்டிலுள்ள பாடல்களில் இந்த ஒரு பாடல் தவிர மற்றவையெல்லாம் வெளியாகி விட்டன. பொன்னு ராஜமாணிக்கம் பிள்ளையவர்களை 1957-இல் சந்தித்து இப் பாடலின் பிரதியை இந்நூலின் பதிப்பாசிரியர் பெற்று வந்தார்.

இந்தக் குருவிப் பாட்டை, ''தண்டமிழ்ப் பித்தன்'' என்ற புதுவையன்பர் ''தமிழ் அன்பன்'' என்ற மாதமிருமுறைப் பத்திரிகையில் 1946-ஆம்ஆண்டு அக்டோபர் 23-ஆந்தேதி வெளியிட்டிருக்கிறர்.]

அருவிபோலக் கவி பொழிய—எங்கள்
அன்னை பாதம் பணிவேனே.
குருவிப் பாட்டை யான்பாடி—அந்தக்
கோதைபாதம் அணிவேனே. 1

### கேள்வி

சின்னஞ்சிறு குருவி—நீ
செய்கிற வேலை யென்ன?
வன்னக் குருவி—நீ
வாழும் முறை கூறாய்! 2

### குருவியின் விடை

கேளடா மானிடவா—எம்மில்
கீழோர் மேலோர் இல்லை.
மீளா அடிமை யில்லை—எல்லோரும்
வேந்தரெனத் திரிவோம். 3

உணவுக்குக் கவலையில்லை—எங்கும்
உணவு கிடைக்குமடா
பணமும் காசுமில்லை—எங்குப்
பார்க்கினும் உணவேயடா. 4

சிறியதோர் வயிற்றினுக்காய்—நாங்கள்
ஜன்ம மெல்லாம் வீணாய்
மறிகள் இருப்பதுபோல்—பிறர்
வசந்தனில் உழல்வதில்லை. 5

காற்றும் ஒளியுமிகு—ஆ
காயமே எங்களுக்கு
ஏற்றதொரு வீடு—இதற்
கெல்லை யொன்றில்லையடா. 6

வையகம் எங்குமுளது—உயர்
வான பொருளெல்லாம்
ஐயமின் றெங்கள் பொருள்—இவைஎம்
ஆகார மாகுமடா. 7

ஏழைகள் யாருமில்லை—செல்வம்
ஏறியோர் என்றுமில்லை.
வாழ்வுகள் தாழ்வுமில்லை—என்றும்
மாண்புடன் வாழ்வமடா. 8
கள்ளம் கபடமில்லை—வெறும்
கர்வங்கள் சிறுமையில்லை.
எள்ளற்குரிய குணம்—இவை
யாவும் உம் குலத்திலடா. 9
களவுகள் கொலைகளில்லை—பெருங்
காமுகர் சிறுமையில்லை.
இளைத்தவர்க்கே வலயர்—துன்பம்
இழைத்துமே கொல்லவில்லை. 10
சின்னஞ்சிறு குடிலிலே—மிகச்
சீரழி வீடுகளில்
இன்னலில் வாழ்ந்திடுவீர்—இது
எங்களுக்கு இல்லையடா. 11
பூநிறை தருக்களிலும்—மிகப்
பொலிவுடைச் சோலையிலும்
தேனிறை மலர்களிலும்—நாங்கள்
திரிந்து விளையாடுவோம். 12
குளத்திலும் ஏரியிலும்—சிறு
குன்றிலும் மலையினிலும்
புலத்திலும் வீட்டினிலும்—எப்
பொழுதும் விளையாடுவோம். 13
கட்டுகள் ஒன்றுமில்லை—பொய்க்
கறைகளும் ஒன்றுமில்லை.
திட்டுகள் தீதங்கள்—முதற்
சிறுமைகள் ஒன்றுமில்லை. 14
குடும்பக் கவலையில்லை—சிறு
கும்பித்துயரு மில்லை.
இடும்பைகள் ஒன்றுமில்லை—எங்கட்
கின்பமே என்றுமடா 15

துன்ப மென்றில்லையடா—ஒரு
துயரமும் இல்லையடா.
இன்பமே எம் வாழ்க்கை—இதற்கு
ஏற்ற மொன்றில்லையடா. 16

காலையில் எழுந்திடுவோம்—பெருங்
கடவுளைப் பாடிடுவோம்.
மாலையும் தொழுதிடுவோம்—நாங்கள்
மகிழ்ச்சியில் ஆடிடுவோம். 17

தானே தளைப்பட்டு—மிகச்
சஞ்சலப்படும் மனிதா.
நானோர் வார்த்தை சொல்வேன்—நீமெய்ஞ்
ஞானத்தைக் கைக் கொள்ளடா. 18

விடுதலையைப் பெறடா—நீ
விண்ணவர் நிலைபெறடா
கெடுதலை ஒன்றுமில்லை—உன்
கீழ்மைகள் உதறிடடா. 19

இன்பநிலை பெறடா—உன்
இன்னல்கள் ஒழிந்ததடா
துன்பம் இனியில்லை—பெருஞ்
சோதி துணையடா. 20

அன்பினைக் கைக் கொள்ளடா—இதை
அவனிக்கிங்கு ஓதிடடா
துன்பம் இனியில்லை—உன்
துயரங்கள் ஒழிந்ததடா. 21

சத்தியம் கைக் கொள்ளடா—இனிச்
சஞ்சலம் இல்லையடா.
மித்தைகள் தள்ளிடடா—வெறும்
வேஷங்கள் தள்ளிடடா. 22

தர்மத்தைக் கைக் கொள்ளடா—இனிச்
சங்கடம் இல்லையடா.
கர்மங்கள் ஒன்றுமில்லை—இதில் உன்
கருத்தினை காட்டிடடா. 23

அச்சத்தை விட்டிடடா—நல்
ஆண்மையைக் கைக்கொள்ளடா.
இச் சகத்தினிமேலே நீ—என்றும்
இன்பமே பெறுவையடா. 24

---

## 4. காவடிச் சிந்து

[அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் புகழ் பெற்றவை. ஒரு சமயம் எட்டயபுரம் அரசரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளம் பாரதி லேசாக நகைத்தார். "நகைத்துப் பயனில்லை. உங்களால் முடியுமானால் இயற்றுங்கள் பார்க்கலாம்" என்றார் ஒரு புலவர். "இன்று மாலைக்குள் ஒரு சிந்துடன் வருகிறேன்" என்று கூறி, அப்படியே மாலையில் கீழ்வரும் சிந்துடன் அரண்மனைக்கு வந்தார் பாரதி. உடனே புலவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் இப் பாடலை அரங்கேற்றம் செய்வித்தார் அரசர். புலவர் யாவரும் போற்றினர். அந்தச் சிந்தின் ஒரு பகுதி மட்டும் நமக்குக் கிடைத்துள்ளது.

இப் பாடலைப் பாரதியாரின் தம்பி ஸ்ரீ சி. விசுவநாதன் 1929-இல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பாரதி சரிதத்திலும், தி. ஜ. ர. அவர்கள் 1940-இல் வெளியிட்ட "புதுமைக் கவி பாரதியார்" என்ற நூலிலும் காண்கிறோம். இந் நூல்கள் இப்போது அச்சில் இல்லை.

இப் பாடலும் பாரதி பாடல் தொகுதிகளில் இடம் பெறவில்லை.]

பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன்,கௌ மாரன்—ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன், அடி
பணி சுப்பிர மணியர்க்கருள்
அணி மிக்குயர் தமிழைத்தரு
பக்தர்க் கெளியசிங் காரன்—எழில்
பண்ணு மருணாசலத் தூரன்.

## 5. செல்வத்துட் பிறந்தனமா?

[எட்டயபுரத்தில் இளம் பாரதி பாடிய பாடல்களில் பாரதி பாடல் தொகுதிகளில் சேராத மற்ருெரு பாட்டு இது. இப் பாட்டை, இப்பொழுது எட்டயபுரத்தில் இருக்கும் 'சம்ஸ்தானப் புலவர்' நாகூர் முத்துப் புலவரிடம் பாரதியார் நேரில் பாடியதாக அவரே கூறினுரென்று, ஸ்ரீ எல். கிருஷ்ணஸ்வாமி பாரதி "கல்கி" பத்திரிகை 13—4—1958 இதழில் இப் பாடலை முழுமையாக வெளியிட்டு விளக்கி யிருக்கிருர். வறுமையில் வாடும் தமிழ்ப் பாவலரைக் கண்டு உள்ள முருகப் பாடிய பாட்டாக இருக்கிறது இது.

இப் பாடலின் முதற் பகுதி மட்டும் ஸ்ரீ சி. விசுவநாதன் ஆங்கிலத்தில் எழுதிய பாரதி சரிதத்திலும், தி. ஜ. ர. அவர்கள் எழுதிய "புதுமைக் கவி பாரதியார்" என்ற நூலிலும் வெளி வந்திருக்கிறது. "அட கெடுவாய் பல தொழிலுமிருக்க" என்ற தனிப் பாடலைக் கேட்டுப் பாடியதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.]

செல்வத்துட் பிறந்தனமா? அது பெறுவான்
சிறு தொழில்கள் பயில வல்லேமா?
வில்வைத்த நுதல் விழியார்கண்டு மையல்
உற வடிவம் மேவினேமா?
பல் வித்தையிலும் சிறந்த தீம் கானப்
பெரு வித்தை பயின்றிட்டேமா?
கொல் வித்தை, இருள் வித்தை, மருள் வித்தை
பயின்று மனம் குறைகின்றேமால். 1

காவித் திருவிழி
மானுர் தம் மையல்
கடு விஷமாம்
கூவிச் சமயர்க்
குரைப்பன பொய்,
இக்கு வலயத்தில்
ஆவிச் சுகமென்
றறிந்த தெல்லாம்
துன்பம் அன்றியிலை.
பாவிச் சிறு உலகே! உன்னை
யாவன் கொல்
பண்ணியதே! 2

## 6. பிரெஞ்சு தேசீய கீதம்

[புதுச்சேரியில் மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியார் குடும்பத்துச் சிறுவர் சிறுமியர் பிரெஞ்சுக் குடியரசு தினத்தன்று பள்ளியில் நடிப்பதற்காக ஒரு நாடகம் பயின்று கொண்டிருந்தார்கள். தமிழ் நாடகம். ஆனால் அதில் பிரெஞ்சு தேசீய கீதமான "லா மார் ஸெலேஸ்" என்பதைப் பிரெஞ்சு மொழியிலேயே பாடுவதாக இருந்தார்கள். இது பாரதியாருக்குப் பொறுக்கவில்லை. பிரெஞ்சு தேசீய கீதம் விறு விறுப்பானது; அவருக்கு மிகவும் பிடித்தமானது; அவரே உணர்ச்சியுடன் பல சமயம் பாடுவது. இருப்பினும் ஒரு தமிழ் நாடகத்தின் நடுவே பிற மொழிப் பாடலைப் பாடுவானேன் என்று அவர் கருதினார். அதன் பயனாக, பிரெஞ்சு தேசீய கீதத்தைத் தாமே தமிழ்ப்படுத்திக் கொடுத்தார். சிறுவர்கள் அதை நாடகத்தில் பாடினார்கள்.

மண்டயத்தார் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ஆஜி ரங்கநாயகி அம்மாள் வைத்திருந்த பழம் பிரதி யொன்றிலிருந்து இப் பாடல் நமக்குக் கிடைத்துள்ளது.]

*அன்னை நன்னாட்டின் மக்காள் ஏகுவம்*
*மன்னு புகழ் நாளிதுவே!*
*நம்மேல் கொடுங்கோல் செலுத்துவோர்*
*நாட்டினர் உதிரக் கொடி தனை!*

*கேட்டீர்களா! கிராமங்களில்*
*வீரிடும் அரக்கப் படைகள்*
*அணுகி நம் மடிகளிலேயே*
*நம் மக்கள் பெண்டிரைக் கொல்லத் துணிவார்!*

*போர்க் கோலம் பூணுவீர்! வகுப்பீர் அணிகளை!*
*செல்வோம் செல்வோம்!*
*நாம் போம் பாதையில்*
*பாய்ச்சுவோம் அவரிரத்தத்தை!*

---

## 7. மணிமுத்துப் புலவர்

["சக்தி" பத்திரிகை, 1954-ஆம் ஆண்டு மார்ச் மாத இதழில் ஸ்ரீ மு. சண்முகம் பிள்ளை யவர்கள் எழுதிய "பாரதி பாராட்டிய பாவலன்" என்ற கட்டுரையில் கீழ்வரும் பாடல் வெளியாயிற்று.

எட்டயபுரம் புலவர்களில் ஒருவரான மணிமுத்துப் புலவர் மீது பாடப் பெற்றது இப் பாட்டு. மணிமுத்துப் புலவரின் குமாரர் ஸ்ரீ முத்தையாப் புலவர், 1935-இல் தம் தந்தையாரைப் பற்றி வெளியிட்ட "மணிமுத்துப் புலவர் பாடல்" என்ற நூலில் இப் பாடல் தோன்றிய வகையையும் பாடலையும் வெளியிட்டுள்ளதாக, ஸ்ரீ சண்முகம் பிள்ளை தம் கட்டுரையில் தெரிவிக்கிருர்.

பாடல் தோன்றிய வகையைப் பற்றி முத்தையாப் புலவர் கூறுவதாவது:— "ஒருகால் எட்டயபுரத்தின் கண் நமது தேசாபிமானியும் பாஷாபிமானியுமாகிய சுப்பிரமணிய பாரதியவர்கள் வைணவ சித்தாந்தமாக இப் புலவர் பெருமான் (மணிமுத்துப் புலவர்) இயற்றிய பாசுரங்களைக் கேட்டுத் தமது உள்ளங் களிகூர்ந்து, 'பந்தைத் தெறு......நாவலர் வாக்கு' என்ஞெரு வெண்பாவால் வியந்துரைத்துள்ளனர்."

மணிமுத்துப் புலவர் திருமால் மீது பாடிய பாசுரங்களைக் கேட்டு பாரதியார் பாடிய பாராட்டு வெண்பா வருமாறு:]

*பந்தைத் தெறுமுலைமாப்*
*பான் மொழியி னுங்கரிய*
*எந்தைக்குச் சால*
*இனிக்குமே—விந்தை*
*அணிமுத்துக் கோவையென*
*அஞ்சொலிசை சேர்க்கும்*
*மணிமுத்து நாவலர்*
*வாக்கு.*

---

## 8. வந்தே மாதரம்

[தேசீய கீதங்களில் முதல் பாட்டாக வெளியிடப் பெற்றுள்ள "வந்தே மாதரம் என்போம்—எங்கள் மாநிலத் தாயை வணங்குது மென்போம்" என்று துவங்கும் "வந்தே மாதரம்" பாட்டில், தற்போது பல்லவியைத் தவிர சரணங்கள் ஐந்துதான் இருக்கின்றன. அரசாங்கப் பதிப்பிலும் இப்படியே காண்கிறது. ஆனுல், இப் பாடல் முதல் முதலாக வெளியானபோது, 1907-ஆம் ஆண்டில், இதில் சரணங்கள் ஆறு இருந்திருக்கின்றன. இந்த ஆருவது சரணம் தற்போது அச்சில் இல்லை. 1907-ஆம் ஆண்டில் ஸ்ரீ. வி. கிருஷ்ண ஸ்வாமீ ஐயரின் உதவியால் வெளியான நான்கு பக்க பாரதி

பாடல் பிரசுரத்தில் இந்த ஆருவது சரணம் வருமாறு காண் கிறது:]

> தேவிநம் பாரத பூமி—எங்கள்
> தீமைகள் யாவையுந் தீர்த்தருள் செய்வாள்
> ஆவி யுடல் பொருள் மூன்றும்—அந்த
> அன்னை பொற் ருளினுக் கர்ப்பித மாக்கி . (வந்தே)

[தற்போது கடைசியாக உள்ள ஐந்தாவது சரணமான "எப்பதம் வாய்த்திடு மேனும்" என்று துவங்கும் சரணத்துக்கு அடுத்ததாக இதை ஆருவது சரணமாய்ச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.]

---

## 9. பெற்ற தாயும்

[பாரதியார் பாடல் நூல்களின் பழைய பதிப்புகளிலெல்லாம் நூலின் தலைப்புப் பக்கத்தில் ஓர் ஈரடிப் பாட்டு வெளியிடுவது வழக்க கமா யிருந்தது. இந்த ஈரடிப் பாட்டு வருமாறு:

> பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
> நற்றவ வானிலும் நனி சிறந்தனவே.

[தேச பக்தி ததும்பும் இந்த ஈரடிப் பாட்டு பாரதி பாடல் தொகுதி களில் சேர்க்கப்படாமல் விட்டுப் போயிருக்கிறது.]

---

## 10. காலனுக்கு உரைத்தல்

[பாரதி கவிதைகளின் அரசாங்கப் பதிப்பில் வெளிவந்துள்ள இப் பாடல், அப் பதிப்பில் குறையாகவே வெளிவந்துள்ளது.

பாடலின் இரண்டாவது சரணத்தில் நான்கு அடிகளும் இல்லை. மூன்றே அடிகள் வெளிவந்துள்ளன. வெளிவந்துள்ள மூன்ருவது அடி, உண்மையில் நான்காவது அடியாகும்.

"காலனுக்கு உரைத்தல்" என்ற இப்பாடல் முதன் முதலாக 1919-ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் "சுதேசமித்திரன்" வருஷ அனுபந்தத்தில் வெளிவந்தது. அந்தச் "சுதேசமித்திரன்" இதழி லிருந்து முழுப் பாடலும், அதில் தரப்பட்டிருந்த ராக, தாள, ஸ்வர வரிசை விவரங்களும் இங்கே தரப்பட்டுள்ளன.]

சக்ரவர்க ராகம் ஆதி தாளம்

பல்லவி

காலா உனை நான் சிறு புல் லென மதிக்கிறேன்—என்றன்
காலருகே வாடா, சற்றேஉனை மிதிக்கிறேன்!

சரணங்கள்

1. வேலா யுத விருதினை மனதிற் பதிக்கிறேன்—நல்ல
வேதாந்த முரைத்த ஞானியர் தமை யெண்ணித் துதிக்கிறேன்
—ஆதி
மூலா யென்று கதறிய யானையைக் காக்கவே—நின்றன்
முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ கெட்ட மூடனே—அட
(காலா உனை)

2. ஆலால முண்டவ னடி சரணென்ற மார்க்கண்டன்—தன
தாவி கவரப்போய் நீ பட்ட பாட்டினை யறிகுவேன்—இங்கு
நாலாயிரம் காதம் விட்டகல்! உனை விதிக்கிறேன்!—ஹரி
நாராயணனாக நின்முன்னே உதிக்கிறேன்!—அட
(காலா உனை)

[பல்லவிக்கு ஸ்வர மாதிரி:

ஸரிகா ரிஸ ஸாஸஸ நீஸநி கமப மகா ரீஸா—பப
ஸாநித பாபா—மாகா காமப—கமபம கா—ரீஸா.

சரணங்களுக்கும் ஏறக்குறைய இதே மாதிரிதான்.]

---

## 11. இறவாமை

### தாயுமானவர் வாழ்த்து

[இப்பாடல் பாரதி கவிதை அரசாங்கப் பதிப்பில் வெளிவந்துள்ளது. ஆனால், இப் பாடலுக்கு முற்பகுதியாகப் பாரதியால் மேற்கோள் காட்டப்பட்ட தாயுமானவர் பாடல் அரசாங்கப் பதிப்பில் சேரவில்லை. தாயுமானவரிடம் பாரதிக்கு அளவற்ற பற்று; மனவமைதிக்காக அவர் பாடும் பாடல்களில் பல தாயுமானவர் பாடலாக இருக்கும்.

"இறவாமை" என்று பாரதி பாடிய தாயுமானவர் வாழ்த்துப் பா "கலைமகள்" பத்திரிகையில் 1938-ஆம் ஆண்டு பிற்பகுதியில்,

வெகுதானிய ஆண்டு முதலில் வெளிவந்தது. அப்போது, இப்பாடல் முழுமையாக வெளிவந்தது; அதாவது தாயுமானவர் பாடல் ஒன்றும் பாரதி வாழ்த்துமாக. அதை இங்கே வெளியிடுகிறோம்.]

"வானைப் போல வளைந்துகொண் டானந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்து கலந்த மெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவன் நானெனும்
ஈனப் பாழ்கெட என்றும் இருப்பனே."

—தாயுமானவர்.

என்றும் இருக்க உளங்கொண்டாய்
இன்பத் தமிழுக் கிலக்கியமாய்
இன்றும் இருத்தல் செய்கின்றாய்
இறவாய் தமிழோ டிருப்பாய் நீ
ஒன்று பொருளஃ தின்பமென
உணர்ந்தாய் தாயு மானவனே
நின்ற பரத்து மாத்திரமோ
நில்லா இகத்தும் நிற்பாய் நீ.

# II. கதைகள்

## 1. பஞ்ச கோணக் கோட்டை

*["பஞ்சகோணக் கோட்டை" என்ற தத்துவார்த்தமான இந்தக் கதை முப்பதாண்டுகளுக்குமுன் வ. ரா. அவர்கள் புதுவையில் நடத்திவந்த "சுதந்திரம்" என்ற மாதப் பத்திரிகையில் வெளி வந்தது. பிறகு, 1945 ஸெப்டம்பர் 9-ஆந் தேதி இது சென்னை "ஹநுமான்" வாரப் பதிப்பிலும் வெளியாயிற்று.]*

ஒரு தேசத்தில் ஒரு கோட்டை இருந்தது. அதற்குப் பஞ்ச கோணக் கோட்டை என்று பெயர். அதாவது அந்தக் கோட்டைக்கு ஐந்து மூலைகளும் ஐந்து பக்கங்களும் உண்டு. அந்தக் கோட்டையை வெகு காலமாய் எந்தச் சத்துருவாலும் பிடிக்க முடியவில்லை. அதை அழிவற்ற கோட்டை என்று உலகத்தோர் புகழ்ந்து வந்தார்கள். முன்பக்கம் ஆழமான கரும்பாறை அஸ்திவாரமாக இருக்க, அதன் மேல் பெரிய பெரிய கற்களால் ஆகாயமளாவக் கட்டப்பட்டிருந்தது. கற்கள் ஒன்றில் ஒன்றுகப் பதிக்கப்பட்டுப் பின்னல் வரிசைகளாயிருந்தன. ஒரு சுவரைப் பெயர்த்தால்தான் ஒரு கல்லைப் பெயர்க்க முடியும். இவ்விதமாக, நான்கு பக்கங்களும், மிகுந்த பலத்தோடும் கூடி அமைக்கப்பட் டிருந்தன. ஆனுல் பின் பக்கமாகிய ஐந்தாம் பக்கம் மாத்திரம் பலமற்றதாகவே இருந்தது. அந்தப் பக்கத்தில் மண் சுவர்தான் இருந்தது.

இந்த ரகஸியம் வெகு காலமாக ஒருவருக்கும் தெரியாம லிருந்தது. அந்தக் கோட்டையைப் பிடிக்க வந்த வீர ஸேனர்கள் எல்லாம் பலமான பக்கங்களைத் தாக்கி அபஜய மடைந்து போனுர்கள். அதனுல், அந்தக் கோட்டையின் கீர்த்தி உலகமெங்கும் பரவி விட்டது.

இவ்வாறிருக்கும் காலத்தில் அந்தக் கோட்டைக்குள் சிநேகமாய்ப் புகுந்த ஒரு அந்நியன் வெகு காலமாய் அங்கிருந்ததால் அந்தக் கோட்டையின் பலஹீனமான பக்கம் இன்னதென்று அறிந்து கொண்டான். பலமான நாலு பக்கங்களும் பலஹீனமான மண் சுவராலாகிய ஐந்தாம் பக்கத்தை மிக இழிவாக மதித்து, நடத்தி வந்தன. கல் சுவர்களுக்கும், மண் சுவருக்கும் பொருத்த மிருக்குமா?

அந்தக் கோட்டையைச் சுற்றி ஆழமான அகன்ற அகழ் ஒன்று இருந்தது. ஆனுல், பின் பக்கம் இருந்தது மண் சுவராகையால் அதை யடுத்திருந்த அகழியின் பாகம் ஆழ மில்லாமல் மேடா யிருந்

தது. அகழின் ஜலம் சிறிது வற்றும் காலத்தில் மண் சுவர் பக்கம் தரை தெரியும்படி வற்றிப் போகும்.

இந்த மர்மங்களை யெல்லாம் அறிந்த அந்நியன் ஒரு சிறிய படை திரட்டிக்கொண்டு வந்து அகழ் ஜலம் வற்றியிருந்த மண் சுவர்ப் பக்கம் இறங்கி அந்தச் சுவரைத் தாக்கி அதைக் கைவசப்படுத்திக் கொண்டு கோட்டையைப் பிடித்துக் கொண்டான்.

கோட்டையிலிருந்த அளவற்ற, நிகரற்ற செல்வங்களை யெல்லாம் தன் தேசத்திற்கு வாரிக்கொண்டு போனான்.

வீராதி வீரர்களுக்கும் கைவசப்படாத இந்தக் கோட்டையைப் பிடித்த காரணத்தாலும், அதிலிருந்து வாரிக்கொண்டு போன செல்வத்தின் உடைமையாலும் அந்த அந்நிய ஜாதியார் உலகத்தில் தலையெடுத்துக் கீர்த்தி பெற்று வாழ்ந்தார்கள். உண்மையை அறியாத உலகோர்கள் கோட்டை முற்றிலுமே பலமற்றதாக இருக்க வேண்டுமென்றும் அல்லது அதைக் கைவசப்படுத்திக் கொண்ட அந்நியர் மகா வீரர்களாக இருக்க வேண்டுமென்றும் பேச ஆரம்பித்தார்கள். கோட்டைக்குள் இருந்தவர்களில் பலரும் அவ்வாறே மதி மயங்கிப் பிதற்றி வந்தார்கள்.

தெய்வானுகூலத்தால், கோட்டைக்கு உரியவர்களில் அநேகருக்குச் சுய அறிவு வந்து, பலஹீனம் இந்த இடத்தில்தான் இருக்கிறதென்று தெரிந்து கொண்டார்கள். உடனே அவர்கள் மண்சுவரைக் கற் சுவராய்க் கட்ட ஆரம்பித்தார்கள். அப்படிச் செய்ய வொட்டாமல் அவர்களைப் பலவித உபாயங்களாலும் அந்த அந்நியர்கள் தடுத்தார்கள். எனினும், அவர்கள் விடாமுயற்சியோடும், ஒற்றுமையோடும் வேலை செய்து வந்ததால் காரியசித்தி பெற்றார்கள். ஐந்து பக்கங்களும் பலப்பட்டு ஒரே கற்கோட்டையாய்ப் போகவே அது முன்னிலும் அதிகமாய் உறுதியடைந்து உலக முற்றிலும் அழிந்தாலல்லது அழியாத கோட்டையாகி விட்டது.

நண்பர்களே, இந்தக் கதையின் உட்பொருள் இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? பாரத தேசத்தாராகிய நாம், அந்தப் பஞ்ச கோணக் கோட்டை யாவோம். கற்சுவர்கள் நாலும் மேலான ஜாதிகள். மண்சுவரே பஞ்சமர் என்ற ஐந்தாம் ஜாதியாம். கோட்டையைச் சூழ்ந்திருக்கும் அகழ் சுதேசாபிமானம். பஞ்சமர்களை நாம் எவ்வளவு அநாதரவாகவும், கொடுமையாகவும் நடத்தி வருகிறோம்? மேல் குலத்தார் குடியிருக்கும் தெருக்களில் அவர்கள் குடியிருக்கக் கூடாதென்று தடுக்கிறோம். அவர்களைத் தொட்டாலே பாபம் வந்துவிடும் என்று விலகியோடிப் போகும்படி ஏவுகிறோம். விராட புருஷனுடைய அங்கமாகிய ஒரு வகுப்பாரை ஈன ஜாதியாரென்று நிராகரித்துத் தள்ளிவிடுதல் தர்மமாகுமா? ஒரே தேசத்தில் எத்தனையோ யுகங்களாய் வசித்து வரும் நமது சகோதரர்களாகிய பஞ்சமர்களை நாம் அவ்வாறு நடத்தி வந்தால் அவர்களுக்குச்

சுதேசாபிமானம் எவ்வாறு ஏற்படும்? அந்நியர்கள் அவர்களை நாம் நடத்துவதைக் காட்டிலும் மேலாக நடத்தினால் அவர்கள் அந்த அந்நியர்களுக்கு வசப்பட்டுப் போகிறார்கள்.

கடவுள் எல்லோரையும் சமமாகவே சிருஷ்டித்தார். கடவுள் முன்னிலையில் ஜாதி வித்தியாசம் நிற்குமா? நல்வினைக்கு நற்பலனும் தீவினைக்குத் தீய பலனும் சித்தித்தல் அனாதியான பிரமாணம். பஞ்சமர்களை நாம் எவ்வாறு சகிக்க முடியாத கொடுமைக்கிடமாக நடத்தினோமோ அவ்வாறே நம்மையும் அந்நியர் நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

இனியேனும், நாம் பஞ்சமரை ஆதரித்து அவர்களுக்குக் கல்வி புகட்டிச் சுசீலமான வழக்கங்களை அவர்கள் அனுசரிக்கும்படிச் செய்து, அவர்களையும் நாகரிகத்தில் நமக்குச் சமமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்து நாம் எல்லோரும் ஒற்றுமைப் பட்டால், நம்மை வெல்ல வல்லவர்கள் இவ்வுலகத்தில் யாரேனும் இருப்பார்களா?

## 2. பாம்புக் கதை

*[மனிதனைப் பற்றி ஒரு பாம்புக்கும் காக்கைக்கும் பேச்சுப் போல அமைந்துள்ள இந்தக் குட்டிக் கதை, 'சுதேசமித்திரன்'' தினசரியில், 1919-ஆம் ஆண்டு வெளியாயிற்று. இதுவரை எந்த நூலிலும் வெளியிடப் பெறாத இக் கதை "மித்திர''னிலிருந்து பெயர்த்தெழுதி இங்கு வெளியிடப் பெறுகிறது.]*

மணிமுத்தா நதியோரத்தில், ஒரு மலைக் குகையில், மணிகண்டன் என்றொரு பாம்பு வாசம் செய்தது. அங்கு ஒரு காகம் வந்தது.

காகமும் பாம்பும் சம்பாஷணை செய்யலாயின. பாம்பு சொல்லுகிறது:—"என் முகத்தில் விழிக்காதே?'' காகம் சொல்லுகிறது:—"ஏன்?''

"பாம்பு சொல்லுகிறது:—"நீ பாவி, சண்டாளன். உன் முகத்தில் விழித்தால் பாவம். ஏனென்றால், நீ மனிதருடைய உச்சிஷ்டத்தைத் தின்கிறாய், மனிதரோ கொடிய சண்டாளர், நீசர், அற்பர், அயோக்கியர், துஷ்டர்; ராக்ஷசர், பேயர், பிசாசர், அசுரர்; சர்வத்துக்கும் கீழானவர்கள். ஆதி முதல் எத்தனையோ சதுர் யுகங்களாக எங்களை—எங்கள் பாம்புச் சாதியைக் கண்டவிட மெல்லாம் அடித்துக் கொல்லுகிறார்கள். காட்டை யெல்லாம் எரித்தார்கள், கரடி, புலி, நரி, ஓநாய், சிங்கம், காண்டாமிருகம். யானை, காட்டெருது, காட்டுப் பன்றி, காட்டுப் புல்லாய், காட்டு மிளா, காட்டு மான் முதலிய கோடானு கோடி ஜந்துக்களைக் காட்டுக்குள்ளே பதுங்கிக் கிடந்து நாட்டுக்குள்ளே வராதபடி சுட்டும், அடித்தும் கொல்லுகிறார்கள். ஈக்களையும், எறும்புகளையும் பகைக்கிறார்கள்.

பசுவையும், ஆட்டையும், கோழியையும், வாத்தையும், கிளியையும், புழுவையும், மீன் கோடிகளையும், தவளைகளையும், நண்டுகளையும், குதிரையையும், பன்றியையும், குயிலையும் இன்னும் கோடானு கோடி ஜந்துக்களைக் கொல்லுகிறார்கள். அப்படிப் பட்டவர்களுடைய எச்சிலைப் போய் நீ தின்னுகிறாய்'' என்றது.

காகம் சொல்லுகிறது:—''கருணா மயமாக, சுகப் பிரம்ம ரிஷி மாதிரி சர்வ ஜீவர்களையும் ஆத்மாவைப் போலே கருதிப் பாம்புகள் வாழ்கின்றனவா? காகங்கள் வாழ்கின்றனவா? மனிதன் மேல் மாத்திரம் பழி சொல்லிப் பயனென்ன? நீ மனிதனை நடுங்கச் செய்யும் படியான விஷத்தை உன் வாயிலே அடக்கிக் கொண்டு, மனிதனை நிந்திக்கிறாயே? சீச்சி!'' என்றது.

பாம்பு சொல்லுகிறது:—''மனிதன் சிருஷ்டி கோடிகளுக் கெல்லாம் தலைமையான ஜந்து. அந்த ஜந்து பரஹிம்சையை விட்டு விடுமானால், மனித ஜாதி உண்மையாகவே ஜீவகாருண்யமும் நாகரி கமும் அடையுமானால், பிறகு சகல கோடி ஜந்துக்களும் யோக்கியதை யடையும்'' என்றது.

## 3. காக்கை இலக்கணம் கற்ற கதை

*[''காக்கை இலக்கணம் கற்ற கதை'' முதலில் புதுவையி லிருந்து வ. ரா. அவர்கள் நடத்தி வந்த ''சுதந்திரம்'' பத்திரிகையில் வெளியாயிற்று. பிறகு சென்னையில் ஸ்ரீ. தெ. ச. சொக்கலிங்கம் பிள்ளை நடத்தி வந்த ''காந்தி''மாதப் பத்திரிகையிலும் வந்தது. இதில் பாரதியாரின் நகைச் சுவை உணர்ச்சி நன்றாகப் பரிமளிப் பதைக் காண்கிறோம்.*

*பாரதியின் வசன நூல்களில் ''காக்காய் பார்லிமெண்டு'' என்று வேறொரு கதையும் வெளியாகியிருப்பதை இங்கு நினைவு படுத்துகிறோம்.]*

ஒருநாள் மாலையில் குற்றாலத்துக்கு அருகே ஒரு சிறு குன்றின் மீது ஒரு பெரிய விஸ்தாரமான ஆலமரத்தின் கிளைகளில் ஒன்றின் மேல் ஒரு காக்கை மிகவும் விசனத்துடன் உட்கார்ந்திருந்தது. அப் பொழுது அதன் மனைவி அதன் சமீபத்தில் வந்து, ''நீ எதன் பொருட்டு விசாரப்படுகிறாய்?'' என்று அன்போடு கேட்டது.

அப்போது ஆண் காகம் தன் பெண்டாட்டியிடம் சொல்லுகிறது: ''இன்று காலை எனக்கு மித மிஞ்சிய தீவனம் கிடைத்துவிட்டது. அளவறியாமல் உண்டு தீர்த்துவிட்டேன்; எனவே இப்போது வேட்டைமீது செல்லவும் மனம் கொள்ளவில்லை. சும்மா உட்கார்ந் திருப்போமென்றால் பொழுது போகவில்லை, மற்ற சிநேகித காகங்கள் இன்னும் வேட்டையிலிருந்து திரும்பி வரவில்லை. அவர்கள் வந்தால் கூட்டம்கூடி வம்பளப்பதில் பொழுது போக்கலாம். சும்மா காற்று

வழியாகச் சுற்றிப் பறந்துகொண்டு நாலு பக்கங்களிலும் நடக்கும் வேடிக்கைகளைக் கண்டு திரும்பலாம் என்று உத்தேசம் பண்ணு மிடத்து, சிறகு, கால், உடம்பு, தலை எல்லாம் ஒரே விதமான உளைச் சலும் கனமும் சகிக்க முடியவில்லை. ஜுரம் வந்துவிடும்போல் இருக்கிறது. தொண்டை ரணகளமாக இருக்கிறது. வலி பொறுக்க முடியவில்லை. பலமான ஜலதோஷம் பிடித்திருக்கிறது. நேற்றும் முந்தின நாளும், பக்கத்துக் காடுகளில் சரியான தீனி கிடைக்கவில்லை. ஆகையால் கிழக்கே ஜனவசதிகளில் நெடுந்தூரம் வரை சோற்றுக் காகப் போகும்படி நேரிட்டது. இருந்தும் மாலைவரை அரை வயிற் றுக்குக்கூட உணவு போதவில்லை. மழை, இரவும் பகலும் இடை விடாமல் பெய்தது. கோடை மழை, அதில் மிதமிஞ்சி நனைந்து போனேன். அதனாலேயே, உடம்புக்குப் பலமான ஜாட்டியம் வந்து கொண்டிருந்தது. அதனுடன் இன்று காலை அஜீர்ணமும் கூடி விட்டது. இந்த நிலையில் பொழுது போக்குவதற்கு என்ன செய் வேன் என்பதைக் குறித்து விசனப்பட்டுக் கொண்டிருந்தேன்'' என்றது.

இது கேட்டுப் பெண் காகம் சொல்லுகிறது: ''பல வருஷங்களுக்கு முன்பு நீ என்னை விவாகம் செய்துகொண்ட காலத்தில் உனக்கு இவ்வுலகிலுள்ள எல்லா இன்பங்களைக் காட்டிலும், என்னுடன் கூடி அளவளாவிக் கொண்டிருப்பதே பெரிய இன்பமாகத் தோன்று கிறதென்றும், எல்லாவிதமான பொழுதுபோக்குகளைக் காட்டிலும், என்னுடன் விளையாடிக்கொண்டிருப்பதிலேயே பொழுதுபோக்குவது தான் அதிகப் பயனுடையதும், சுவையுடையதுமாக இசைந் திருக்கிறதென்றும் நீ என்னிடத்தில் லக்ஷம் தரம் சொல்லியிருக்கிறாய். இப்போது என்னைப் புறக்கணித்துவிட்டு நான் பக்கத்தில் இருக்கும் போது பொழுது போகவில்லையென்று என்னிடத்திலேயே அழத் தொடங்கி என்னை அவமானப்படுத்துகிறாய். நான் பல நீர்ச்சுனை களில் நாள்தோறும் என் முகத்தைப் பார்த்துக்கொண்டுதான் வரு கிறேன். நமக்குள் விவாகம் நடந்த காலத்தைக் காட்டிலும் இப் போது என் முகம் அழகாகத் தெரிகிறதே அல்லாமல் குறைந்த அழ குடையதாகத் தெரியவில்லை. என்னுடைய சிநேகிதர்களிடமும் கேட்டேன். அவர்களும் நான் இப்போது முன்னைக் காட்டிலும் அதிக அழகு வாய்ந்திருப்பதாகவே சொல்லுகிறார்கள். உனக்கு மாத்திரம் என்னிடம் இப்படி வரம்பில்லாத அருவருப்பு உண்டாயிருப்பதன் காரணம் யாது?'' என்று (பெண்டாட்டி) கேட்டது,

இதைக் கேட்ட காகப் புருஷன், ''நீ முன்னைக் காட்டிலும் இப்போது அழகில் மிகுந்திருப்பதாகச் சொல்லுகிறவர்கள் யார்? உன்னுடைய பெண் மித்திரர்களோ, ஆண் மித்திரர்களோ?'' என்று வினவிற்று.

''என்னுடைய அருமைச் சகிகளே அவ்விதம் சொல்கிறார்கள். எனக்கு ஆண் சிநேகிதர்களே கிடையாது'' என்று காகப் பேடு கரைந்தது.

இதைக் கேட்டவுடன் ஆண் காகம் சிறகுகளைப் புடைத்துக் கொண்டு ஆலமரக் கிளையினின்றும் புறப்பட்டுத் தென்திசையை நோக்கிப் பறந்து சென்றது. "கா கா" என்று கத்திக்கொண்டு பின்னே வந்த பெண்டாட்டியைக் காத்து நின்று சந்தித்து ஆண் காகம், "நீ ஏன் என் பின்னே வருகிறுய்?" என்று கேட்டது. "நீ உடம்பு நோய் மிகுந்து இருக்கையில் தனியாகப் போகிருயே. இடைவழியில் உனக்கு ஒரு வேளை தலைக்கிறுக்கலுண்டாகி நீ கீழே விழுந்துவிடக்கூடும். இவ்விதமான சமயங்களில் உன் பக்கத்தில் நான் இருந்தால் அவ்வித ஆபத்துக்களைத் தடுத்துவிடக் கூடுமாத லால் நானும் உன்னுடன் கூட வருகிறேன்" என்று பெண் கர்கம் சொல்லிற்று.

"ஓகோ! என்னைக் காக்கும் பொருட்டாகவா வருகிருய்?" என்று ஆண் கேட்டது. "ஆம்" என்றது பேடு. "அப்படியானுல் நீ வர வேண்டிய அவசியமில்லை. எனக்குச் சிறிது நேரத்துக்கு முன் உடம்பிலே இருந்த கடுப்பும், வலியும், ஆயாசமும் இப்போது முற்றி லும் நீங்கிப்போய்விட்டன. நான் பரிபூர்ண ஆரோக்கியத்துடன் இருக்கிறேன். எனக்கு வழியில் மயக்கமும் தோன்ருது, கீழே விழவும் மாட்டேன், என்னை நரி தின்னவும் செய்யாது. நீ என்னைக் காப்பாற்ற வேண்டியதில்லை. தயவுசெய்து வீட்டிலேயே இரு" என்று ஆண் காகம் சொல்லிற்று.

"நீ எங்கே போகிருய்?" என்று பேடு கேட்டது, "பக்கத்திலே விக்கிரமசிங்கபுரத்துக்குப் போகிறேன்" என்று ஆண் சொல்லிற்று.

"ஹோ? விக்கிரமசிங்கபுரம் பாபநாசத்துக்குப் பக்கத்திலன்ரே இருக்கிறது? நெடுந்தூரம் ஆயிற்றே?" என்று கேட்டது பேடு.

"நான் ஓர் இமைப்பொழுதில் அங்குபோய் மீண்டும் வந்து விடுவேன். நீ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. வீட்டுக்குப் போ" என்று சொல்லி ஆண் வற்புறுத்திற்று.

"நீ அங்கே இந்தச் சமயத்தில் எதன் பொருட்டுப் போகிருய்?" என்று பேடு மீண்டும் வினவிற்று.

இதைக் கேட்ட ஆண் காகம் சொல்லுகிறது: "விக்கிரமசிங்க புரத்தில் வீர மாகாளப் புலவர் என்ருெரு கவிராயர் இருக்கிருர். அவர் இந்த நேரத்தில் தமது வீட்டுப் பெண் குழந்தைகளுக்கும் ஆண் குழந்தைகளுக்கும், தமிழில், செய்யுள் கட்டும் வழிகள் கற்றுக் கொடுக்கிருர். எனக்கு மனித பாஷை பேசத் தெரியாதேயொழிய அவர்கள் பேசுவதெல்லாம் நன்ருக அர்த்தமாகுமென்ற விஷயம் உனக்கு நன்ருகத் தெரியும். ஆகவே அவர் வீட்டுக் கூரை மேலே போய் ஏறி இருந்துகொண்டு அந்தக் கவிராயர் சொல்லும் விஷயங் களை யெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு அப்பால் தமிழ் பாஷை யில் இருப்பதுபோலவே நமது காக பாஷையில் கவிதையமைவதற் குரிய விதிகள் ஏற்படுத்தி, நமது பாஷையைக் காவியங்களும் பாட்டுக் களுமுடையதாகச் செய்யப் போகிறேன். ஸ்வதேசாபிமானமும்

ஸ்வபாஷாபிமானமுமில்லாத காகத்தை ஒரு காகமென்று சொல்லுதல் தகுமா? அதைப் பறந்து தீனி தின்று திரியும் கரும் சிறு பிணமென்று தான் சொல்லவேண்டும். இந்தக் குற்ருலத்துக் காட்டைப்போல் பரிசுத்தமும் மேன்மையும், செழிப்பும், எக்காலமும் அழியாத தன்மை யுமுடைய காடு இந்த உலகத்தில் வேறு எங்கும் கிடையாது. நமது காக பாஷையைப் போல் மாண்புயர்ந்த பாஷையும் கிடையாது. நான் பிறந்த அளவில் இந்த பாஷைக்கும் இந்தக் காட்டுக்கும் என்ருல் இயன்ற உபகாரம் செய்யுமுன் உயிர்துறப்பேருல் எனக்கு நெஞ்சு வேகாது. ஆகையால் இந்தக் காக பாஷையைக் கவிதை யுடையதாகச் செய்யும் கடமையை நிர்வகித்திருக்கிறேன்'' என்றது.

இதுகேட்ட பெண் காகம், ''ஒரு விஞடிக்கு முன்னே காக பாஷை ஒப்பில்லாத பாஷை என்று சொன்ஞய். இப்பொழுது தமிழைப் பார்த்துத் தமிழ் மொழியைத் தழுவிச் செய்யுள் சேர்ப்ப தாகிய சீர்திருத்தம் செய்யவேண்டு மென்கிருயே? எனவே தமிழைக் காட்டிலும் காக பாஷை குறைந்ததென்று அங்கீகாரம் செய்கிருயா?'' என்றது.

இதுகேட்ட ஆண் காகம், ''தமிழ் மனுஷ்ய பாஷை. அதற்குச் சமானமாக நமது பாஷை ஏற்படுதல் சாத்தியப்படுமா? இதர ஜந்துக்களெல்லாவற்றைக் காட்டிலும் நமது காக பாஷை சிறந்த தென்றன்ருே நான் சொன்னேன்? சரி, நேரமாகிவிட்டது. நான் போகவேண்டும். நீ வீட்டுக்குப் போ'' என்றது.

அப்போது பெண் காகம் சொல்லுகிறது: ''நீ இந்த விஷயத்துக் காக விக்கிரமசிங்கபுரத்துக்குப் போகவேண்டாம். என்னுடன் வீட்டுக்கு வா. நான் கற்றுக்கொடுக்கிறேன். எனக்குத் தெரியும்'' என்றது. ''உனக்கு என்ன தெரியும்?'' என்று ஆண் காகம் சற்று சினத்துடன் வினவிற்று. ''கவி பாடுவதற்குரிய விதிகள்'' என்றது பேடு. ''அவற்றை நீ அறிந்துகொண்ட தெங்ஙனம்?'' என்று ஆண் காகம் கேட்டது.

பெண் காகம் சொல்லுகிறது: ''உனக்குத் தோன்றிய எண்ணம் உனக்குத்தான் முதன் முதலில் தோன்றியதென்று நீ நினைக்கிருய் போலும். ஆனல் உண்மை அப்படியில்லை. என்னுடைய பிதாவும் இதே விருப்பமுடையவராக இருந்தார். ஒரு மனுஷ்யக் கவிராயர் தமது சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்கையிலே அவர் வீட்டுக் கூரை மேலே போய் என் பிதா தினந்தோறும் கேட்டுப் படித்து வந்தார். இப்படி ஒருநாள் தவருமல் ஆறுமாதம் சென்று வந்தார். கடைசியாக இவருக்குத் தமிழ்ச் செய்யுளின் இலக்கணம் பிடிபட்டுப் போய் விட்டது. அப்பால் என் பிதா தமிழ்ச் செய்யுள் முறைகளை யனுசரித் துக் காக பாஷையில் பாட்டுக்கள் ஆயிரம் வகைகளிலே பாடுவதற் குரிய விதிகள் ஏற்படுத்தியிருந்தார். அதையெல்லாம் நமது காக ராஜன் சந்நிதியில் அரங்கேற்றுவதற்கு முன்னதாகவே அவர் இறந்து போய்விட்டார். ஆதலால் புதிய சாஸ்திரம் எங்கள் வீட்டுக்குப்

புறம்பே வர வழியில்லாமல் போய்விட்டது. என் பிதாவுக்கு நான் ஒரு மகள்தான் பிறந்தேன். என்னைத் தவிர வேறு பெண் குழந்தையேனும், ஆண் குழந்தையேனும் ஜனிக்கவில்லை. நான் பெண் ஜன்மமாதலால் ராஜ சபையில் இந்தப் புதிய சாஸ்திரத்தைக் கொண்டுபோய், அரங்கேற்றிக் காக பாஷைக்கொரு புதிய ஒளியையும் எனக்குத் தீராத கீர்த்தியையும் ஏற்படுத்திக்கொள்ள இடமில்லாமல் தடுக்கப்பட்டிருக்கிறேன். அதை நான் உனக்குக் கற்றுக் கொடுக்க மிகவும் சம்மதமுடையவளாக இருக்கிறேன். நீ என்னிடம் கற்றுக்கொண்டு ராஜ சபையில் போய் அரங்கேற்றலாம். அதனால் உனக்கு ராஜ சபையில் மிகுந்த சன்மானமுண்டாகும். உலகத்திலும் பெரிய கீர்த்தியுண்டாகும். என்னுடன் வீட்டுக்கு வா. இன்று முதல் உனக்குத் தினந்தோறும் இரண்டு மணி நேரம் கற்பிக்கிறேன். இரண்டு மாதங்களில் ராஜாவின் சபையில் உனக்கு உயர்ந்த சன்மானங்கள் கிடைக்கும்'' என்றது.

இது கேட்ட ஆண் காகம், ''நான் குடியரசுக்கட்சியைச் சேர்ந்தவன். ராஜசபையில் வாங்கும் சன்மானங்கள் எனக்கு அவசியமில்லை!'' என்றது. ''சரி, அது வேண்டாவிட்டாலும் நீ ஆரம்பத்திலே சொல்லியபடி உன்னாலே காக பாஷைக்கு ஒரு புதிய மகிமையும் உனக்கு என்றுமழியாத கீர்த்தியும் கிடைக்குமன்றோ! அதற்காக வேனும் என்னுடன் வா, நான் உனக்குக் கவிதைத் தொழில் கற்பித்துக் கொடுக்கிறேன்'' என்றது பெண் காகம்.

அவ்விரண்டும் தம் வீட்டுக்கு—அதாவது தமது கூட்டுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருக்கையில் அவற்றின் தலைக்குமேலே சிறிது தூரத்தில் மன்மதன் பறந்து கொண்டிருந்தான். ஆணும் பெண்ணும் கூடி இருக்க விரும்புமாறு வற்புறுத்த விரும்பும் இயற்கையின் சாட்டையடி போல மேற்கு மலைச் சாரலில் மழை தூறிக்கொண்டிருந்தது.

மன்மத தேவனுக்கு இப்படிப்பட்ட பருவங்களில், இப்படிப்பட்ட பிரதேசங்களில், வேலை மூச்சை முட்டுமாதலால் அன்று மாலை அவன் சீக்கிரமாகவே தன் தூணியிலிருந்த அம்புகளில் பெரும் பகுதியைச் செலவிட்டு, தன் காதலியாகிய ரதி தேவியின் சல்லாபத்தை வேண்டித் தன் உலகத்துக்குச் சென்றுகொண்டிருந்தான். இரண்டே இரண்டு கணைகள் மாத்திரமே அவன் கூட்டில் எஞ்சியிருந்தன. அவற்றை லீலார்த்தமாக, மேலே சொல்லப்பட்ட ஆண், பெண் காகங்களின் மீது தலைக்கு ஒன்றாக அழுத்திவிட்டுப் போனான்.

கூட்டுக்குப் போகு முன்னமே ஆண் காகமும் பேடும் ஒன்றையொன்று முத்தமிட்டுக் கொஞ்சத் தொடங்கிவிட்டன. கூட்டுக்குள் நுழைந்த மாத்திரத்திலேயே காதல் வெறி வரம்பு கடந்துபோய் விட்டது. கவிதைத் தொழில் படிக்கவேண்டுமென்ற ஞாபகமே ஆண் காகத்தின் உள்ளத்தினின்றும் எடுபட்டுப் போய்விட்டது. காலை சூரியோதயம் வரை அவை மதனமான லீலா போகங்களிலே

பொழுது போக்கிக் கொண்டிருந்தன. மாலையிலே இரண்டும் கோர மான நித்திரைக்குட்பட்டு மறுநாள் காலையிலே கண்விழித்தன. சற்றே இரை தேடுமுன் அன்றைக்கும் மன்மதன் அந்த வழியே போனான். அன்றையக் கதையும் முதல்நாள் போலவே ஆயிற்று. இங்ஙனம் நெடுநாள் நடந்து வந்தது. ஆண் காகத்துக்குக் காக பாஷையில் யாப்பிலக்கணம் கற்கவேண்டுமென்பதிலிருந்த ஆவ லில்லாமலே ஒரேயடியாக மறந்துபோய்விட்டது. காகம் கவிதைத் தொழில் படிக்கவே இல்லை. மதனசாஸ்திரம் படிக்கத் தொடங்கி விட்டது.

## 4. பூலோக ரம்பை

*[பொழுது போக்கான கதைகள் எழுதுவதிலும் பாரதியார் வல்லுநர். "பூலோக ரம்பை" என்ற இக் கதையில் பழங் காலத்துக் கதைகளைப் போன்று பொழுதுபோக்கு அமிசம் மட்டு மின்றி நீதியும் இருக்கிறது.*

*இக் கதை முதல் முதலாக 1938-ஆம் ஆண்டு வெளியான "தினமணி ஆண்டு மல"ரில் பிரசுரமாயிற்று.]*

முன்னொரு காலத்தில், கலிங்க தேசத்து ராஜதானியான கடக நகரத்தில், வல்லப ராஜன் என்ற வேந்தனொருவன் அரசு செலுத்தி வந்தான். கோயில் நிதி, கல்வி நிதி, ராணுவ நிதி, விவசாய நிதி, தொழில் நிதி முதலிய மற்றெல்லா நிதிகளைக் காட்டிலும் அவ்வரசன் தாஸி நிதிக்கு அதிகத் தேர்கை ஏற்படுத்தினான். அந்த நிதிக்குத் தான் செலவும் அதிகம். வருஷத்துக்குச் சுமார் நூறு, நூற்றிருபது தாஸிகளுக்குக் குறையாமல் அந்த ராஜா விலைக்கு வாங்குவது வழக்கம். அவர்களுக்குத் தன் அந்தப்புரத்தில் தனித்தனி வசதிகள் செய்து கொடுத்தான். அவன் பட்டத்துக்கு வந்து பதினாறு வருஷங் களாயின. இதுவரை சுமார் ஆயிரத்தெண்ணூறு தாஸிகளை அவன் அந்தப்புரத்தில் சேர்த்து விட்டான்.

தசரதன் அறுபதினாயிரம் ஸ்திரீகளை மணம் புரிந்து கொண்ட தாகவும், துருக்கி சுல்தானில் பலரும், இந்தியாவில் பல நவாபுகளும், ராஜாக்கள், நிஜாம்கள், திவான்கள் முதலியோர்களும், ஆயிரக் கணக்கில் பெண்களை அந்தப்புரங்களில் சேர்த்து வைத்திருந்த தாகவும், புராணங்களிலும், சரித்திரங்களிலும், நவீன நடைகளிலும் அறிகிறோம்.

'இதென்னடா சுத்த மோசமான வேடிக்கை! ஆயிரம் பெண் டாட்டிகளை வைத்துக் கொண்டு ஒரு மனிதன் எப்படிக் குடித்தனம் பண்ணுவான்?' என்பதை நினைக்கும்போது, எனக்குப் பெரிய வியப் புண்டாகிறது.

ஒரு பெண்டாட்டியை வைத்துக் கொண்டு காலம் தள்ளுவதே பெரும்பான்மையான ஜனங்களுக்குப் பெரிய கஷ்டமாக இருக்கிறது.

அப்படியிருக்க நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் மனைவியரை ஒருவன் கட்டியாளத் துணிவு கொண்டதை எண்ணுமிடத்தே எனக்கு நகைப்பும், துயரமும் கலந்து விளைகின்றன. இது நிற்க.

ஒரு நாள், மேற்கூறிய வல்லபராஜன் கொலுவில் ஒரு கிழப் பிராமணன் இரண்டு அழகிய இளமையுடைய தாஸிப் பெண்களை அழைத்துக் கொண்டு வந்தான். இதுவரை அந்த ராஜா விலைக்கு வாங்கிய பெண்களை யெல்லாம் சாதாரண வயிரங்களுக்கும், மற்ற மணிகளுக்கும் ஒப்பிடலாமெனில் இவ்விரண்டுபெண்களையும் கீர்த்தி பெற்ற கோகினூர், 'ஒளிக்குன்று' என்ற ஜாதி வயிரத்துக் கொப்பிடலாம். இவர்களை நோக்கி அரசன் அளவில்லாத மகிழ்ச்சியடைந்தவனாய், "இவர்களுக்கு விலையென்ன சொல்லுகிறீர்?" என்று மேற்படி பிராமணனிடம் கேட்டான்.

"மூத்த பெண் மோகனாங்கிக்கு விலை ஒன்பதினாயிரம் பொன்; இளையவளாகிய லலிதாங்கிக்கு விலை பத்தாயிரம் பொன்" என்று பார்ப்பான் சொன்னான்.

இக் காலத்தில் சிலர் பல தேசத்துத் தபால் முத்திரைகள் சேகரித்து வைப்பது போல் அந்த ராஜா தாஸிகளைச் சேர்த்து வைத்துப் பழகி, அந்தத் தொழிலில் கைதேர்ந்தவனாகி விட்டபடியால், தாஸிகளுக்கு விலை நிர்ணயம் பண்ணுவதில் மகா நிபுணனாயினன். ஆதலால், இந்தப் பெண்களுடைய உண்மையான அருமையுணராமல் அந்த நாட்டுப்புறத்துப் பார்ப்பான் இத்தனை சுந்தரமான மாதருக்கு இத்தனை குறைவான விலை சொல்வதைக் கேட்டுக் களிப்பெய்தியவனாய்த் தன் காரியஸ்தனொருவன் மூலமாகப் பொக்கிஷத்தினின்றும், அந்த க்ஷணமே இருபதினாயிரம் பொன் கொண்டு வரும்படி செய்து, பிராமணன் கேட்டபடி விலை பத்தொன்பதினாயிரம் பொன்னும், அவனுக்கு இனாமாக ஆயிரம் பொன்னும் கொடுத்து, மேலே ஜோடி சால்வை, வயிரக் கடுக்கன், வயிர மோதிரம் முதலிய வரிசைகளும் கொடுத்து அந்த பிராமணனை மரியாதை பண்ணி அனுப்பி விட்டு, தாஸிப் பெண்களிருவரையும் அந்தப்புரத்திலே சேர்ப்பித்து விட்டான்.

பிறகு, அந்தப் பார்ப்பான் அரசனிடமிருந்து வாங்கிய இருபதினாயிரம் பொன்னையும் கொண்டு, தன் பிறப்பிடமாகிய நாகபுரத்திற்குச் சமீபத்திலுள்ள கிராம மொன்றுக்குத் திரும்பிப் போய், அங்கு மேற்கூறிய வேசைப் பெண்களை விலைப்படுத்தி வரும்படி தன்னிடம் ஒப்புவித்த தாய்க் கிழவியிடம், "உன் பெண்களைத் தலைக்கு மூவாயிரம் பொன் வீதம் விற்றேன். ஆறாயிரம் பொன் கிடைத்தது. அதில் ஆயிரம் பொன் எனக்கு எடுத்துக் கொண்டேன். மிச்சம் ஐயாயிரம் பொன்னை உனக்குக் கொடுக்கிறேன்" என்று பொய் சொல்லி, அவளிடம் ஐயாயிரம் பொன்னைக் கொடுத்து, மிஞ்சிய பதினையாயிரம் பொன்னையும் அமுத்திக் கொண்டான். கலிங்க நாட்டு நிலை யறியாதவளாகிய அந்தத் தாய்க் கிழவியும், தன் பெண்

களுக்கு இத்தனை உயர்ந்த விலை கொண்டு வந்த பிராமணனிடம் மிக நன்றி யுணர்வுடையவளாய், அவனுக்கு ஒரு பசுமாடும், இரண்டு பட்டுக்கரை வேஷ்டிகளும், ஒரு பொற் கிண்ணமும் தானம் பண்ணி னுள். நிற்க.

கலிங்க தேசத்தில் வல்லபராஜன் தன் அந்தப்புரத்திலுள்ள ஆயிரத்தெண்ணூற்றேசில்லறை மாதர்களைக் காட்டிலும் லலிதாங் கிக்கு அடிமையாய் விட்டதினின்றும், ராஜ்யத்தில் லலிதாங்கி இட்டதே சட்டமாய் விட்டது. இதினின்றும், அந்த வேசை மகள் பொருள் சேர்ப்பதையே பெரிய வெறியாகக் கொண்டு, ராஜ்யத்தைச் சூறுவளிக் கொள்ளையிடத் தொடங்கி விட்டாள். மந்திரி உத் யோகம் முதல், சக்கிலி உத்தியோகம் வரை ராஜ்யம் முழுவதிலும், யாருக்கு எந்த வேலை வேண்டுமாளுலும், லலிதாங்கிக்கு லஞ்சம் கொடுக்காதவரை அந்த நாட்டில் வேலை கிடைக்காது. பாடகர், நாட்டியக்காரர், வாத்யக்காரர், குஸ்தி செய்வோர், கவிராயர், நாடகக்காரர், மந்திரவாதிகள், வித்வான்கள், விகட கவிகள், கன பாடிகள், கூத்தாடிகள்—ராஜாவிடம் சன்மானம் வாங்கும் பொருட்டு யார் வந்தாலும், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சன்மானத் தொகையில் மூன்றிலொரு பங்கு லலிதாங்கிக்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டால் ஒழிய, அரண்மனையில் அவர்களுக்கு மூன்று காசுகூடக் கிடைக்க வழியில்லாமல் போய் விட்டது.

வியாபாரிகளிடமும், தொழிலாளிகளிடமும், அவள் கொள்ளை யிட்ட திரவியங்களுக்குக் கணக்கேயில்லை. மேலும், ராஜாங்கத்தின் சாமான்யத் தீர்வைப் பணத்திலும், பாதிக்குக் குறையாமல் அவள் தனக்குப் புதிய புதிய ஆபரணங்கள் பண்ணுவதில் செலவிட்டுக் கொண்டு வந்தாள். அந்த வல்லபராஜனுக்கு நீதி சிகாமணி என்ற மந்திரி ஒருவன் இருந்தான். அவன் அரசனுடைய நடைகளெல்லாம் கண்டு, மிகவும் மனம் நொந்து, பலமுறை கெஞ்சியும், இடித்துச் சொல்லியும் அரசனைச் சீர்திருத்த முயன்ருன். ஆனுல் மஹா மூடனுகிய வல்லபராஜன், தன் மந்திரியின் சற்போதனைகளைச் செவி கொடுத்துக் கேட்கவேயில்லை. இதினின்றும், அந்த மந்திரி நிராசை கொண்டவனுய்ப் பின்வருமாறு தன் மனதுக்குள்ளே யோசிக்க லானுன்: "ஆகா, இந்த அரசு நிச்சயமாகவே அழிந்து போய்விடும். அது உள்ளங் கை நெல்லிக்கனி போலவும், பசுமரத்தாணி போலவும் விளங்குகிறது. மூடனுகிய வல்லபன், நாம் எவ்வளவோ இடித் திடித்துச் சொல்லியும் கேளாமல், லலிதாங்கியின் மோக வலையில் வீழ்ந்து நாட்டைப் பாழாக்குகிருன். நாட்டிலே பஞ்சமும், பிணி களும், கொள்ளைகளும் தலைவிரி கோலமாகக் கூத்தாடுகின்றன. எந்தத் திசையிலும் நமக்குக் கடன் கொடுப்பாரில்லை. நாட்டுப் பொக்கிஷத்திலே காசென்பது லவலேசமேனும் கிடையாது. தேசத்தை லலிதாங்கி யொருத்தி அட்டை உறிஞ்சுவது போலே உறிஞ்சுகிருள். ஜனங்களைப் பஞ்சத்தின் வாயினின்று மீட்க வழியே யில்லை. சோறில்லாதவர்கள் கலகம் தொடங்குவார்கள். சென்ற

சில மாதங்களாக உள்நாட்டுப் போர் தொடங்குவதற்குரிய சூழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றன. இதுவரை வெளிப்படாத சூழ்ச்சிகள் இன்னம் எத்தனை இருக்கின்றனவோ, கடவுளுக்குத்தான் தெரியும். இந்த ராஜ்யத்தைக் கவிழ்க்கும் பொருட்டாகச் செய்யப்படும் வேறு சில சூழ்ச்சிகளைப் பற்றி நமக்கு உளவுகள் தெரிந்தாலும் நம்மால் அடக்க முடியாதபடி அவை அத்தனை வலியரால் நடத்தப்படுகின்றன. இந்த அரசனுடைய நெருங்கிய சுற்றத்தார்களிலேயே சிலர் இவனுக்கு நாசம் தேடுகிறார்கள். நாமென்ன செய்யலாம்? நாமே இந்த அரசனுக்கு முக்கிய பலமாக இருப்பதை உணர்ந்து இவனுடைய விரோதிகளிற் பலர் முதலாவது நம் உயிரைப் போக்கிவிட ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இனி, இந்த நாட்டிலிருந்தால் நமது உயிருக்குச் சேதம் விளைவது திண்ணம். இந்த நாட்டின் பல திசைகளிலும் ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாக நமக்கிழைந்து வரும் சத்துருக்கள் அனைவரிலும் அதி பயங்கரமான சத்துரு லலிதாங்கி. லலிதாங்கியின் பகை யென்றால், பிசாசு லோகம் முழுதும் பகையாவதற் கொப்பாகும். இவளுடைய கையாட்கள் எந்த இடத்தில் நம்முடைய விழிகளில் அக்னி திராவகத்தை ஊற்றுவார்களோ? எந்த இடத்தில் நம்முடைய செவிகளை விஷந்தோய்ந்த கத்தியால் அறுப்பார்களோ? எந்த நிமிஷத்தில் எங்கே நம்முடைய சிரம் துண்டிக்கப்படுமோ? எங்கே, எந்த சபையில், எந்த விருந்தில், எந்த நேரத்தில் நம்மை விலங்கிட்டுக் கொண்டு போக ஏற்பாடு செய்வாளோ?'' என்று பலவிதமாக யோசனை பண்ணி, ஓரிரண்டு தினங்களுக்குள்ளே தனக்குரிமையான நகைகளையும், பணங்களையும் எடுத்துக் கொண்டு ரகசியமாக இரவிலேயே புறப்பட்டுத் தன் குடும்பத்தாருடன் காசிக்குப் போய் விட்டான்.

காசிக்குப் போய்ச் சேர்ந்த பிறகு, தைரியமாய்த் தான் புறப்பட்டு வந்ததற்குரிய காரணங்களை யெல்லாம் விஸ்தாரமாக எழுதி வல்லப ராஜனுக்கு ஓர் ஓலை விடுத்தான். வல்லப ராஜனுக்கு மேற்படி நீதி சிகாமணி என்ற மந்திரி ஒருவனே முக்கிய பலமாக இருந்தான். அவனைத் தவிர ஒருயிர்கூட வல்லபராஜன்மீது இரக்கம் செலுத்தவில்லை. நாட்டார் அனைவரும் அவனையும் லலிதாங்கியையும் ஒழித்து விட வேண்டுமென்ற எண்ணங் கொண்டிருந்தார்கள். எனவே மந்திரி நாட்டை விட்டோடிய ஒரு வாரத்துக்குள் தேசத்தில் பெருங் கலகம் விளைந்தது. ஜனங்கள் வல்லப ராஜனை ராஜ்யத்தினின்றும் நீக்கி, அவனுடைய தாய் பாத்தியஸ்தனாகிய மற்றொருவனைப் பட்டத்துக்கு வைத்தார்கள். அப்போது வல்லப ராஜன் ஒரு வாளால் தன் கழுத்தைத் தானே அறுத்துக் கொண்டு மாய்ந்தான்.

குலத் தொழிலிலே சித்தம் இயல்பாகப் பாயும். ஆதலால், வல்லப ராஜன் மடிந்தவுடன் மோகனாங்கியும், லலிதாங்கியும் தம் தம் உடைமைகளை எடுத்துக் கொண்டு கலிங்க ராஜ்யத்தினின்றும் தப்பியோடிப் போய்ப் பிற நாடுகளுக்குச் சென்று அங்கு தம்முடைய பரம்

பரைத் தொழிலாகிய வேசைத் தொழிலையே நடத்த வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். மோகனுங்கியிடம் லட்சக்கணக் காகவும், லலிதாங்கியிடம் கோடிக்கணக்காகவும் திரவியங்க ளிருந்தன. கலிங்க நாடு பஞ்சத்தால் அழிய, அதன் செல்வத்தின் பெரும் பகுதியை இவ்விரண்டு தாசிகளும் வாரிக் கொண்டு போயினர். மோகனுங்கி காசிக்குப் போய், அங்கு அரிச்சந்திர மகா ராஜன் சந்திரமதியை விலை கூறிய கடைத் தெருவிலே ஒரு பெரிய மாளிகை கட்டிக் கொண்டு வேசைத் தொழில் புரிந்து வந்தாள்.

## அமிர்த நகரில் லலிதாங்கி

தெற்குக் கடலிடையே சந்திரோதயத் தீவு என்றொரு இடமிருக் கிறது. அதற்கு இக்காலத்தில் மலேய பாஷையில் பூலோ பூலாங் என்று பெயர் சொல்லுகிருர்கள். இந்தத் தீவின் ராஜதானிக்கு அக் காலத்தில் அமிர்த நகரம் என்று பெயர். அங்கு நமது கதை நடை பெற்ற காலத்தில், சந்திரவர்மன் என்ற தமிழ் வேந்தன் அரசு செலுத்தி வந்தான். சுற்றி ஆயிரம் தீவுகள் அவனுடைய ஆட்சியின் கீழ் இருந்தன. எல்லாப் பக்கத்து மன்னர்களிடமிருந்தும் அவனுக்குக் காணிக்கைகள் வந்தன. தென்கடல் தலைவன் விருதுடன் வாழ்ந் தான். பூமண்டலத்தில் வியாபாரக் கப்பல் வீதிக்கு அவனே தனிப் பெரும் காவலனுய் விளங்கினுன்.

அக்காலத்தில் கலிங்க ராஜ்யத்தினின்றும் கப்பலேறி, லலிதாங்கி நேரே சந்திரோதயத் தீவில் அமிர்த நகரத்தில் வந்திறங்கினுள். கப்பலை விட்டிறங்கி அந்நகரத்தில் ஒரு தர்மசாலைக்குப் போய் அங்கே தனக்கென அறைகள் வாங்கிக் கொண்டு குடி புகுந்தாள். நகரத்தின் விசேஷங்களையும், வியாபாரப் பாங்குகளையும், குணம், நடை முதலிய விவரங்களையும் பற்றி அறிய அந்த தர்மசாலையிலேயே சிறிது காலம் தங்கியிருந்தாள். அப்பால், மாதம் முந்நூறு பொன் சம்பளம் கொடுத்து விதுரப் பிள்ளை என்ற வேளாளன் ஒருவனைத் தனக்குக் காரியஸ்தனுக நியமனம் செய்தாள். அப்பால் அவள் விதுரனைக் கொண்டு சில உயர்ந்த வியாபாரிகளைத் தருவித்துத் தன்னிடமிருந்த நகைகள், பொன், மணி, ரொக்க நாணயம், எல்லாவற்றுக்கும் மொத்த மதிப்புப் போடுவித்தாள். கலிங்க நாட்டிலிருந்து அவள் கொள்ளையிட்டுக் கொண்டு வந்த செல்வத்துக்கு மொத்த மதிப்பு முந்நூறு கோடிப் பொன் விழுந்தது.

முதலாவது ஐந்து கோடிப் பொன் செலவிட்டு நகர் நடுவிலே அந்நாட்டரசனுடைய மாளிகையைக் காட்டிலும் மிகவும் அற்புத மான காட்சியை யுடைய பெரிய மாளிகை யொன்று, கூட கோபுரங் கள், ஏழு விஸ்தாரமுள்ள மாடிகள், அதாவது உப்பரிகைகளுடன் கட்டுவித்தாள். அந்த மாளிகை கட்டும் பொருட்டு, யவன தேசத்தி னின்றும் கைதேர்ந்த சிற்ப சாஸ்திரி யொருவனை வரவழைத்தாள். மாளிகை முழுவதும் பளிங்கு வேலை. உச்சத்திலே ஏழாம் உப்பரிகை

யிலே யிருந்த லீலா மண்டபத்தில் மாத்திரம் விதானத்திலும், தூண்களிலும், பொன்னும், விலையுயர்ந்த ரத்தினங்களும் இழைக்கப்பட்டிருந்தன.

எல்லா உப்பரிகைகளிலும், பல லீலா மண்டபங்களும், விருந்து கூடங்களும், நடனசாலைகளும், சித்திரசாலைகளும் மிகவும் அழகாக நிருமிக்கப்பட்டிருந்தன. மாளிகையைச் சுற்றிச் சதுரமாக மிக விஸ்தாரமானதொரு பூஞ்சோலை செய்வித்தாள். அதில் பல நீரோடைகளும், சுனைகளும், பளிங்குத் தடாகங்களும், அருவிகளும், புஷ்ப மாரிபோல் நீர் தூவும் பொறிகளும் சமைப்பித்தாள். உலக முழுவதிலுமுள்ள பல பல தேசங்களினின்றும், இனிய கனி தரும் மரங்களும், அருமையான மருந்துப் பூண்டுகளும், மூலிகைகளும், பூஞ்செடிகளும், கொடிகளும் வரவழைத்து அத்தோட்டத்தில் வைத்தாள். அது தேவேந்திரனுடைய நந்தவனத்தைப் போல் விளங்கிற்று. அதற்கு நந்தவனம் என்ற பெயருமிட்டாள்.

அப்பால் லலிதாங்கி தன் காரியஸ்தனாகிய விதுரனை அழைத்து, "இந்தத் தீவு முழுமையிலும் தனக்கு நிகரில்லாத திறமையுடைய வைத்தியன் ஒருவனை மாதம் ஐந்நூறு பொன் சம்பளத்தில் நம்மிடம் வேலை பார்க்கும்படித் திட்டம் பண்ணிக் கொண்டு வா" என்றாள்.

விதுரன் அங்ஙனமே, சாக்ஷாத் தன்வந்திரி முனிவருக்கு நிகரான லங்கர்புத்திரன் என்னும் மருத்துவனைத் திட்டம் பண்ணிக் கொடுத்தான்.

பிறகு, லலிதாங்கி விதுரனை நோக்கி, "ஆளுக்குப் பதினாறு பொன் மாதச் சம்பளமாக, மாளிகை வாயில் காப்பதற்குப் பன்னிரண்டு வாட் சேவகரைத் திட்டம் பண்ணிக் கொடு" என்றாள்.

அவனும் அங்ஙனமே, சுத்த வீரராகிய பன்னிரண்டு காவலாளர் திட்டம் பண்ணினான்.

அதன் பின் லலிதாங்கி, விதுரனை நோக்கி, "இருபது தாஸிப் பெண்களைத் தயார் செய்துகொண்டு வா. எல்லோருக்கும் ஏறக்குறைய பதினான்கு அல்லது பதினைந்து மட்டத்தில் சம வயதாக இருக்க வேண்டும். ஏறக்குறைய சமான உயரமும் அகலமும் உடையோராய் ஒரே சாயலுடையோராக இருக்க வேண்டும். ஒவ்வொருத்தியும் அருமையான அழகுடையவளாகவும், ஸங்கீதம், பரதம், எழுத்துப் படிப்பு முதலியவற்றில் மிக்க தேர்ச்சி யுடையவளாகவும் இருக்க வேண்டும். தலைக்கு நூறு பொன் சம்பளம் கொடுப்போம்" என்றாள்.

இது கேட்டு விதுரனும் அவள் சொல்லிய லட்சணங்களெல்லாம் பொருந்திய இருபது தாஸிப் பெண்களைத் தயார் செய்து கொடுத்தான்.

அப்பால் லலிதாங்கி ஒரு பொற்பலகையில் வயிர எழுத்துக்களாலே பின் வருமாறு விளம்பரம் பெரியதாக எழுதுவித்து, வீதியிலே

போவோருக்கெல்லாம் நன்ருகத் தெரியும்படி தன் மாளிகையின் வெளிப்புறத்திலே தொங்கவிட்டாள்:

### பூலோக ரம்பை விளம்பரம்

"கலிங்க தேசத்து ராணியும், பூமண்டல முழுமைக்கும் அழகிலே நிகரற்றவளுமாகிய ஸ்ரீமதி லலிதாங்கி தேவி இந்த மாளிகையில் வந்து தாஸியாக வசிக்கிருள். இங்கே இந்திர போகங்களுக் கிணையான பல வகை இன்பங்கள் பெறலாம். இரவொன்றுக்குக் கூலி ஆயிரம் பொன்."

இங்ஙனம் விளம்பரம் நாட்டித் தன் குலத்துக்குரிய வியாபாரம் தொடங்கிஞள். அவளுடைய செல்வம் நாளுக்கு நாள் காட்டுத் தீயைப் போல் மிகுதிப்பட்டுக் கொண்டு வந்தது.

### தாஸி வீட்டில் சொக்கநாதன் செட்டி

அப்போது, தமிழ் நாட்டிலிருந்து சந்திரோதயத் தீவுக்குப் போய் வியாபாரம் செய்துகொண்டிருந்த சொக்கநாதன் செட்டி என்ற வைசிய ஞெருவன் லலிதாங்கியின் வீட்டுக்குப் போக வேண்டு மென்று நிச்சயித்து, ஒரு நாள் மாலையில் ஆயிரம் பொன் முடிப்புக் கட்டி யெடுத்துக் கொண்டு, மிகவும் டம்பமாக உடை உடுத்திக் கொண்டு, அதிக படாடோபமான குதிரை வண்டியி லேறிப் போய், அவள் மாளிகையின் வாயிலுக்கெதிரே இறங்கிஞன். அங்கே காவல் காத்துக்கொண்டு நின்ற வாட் சேவகன் ஒருவனை நோக்கிச் செட்டி, "ஆரங்கே? சேவகா, இப்படி வா. உள்ளே லலிதாங்கியிடம் போய்ச் சொக்கநாதன் செட்டியார் விஜயம் செய்திருப்பதாகத் தெரிவி" என்ருன்.

சேவகன் உள்ளே போய் விதுரப் பிள்ளையிடம் தெரிவித்தான். உடனே காரியஸ்தஞகிய விதுரப் பிள்ளை வெளியிலே வந்து செட்டியை மிகவும் மரியாதையுடன் மாளிகைக்குள் அழைத்துச் சென்ருன். செட்டியிடம் ஆயிரம் பொன்னை வாங்கிப் பணப் பெட்டியில் வைத்துக் கொண்டான். லலிதாங்கியின் உருவம் மிகவும் அழகாகவும், நுட்பமாகவும் வரையப்பட்டிருந்த மோதிர மொன்றை செட்டியிடம் கொடுத்தான்.

"இது எனக்கு இனமா?" என்று செட்டி கேட்டான். அதற்கு விதுரன், "அப்படியன்று செட்டியாரே. இந்த மோதிரம் தங்களிட மிருந்து நான் ஆயிரம் பொன் பெற்றுக் கொண்டதின் அடையாளம். இதை உள்ளே ஒவ்வொரு அறையிலும், காண்பிக்க வேண்டும்" என்று சொல்லி விட்டு ஒரு கைமணியைக் குலுக்கிஞன். அந்த வெள்ளி மணியின் ஒலி சன்னமாக இருந்தாலும், அந்த மாளிகை முற்றிலும் கேட்கும். அந்த ஒலியைக் கேட்ட மாத்திரத்திலே, லலிதாங்கியின் இருபது சேடிகளில் ஒருத்தியான ரமா என்பவள்

வந்து தோன்றினாள். இவள் செம்பட்டுப் புடவையும், சிவந்த பட்டு ரவிக்கையும், மாணிக்க பூஷணங்களும், செந்நிற மலர்களும் அணிந்தவளாய், அக்னி தேவனுடைய சக்தி போல வந்து நின்றாள்.

அவளைக் கண்டவுடனே சொக்கநாதன் செட்டி இவள் தான் லலிதாங்கி என்ற தவறெண்ணத்தால், "அடி லலிதாங்கி" என்று பெருங் குரலிட்டுக் கூவி, அவள் மேலே போய் விழுந்தான். விதுரன் 'கூ கூ' என்று கத்தினான். அந்தப் பெண் கலீரென நகைத்தாள். செட்டி ஆந்தையைப் போல் விழித்தான்.

அப்போது விதுரன் சொல்லுகிறான்: "பொறும், ஐயா, செட்டியாரே, பொறுத்திரும். இவள் லலிதாங்கி யில்லை. இவளுடைய பெயர் ரமா. இவள் சேடிகளில் ஒருத்தி. இவளுடன் உள்ளே போம். மேல் நடக்க வேண்டிய விஷயங்களை இவள் தெரிவிப்பாள்" என்றான்.

இதைக் கேட்டுச் செட்டி, "ஏன், லலிதாங்கி இந்த ஊரில் இருக்கிறாளோ? இல்லையோ?" என்று வினவினான்.

ரமா மீண்டும் நகைத்தாள். அப்போது விதுரன், "பயப்படாதேயும், செட்டியாரே. லலிதாங்கி இங்கே தானிருக்கிறாள். ஆனால், அவளை நீர் பார்க்கு முன்பு பல காரியங்கள் நடந்தாக வேண்டும். நேரத்தை வீண் போக்காதேயும். அவளுடனே போம். நடக்க வேண்டிய காரியங்களை யெல்லாம் அவள் அறிவிப்பாள்" என்றான்.

நல்லதென்று சொல்லி சொக்கநாதன் செட்டி ரமாவுடன் உள்ளே சென்றான். ரமா இவனைப் பல அறைகளின் வழியே கடத்திச் சென்று, கடைசியில் ஸ்நான அறையிலே கொண்டு போய்ச் சேர்த்தாள். அங்கு பொன்னால் செய்த ஒரு பெரிய கை மணியை எடுத்துக் குலுக்கினாள்.

உடனே, இரண்டு புதிய பெண்கள் வந்தனர். இவ்விருவரும் பச்சைப் பட்டு உடுத்திப் பச்சை ரவிக்கையும், பச்சை அணிகளும், பசுந்துழாய் மருக்கொழுந்தும் புனைந்திருந்தனர். இவர்களைப் பார்த்த உடனே செட்டி இவ்விருவரில் யார் லலிதாங்கி என்று தெரிந்து கொள்ள முடியாதவனாய், ரமாவை நோக்கி, "லலி, லலி, லலிதாங்கி யார்?" என்று கேட்டுப் பைத்தியம் பிடித்த ஆந்தையைப் போல் விழித்தான். அப்போது ரமா, "உளறுதேயும். இவ்விருவரும் என்னைப் போல சேடிகள். விதுரன் கொடுத்த மோதிரத்தை இவர்களிடம் காண்பியும்" என்றாள். செட்டி மோதிரத்தைக் காண்பித்தான். அவ்விருவரும் அதைக் கண்டு சலாம் செய்து விட்டு, "ஸ்நானம் செய்ய வாருங்கள்" என்றனர். இதைக் கேட்டவுடன் செட்டி அவ்விருவரையும் நோக்கி, "உங்கள் பெயரென்ன?" என்று வினவினான். அவ்விருவரில் ஒருத்தி "என் பெயர் மரகதவல்லி, இவள் பெயர் மரகதமாலை" என்றாள். "அட, பெயருக்கேற்ற அலங்

காரமா?'' என்று சொல்லி செட்டி வியப் பெய்தினன். ரமா அந்த அறையினின்றும் வெளியேறிச் சென்ருள். பச்சை மகளிர் இருவரும் மறுபடியும் செட்டியை நோக்கி, "ஸ்நானத்துக்கு வாரும்'' என்று கூப்பிட்டார்கள்.

அப்போது செட்டி, "ரமா, மரகதவல்லி, மரகத மாலே; ரமா, மரகதவல்லி, மரகதமாலே'' என்று அந்தச் சேடிகளின் பெயரை எல்லாம் உருப்போட்டுக் கொண்டிருந்தான். பின்னர் தன்னுடைய நண்பர்களிடம், தான் லலிதாங்கி வீட்டுக்குப் போன வைபவங்களைச் சொல்லும்படி நேர்ந்தால், அப்போது சேடிகளின் பெயர்கள் மறந்து போகாமலிருக்க வேண்டுமென்பதை உத்தேசித்து செட்டி அங்ஙனம் ஜபம் பண்ணினன்.

"ஸ்நானம் பண்ண வருவீரா, மாட்டீரா?'' என்று பச்சை மகளிர் செட்டியை மறுபடி கேட்டார்கள்.

அப்போது செட்டி மகாகோபத்துடன், "அவள் ஊரில் இருக்கிருளா, இல்லையா, அந்த லலிதாங்கி? ஒரே வார்த்தையில் உண்மையைச் சொல்லி விடுங்கள். நான் வந்த நோக்கமென்ன? எனக்காவது ஸ்நானம் பண்ணி வைப்பதாவது? எங்கள் வீட்டிலே கிணறில்லையா? தொட்டியில்லையா? எனக்கு வெந்நீர் போட்டுக் கொடுக்கப் பெண்டாட்டி யில்லையா?......'' என்ருன்.

அந்தப் பச்சை மகளிர் இருவரும் கணீரென்று நகைத்தார்கள். "ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று சொக்கநாதன் செட்டி வினவினன். அதற்கு மரகதவல்லி, "வீட்டில் பெண்டாட்டிக்கு வெந்நீர் போட்டுக் கொடுக்கும் உத்தியோகம்தான் வைத்திருக்கிறீர் போலும். நீர் இப்படி எங்களிடம் சொல்வதை உம்முடைய மனைவி கேட்டால் உம்மை என்ன பாடு படுத்துவாளோ என்றெண்ணிச் சிரிக்கிருேம்'' என்று சொன்னுள்.

"சரி, அதெல்லாம் போகட்டும். நான் இப்போது ஸ்நானம் செய்ய மாட்டேன். என்னை நேரே லலிதாங்கி யிருக்குமிடத்திலே கொண்டு விடுங்கள்'' என்ருன் செட்டி. பச்சை மகளிருவரும் மறுபடி திசைகளிலெல்லாம் எதிரொலி யெழும்படி நகைத்தார்கள். செட்டி மகா கோபத்துடன், "என்ன, நான் பேசுவது உங்களுக்குக் கேலியாய் விட்டதா? என்னை யாரென்று நினைக்கிறீர்கள்? என் பெயர் சொக்கநாதன் செட்டியார். எங்கள் சிறிய தகப்பனுருடைய மைத்துனராகிய பெரியண்ண செட்டியாருடைய மாமனுருக்குத் தம்பி தான் கோடிக்கரையில் கோடீசுரராக இருக்கும், ஆநா, ஆவந்நா. ஆண்டியப்பச் செட்டியார். என்னை இந்த அமிர்த நகரத்துக் கடைத் தெருவில் அறியாதவர் யாருமில்லை. பணம் வட்டிக்கு விடுவது நம்முடைய வியாபாரம். அதிலே நமக்கு கன லாபம். அப்படிப்பட்ட நானுகிய சொக்கநாதன் செட்டியார் பேசிக் கொண்டிருக்கையிலே, நீங்கள் மூடத்தனமாக நகைக்கிறீர்களே,

நான் பணம் கொடுக்கவில்லையா? இதோ பாருங்கள்! மோதிர அடையாளம். என்னை லலிதாங்கி இருக்குமிடத்தில் கொண்டு விடுங்கள். எனக்கு இப்போது ஸ்நானம் அவசியமில்லை'' என்று செட்டி ஒரே சாதனையாகச் சாதித்தான். அந்தப் பெண்கள் மறுமொழி சொல்லாமல் நின்றார்கள். அப்போது செட்டி, ''என்ன மறுமொழி சொல்லாமல் நிற்கிறீர்கள்? இதிலெல்லாம் ஏதோ ஒரு மாயம் இருக்கத்தான் செய்கிறது. ஏதோ ஏமாற்று, ஏதோ சூது, ஏதோ வஞ்சனையிருக்கிறது. லலிதாங்கியை உடனே எனக்குக் காட்டுங்கள் அல்லது மறுபடி விதுரப் பிள்ளை இருக்குமிடத்திலே என்னைக் கொண்டு விடுங்கள். என் பணத்தைத் திரும்ப வாங்கிக் கொண்டு வீடு போய்ச் சேர்கிறேன். ஐயோ, அருமையான பணம், மிகவும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது. ஆயிரம் பொன், ஆயிரம் பொன், ஆயிரம் பொன்! ஆயிரம் பொன் கொடுத்து நான் இங்கே ஸ்நானம் பண்ணவா வந்தேன்!'' என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

அப்போது மரகதமாலை சொல்லுகிறாள்: ''செட்டியாரே, காலத்தை வீணாகக் கழிக்கிறீர். இப்படி வீண் பேச்சில் நேரம் போக்கிக் கொண்டிருந்தால், கடைசியாக இன்றிரவு நீர் லலிதாங்கியைப் பார்ப்பதே துர்லபமாய் விடும். இங்கு வந்தால் இவ்விடத்து விதிகளுக்கெல்லாம் உட்பட்டுத் தீர வேண்டும். இவ் விதிகள் எவர் பொருட்டாகவும் மாற்றப்பட மாட்டா. முதலாவது இங்கே ஸ்நானம் பண்ண வேண்டும். அப்பால் இரண்டாம் மாடிக்குப் போய் போஜனம் முடித்துக் கொள்ள வேண்டும். மூன்றாம் மாடியிலே புதிய வஸ்திரங்கள் காண்பிக்கப்படும். அவற்றுள் இஷ்டமானதைத் தரித்துக் கொள்ள வேண்டும். நான்காம் மாடியில் சந்தனம், தாம்பூலம், சுகந்தங்கள் முதலிய உபசாரங்கள் நடக்கும். ஐந்தாம் உப்பரிகையிலே நாட்டியம், சங்கீதம் இவற்றை ரஸித்தின்புற வேண்டும். ஆறாம் உப்பரிகையில் அரண்மனை வைத்தியர் உம்முடைய தேக ஸ்திதியைப் பரிசோதனை செய்து தக்க மருந்துகள் கொடுப்பார். ஏழாம் உப்பரிகையிலே லலிதாங்கியைக் காணலாம். இரவில் மூன்று ஜாமங்களையும் ஆறு உப்பரிகைகளில் கழித்துக் கொண்டு நான்காம் ஜாமத் தொடக்கத்திலே தான் லலிதாங்கி இருக்குமிடத்தைப் போய்ச் சேரலாம். இவ்விடத்து விதிகளை ஹரிஹர பிரம்மாதிகளுக்குக் கூட மாற்றுவதில்லை. வாயை மூடிக் கொண்டு நடப்பதையெல்லாம் கண்டு சுகிக்க வேண்டும்'' என்றாள். ''தடியைக் கொண்டு அடித்தாலோ?'' என்று செட்டி கேட்டான். ''படவேண்டும்'' என்று மரகதவல்லி சொன்னாள்.

இத்தனைக் கப்பால் செட்டி ஸ்நானம் பண்ணுவதாக ஒப்புக் கொண்டான். வேஷ்டியை அவிழ்த்து வைத்து, அறையில் ஒரு சிறிய துணியைக் கட்டிக் கொண்டு ஒரு பலகையின் மேல் உட்காரச் சொன்னார்கள். ''முருகன் துணை'' என்று சொல்லிச் செட்டி பலகை மீதேறி உட்கார்ந்து கொண்டான்.

மரகதவல்லி செட்டி தலையில் எண்ணெய் வைத்தாள். "எண்ணெய்க் குளியா?" என்று சொக்கநாதன் செட்டி கேட்டான். "ஆம்" என்றாள் மரகதவல்லி. செட்டி பெருமூச்செறிந்தான். ஒரு மணிநேரம் பலவிதமான சம்பாஷணைகள் செய்து, செட்டி ஸ்நானம் செய்து முடித்தான். பிறகு போஜனத்துக்குச் சென்றான். அங்கு நளபாகமென்றால் சாட்சாத் நளபாகமாக ஆறு விதச் சுவைகளிலும் சுமார் நூறு விதப் பக்குவங்களும், பட்சணங்களும் செய்து வைக்கப்பட்டிருந்தன.

செட்டி இத்தனை பக்குவங்களை இதுவரை எப்போதும் உண்டது கிடையாது. கண்ணால் கண்டதில்லை. காதால் கேட்டதில்லை. கற்பனையால் எட்டியதுமில்லை. எனவே இரண்டாம் உப்பரிகையிலும் நெடும்பொழுதைக் கழித்துவிட்டான். சமையலின் ருசியிலும், பரிமாற வந்த புதிய பெண்களாகிய நீல லோசனி என்பவளும், நீலமணி என்பவளும், நீலப்பட்டுடுத்தி, நீல அணி தரித்து, நீலப் பொட்டிட்டு, நீல மலர் சூடி நின்ற அழகிலும் மயங்கிப்போய்ச் செட்டி பொழுது போவதுகூடக் கவனியாமல் இருந்துவிட்டான். இவர்களுடைய பெயர்களையும் செட்டி விசாரித்துக்கொண்டான். போஜனம் முடிந்த உடனே வஜ்ரரேகை, வஜ்ராங்கி என்று இரண்டு புதிய மாதர் வந்து தோன்றினர். இவர்கள் முழுமையும் வெள்ளையிலே அலங்காரம் பண்ணிக்கொண்டு வந்தனர். செட்டி இவர்களுடைய பெயர்களையும் விசாரித்து வைத்துக்கொண்டான். இவர்கள் அவனை மூன்றாம் உப்பரிகைக்கு அழைத்துச் சென்றார்கள். போகும் வழியில் செட்டி, "ரமா, மரகதவல்லி, மரகதமாலை, நீலலோசனி, நீலமணி, வஜ்ரரேகை, வஜ்ராங்கி; ரமா, ரமா, மரகதவல்லி, மரகத வல்லி, மரகதமாலை, மரகதமாலை, நீலலோசனி, நீலலோசனி, நீலமணி, நிலமணி, வஜ்ரரேகை, வஜ்ரரேகை, வஜ்ராங்கி, வஜ்ராங்கி, ரமா, ரமா, ரமா......" என்று ஜபம் பண்ணிக்கொண்டு போனான்.

மூன்றாம் மாடியிலே பட்டுக்களிலும் ஜரிகைகளிலும் ரத்தினங்களிழைத்தனவும், பூக்கள் சித்திரித்தனவுமான வேஷ்டிகள், உத்தரீயங்கள், பாகைகள், நிஜார்கள், சட்டைகள், துண்டுகள், பதினாயிரமென்றால் பதினாயிரம் விதம். ஒன்றைக் காட்டிலும் ஒன்று கண்ணைப் பறிக்கும்படியான அழகுடையதாய், வரிசை வரிசையாக வெள்ளிக் கம்பிகளால் செய்த கொடிகளின்மீது தொங்க விட்டிருந்தன.

திரும்பிப் பார்த்த பக்கமெல்லாம் நிலைக்கண்ணாடி. அந்த நிலைக் கண்ணாடிகளை நிறுத்தியிருந்தமாதிரியில் இந்த வஸ்திரங்களின் பிரதி பிம்பங்கள் ஒன்று, பத்து, நூறாகத் தெரிந்தன.

செட்டி போய்ப் பார்த்தான். அவனுக்கு மூர்ச்சைபோடத் தெரிந்தது. மயங்கிப் போய்விட்டான். மயங்கித் தேடித் தேடிப் பார்த்து ஒரு பாகை மிகவும் அழகியதென்று கருதித் தலையில் அணிவான். பிறகு அதோ; அந்த மூலையில் மற்றொன்று, இதைக் காட்டிலும் அழகாகத் தோன்றும். தூரத்துப் பார்வை கண்ணுக்கழகு.

அங்கே போய் அதையெடுத்து வைப்பான். பிறகு மற்றென்று அதைக் காட்டிலும் அழகாகத் தென்படும். நிஜார், சட்டை, கைத் துண்டு எல்லாம் இப்படியே. நெடுநேரம் போட்டுப் போட்டு மாற்றிய பின் கடைசியாகச் செட்டி ஒரு பால் வெளுத்த சரிகை வேஷ்டி, வஜ்ரமணிகளிழைத்த அங்கி, பொன் மலர்கள் உத்தரீயம், மாணிக்கச் சரங்கள் தொங்கவிட்ட மஸ்லின் தலைப்பாகை இத்தனையும் தரித்துக் கொண்டான்.

"உடைகள் உடுத்தாய் விட்டதா?" என்று வஜ்ரரேகை கேட்டாள். "ஆயிற்று" என்றான் செட்டி.

அப்பால், அங்கிருந்து அவனை அடுத்த தாம்பூலாதிகள் வழங்கும் மாடிக்குக் கொண்டு செல்லும் பொருட்டாக, சுவர்ணம் பாள், சுவர்ணமாலை என்ற புதிய சேடிகள் இருவர் வந்தனர். செட்டி இவர்களுடைய பெயரையும் கேட்டுத் தெரிந்துகொண்டு உருப்போட்டு உருப்போட்டு நன்றாக மனத்தில் பதித்துக் கொண்டான்.

இதற்குள்ளே பொழுது விடிந்துவிட்டது. அவ்விரண்டு பெண் களும் செட்டியை நான்காம் உப்பரிகைக்கு அழைத்துக்கொண்டு போகாமல் கீழே அழைத்துக்கொண்டு போய் விதுரப் பிள்ளையிருந்த இடத்தில் கொண்டுவிட்டார்கள். போகும் வழியில் செட்டி, "ஏன் என்னை நான்காம் மாடிக்குக் கொண்டுபோகாமல் கீழே அழைத்துச் செல்லுகிறீர்களே, விஷயமென்ன?" என்று கேட்டான்.

"பொழுது விடிந்துவிட்டது. இனி இரவில்தான் வரலாம்" என்று ஸுவர்ணமாலை சொன்னாள்.

"இன்றிரவு நான் லலிதாங்கியைப் பார்க்க முடியாதோ?" என்று செட்டி கேட்டான்.

"இன்றிரவு பொழுதுதான் விடிந்துவிட்டதே, நேற்றிரவு என்று சொல்லும். இப்போது வீட்டுக்குப்போய் மறுபடி இன்றைக்கு இரவில் வரலாம்" என்றாள் ஸுவர்ணமாலை. "பணம்?" என்று செட்டி கேட்டான்.

"அதெல்லாம் விதுரப் பிள்ளையிடம் கேட்டுக்கொள்ளும்" என்று ஸுவர்ணமாலை சொன்னாள்.

விதுரனிடம் வந்தவுடன், புதிய உடைகளைக் களைந்து விட்டுச் செட்டிக்கு அவன் அணிந்துகொண்டுவந்த அவனுடைய சொந்த உடைகளைக் கொடுத்தனர். "என் பணத்தைத் திரும்பக் கொடும்" என்று விதுரனிடம் கேட்டான். விதுரன் ஸுவர்ணமாலையை நோக்கி, "என்ன விஷயம்?" என்று விசாரித்தான். அவள் நடந்த வற்றையெல்லாம் சொல்ல, செட்டி ஸ்நானமண்டபத்திலும், போஜன சாலையிலும், வஸ்திரசாலையிலும் வீணாக நேரத்தைக் கடத்திக்கொண் டிருந்தானென்றும், அதற்குள் பொழுது விடிந்து விட்டதென்றும், ஆதலால், அவன் லலிதாங்கியைப் பார்க்க இடமில்லாமல் போய் விட்டதென்றும் தெரிவித்தாள்.

இதைக் கேட்டு விதுரன், "நேற்றிரவு உம்முடைய பிழையால் லலிதாங்கியைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. இன்று மறுபடியும் ஆயிரம் பொன் கொண்டு வாரும்" என்றான்.

செட்டி பணம் வேண்டுமென்று கட்டாயப்படுத்திக் கூச்சல் போடத் தொடங்கினான். அப்போது விதுரன் வாட்சேவகரை அழைத்தான்.

ஆறு சேவகர்கள் உருவிய கத்தியுடன் வந்து நின்றார்கள். அவர்களைக் கண்டவுடன் செட்டி புத்தி தெளிந்து ஒரு வார்த்தையும் பேசாமல் வீடு வந்து சேர்ந்தான்.

மறு நாள் செட்டி, மறுபடியும் ஆயிரம் பொன் எடுத்துக் கொண்டு லலிதாங்கியின் வீட்டுக்குப் போனான். "இன்றைக்கு நாம் யாரிடத்திலும் அனாவசிய வார்த்தை பேசக்கூடாது. மௌனமாக மூன்று ஜாமங்களையும் கழித்து, நான்காம் ஜாமத்தில் அவசியம் லலிதாங்கியைப் பார்த்தே தீரவேண்டும்" என்று செட்டி நிச்சயம் பண்ணிக்கொண்டு போனான்.

ஆனால், நேற்றைப்போலவே எண்ணெய் ஸ்நான கட்டத்துக்குப் போனவுடன் கலகந் தொடங்கிவிட்டது. "நேற்றுத்தான் எண்ணெய் ஸ்நானம் பண்ணியாய்விட்டதே. இன்று வெறுமே குளித்தால் போதாதா? சேர்ந்தபடியாக இரவு தோறும் எண்ணெய் குளித்தால் உடம்புக்காகுமா?" என்று செட்டி வாதாடினான்.

அந்தப் பெண்கள் இணங்கவில்லை. செட்டிக்குக் கோபம் வந்தது. அவர்கள் சிரித்தார்கள். மற்றதெல்லாம் நேற்றுக்கதை மாதிரிதான். செட்டி போஜனாதிகளைக் கண்டவுடன் மயங்கிப் போய் பொழுது கழிவதுணராமல் தாமஸப்பட்டது முதல், விதுரனிடம் சண்டை போட்டது, விதுரன் வாட்சேவகரையழைத்தது என்ற கட்டம் வரை முதல்நாள் மாதிரியாகவே ஆயிற்று. லலிதாங்கியின் தரிசனம் கிடைக்கவில்லை.

மூன்றும் நாள் காலையில் சொக்கநாதன் செட்டி கடையில் மாதாந்தரக் கணக்கு வரவு—செலவு பார்த்தார்கள். பெட்டியில் இரண்டாயிரம் பொன் குறைகிறதே, அதை எந்தக் கணக்கில் எழுதுவதென்று செட்டியை நோக்கி குமாஸ்தா கேட்டான்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் செட்டியின் கண்களிலிருந்து ஜலம் தாரை தாரையாகக் கொட்டத் தொடங்கிற்று. தன்னை மறந்து வாய்விட்டு, "ஐயோ, இரண்டாயிரம் பொன் தொலைந்துவிட்டதே!" என்று செட்டி விம்மி அழுதான்.

குமாஸ்தா இங்ஙனம் அபூர்வமாக செட்டி அழுவதைக் கண்டு வியப்பெய்தி, "என்ன செட்டியாரே, புத்தி சுவாதீனமில்லையா? எவ்வளவோ போகிறது, எவ்வளவோ வருகிறது! இரண்டாயிரம் பொன்னுக்கு அழலாமோ? பெரிய பெரிய கஷ்டங்கள் வந்தாலும் நீங்கள்

அழமாட்டீர்களே? இந்த இரண்டாயிரம் பொன் மலையா? இதற்கேன் அழுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

செட்டி குமாஸ்தாவிடம், கைத்தொகையை ஒரு பையிலே கட்டித் தன் வீட்டு வாசல் திண்ணையில் வைத்திருந்ததாகவும், வீட்டுக்குள் ஏதோ அவசர நிமித்தமாகப் போக நேர்ந்ததில் மறதியினால் அதை வாயிலிலேயே வைத்துவிட்டுச் சென்றதாகவும், திரும்பிப் பார்க்குமுன்னே அந்தப் பணம் களவு போய்விட்டதென்றும், ஏதோ பொய்க் கதை சொல்லிவிட்டு அழுகையை நிறுத்தினான்.

அதுமுதல் லலிதாங்கியை மறந்ததோடன்றி, சொக்கநாதன் செட்டி எங்கேனும் தாசி வீடென்ற பெயர் கேட்டளவிலே உடம்பெல்லாம் நடுங்கலானான். வேசையர் யமனுடைய தூதர் என்றும், அவர்களைக் கோயில் பணி முதலியவற்றில் வைத்திருப்பதே குற்றமென்றும், கலியாண காலங்களில் தாசியை அழைத்து நாட்டியம் பார்ப்பது பெரும் தீமைக்கு இடமென்றும் தன் நண்பர்களுக்கெல்லாம் உபதேசம் செய்யத் தொடங்கினான். தாசிகளைப் பழித்து யாரேனும் புலவர்கள் பாடிக்கொண்டு வந்தால், அவர்களுக்கு ஏராளமான சன்மானங்கள் செய்யத் தொடங்கினான். லலிதாங்கி இருந்த தெரு வழியாகப் போவதையே நிறுத்திவிட்டான். அப்பால் அச்செட்டி வியாபாரத்தில் ஏராளமான திரவியம் சேர்த்து, ஏழைகளுக்கும், கோயில்களுக்கும் கொடுத்து தர்மிஷ்டன் என்னும் பெயர் பெற்று வாழ்ந்தான்.

## 5. மன்மத ராணி

*[''மன்மத ராணி'' என்ற இக் கதை பாரதியுடன் சிறு வயதில் பழகியவரும் மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியாரின் புதல்வியுமான யதுகிரி அம்மாள் எழுதி வைத்திருந்த பாரதி கதைகள், பாடல்கள் கையெழுத்துப் பிரதியிலிருந்து இங்குப் பிரசுரிக்கப்படுகிறது. இக் கதை ஏற்கனவே சென்னை ''ஹநுமான்'' பத்திரிகையில் 1943-ஆம் ஆண்டு ஸெப்டம்பர் 13-ஆம் தேதி இதழில் வெளி வந்துள்ளது. ''பூலோக ரம்பை''யைப் போலவே ''மன்மத ராணி''யும் பொழுதுபோக்கான கதை.]*

மகத ராஜ்யத்தில் மாதவசிங்கன் என்றோரரசன் ஆட்சி செலுத்தி வந்தான். அவன் நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லாமல் வருந்திக் கொண்டிருந்தான். பல மந்திரிகளும், பந்துக்களும், நண்பர்களும், பிறரும் அவ்வரசன் தனது ராணியாகிய ராதை என்பவள் இருக்கையிலேயே, அவளுக்குச் சந்தானம் இல்லாமையால், வேறொரு ஸ்திரீயை மணம் புரிந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். ஆனால் மாதவ சிங்கன் இவர்களுடைய வார்த்தைக் கிணங்கவில்லை. அவன் தன் மனைவியாகிய ராதையிடத்தே மிகவும் காதல் செலுத்தி

வந்தான். மேலும், அவன் ஸ்ரீராம பக்தி மிக உடையவனாய், ஸ்ரீராம பிரான் தனது திருவொழுக்கத்தில் நடத்திக் காட்டியபடி ஏக பத்னி விரதத்தை ஒவ்வொருவனும் அனுசரிக்க வேண்டுமென்ற கொள்கை யுடையவனாக இருந்தான். மேலும் இந்த மாதவ சிங்கனுடைய தந்தையாகிய மாதவ ராஜனுக்கு, பதின்மூன்று தேவிமாரும், வேறு பல ஆசைநாயகிகளும் இருந்தனர். மூத்த பட்டத்திய ராணியின் மகனே இந்த மாதவ சிங்கன். மற்ற தேவிமார்களுக்கும், ஆசை நாயகிகளுக்கும் ஓரிருவர் தவிர மற்றவர்களுக்கு இரண்டு, மூன்று, நான்கு வீதம் குழந்தைகளிருந்தன. எனவே சரியான ராஜகுமாரர் களும், ராஜகுமாரிகளும், தாஸிகளின் மக்களுமாக இந்த மாதவ சிங்கனுக்கு ஏறக்குறைய ஐம்பது சதோதரரும், இருபத்தேழு சகோதரிகளும் இருந்தனர். இத்தனை பெரிய குடும்பத்தை வைத்துக் கொண்டு தந்தையாகிய மாதவ ராஜன் பட்ட பாடுகளையும், தேவி மார்களின் பெரும் தொகையாலே தன் தாய்க்கும், தன் தாய் வயிற் றில் பிறந்த தங்கைகளுக்கும், தனக்கும் நேர்ந்த கஷ்டங்களையும், மாதவசிங்கன் மறவாதிருந்தான். இதனால் அவனுக்கு ஏக பத்தினி விரதத்திலிருந்த நம்பிக்கை மிகவும் உறுதி யடைந்தது.

தவிரவும், அக் காலத்தில் மகத ராஜ்யத்தில் மாத்திரமே யன்றி, பரத கண்ட முழுமையிலும், தனக்கு ஈடு வேறில்லாதபடி இந்த மாதவசிங்கன் மனைவியாகிய ராதாதேவி அத்தனை பேரழகுடைய வளாய் விளங்கினாள். இவர்களுக்குள் விவாகம் நடந்து ஏழெட்டு வருஷங்கள் சென்று விட்டன. எனினும், அவளுக்குப் பிள்ளை பிறக் காத காரணத்தால், அவளுடைய இளமை யொளியும், நிகரற்ற சௌந்தர்யமும் சிறிதேனும் வாடாமல் மங்காமல் விவாக தினத் தன்று எத்தனை நேர்த்தியாக விளங்கினாளோ, அப்படியே இன் றைக்கு மிருந்தாள். மிகுந்த செல்வமும், தகுந்த மந்திரிகளும், உகந்த நண்பரும், வரம்பிகந்த ஸேனா பலமும்உடையவனாய், எவ்வித மான சத்துரு பயமில்லாமல், சிறந்த வித்தையும், வடிவ மாண்பும், உயர்ந்த நல்லொழுக்கமும் கொண்டிருந்தபடியால் தன் பிரஜை களாலும் பிற மன்னர்களாலும் நன்கு மதிக்கப்பட்டவனாய், மனத்திற் கிசைந்த காதலியுடன் கூடி மகிழ்ந்திருந்தானாயினும், மானிட ஜன்ம மெடுத்தோர்க்கு ஏதேனுமொரு கவலை யிருந்து தீர வேண்டு மென்ற பாழ்பட்ட கலியின் விதியால் இந்த அரசன் மனதில் தனக்குப் பின் தன் வயிற்றுக் குழந்தைதான் பட்ட மாள வேண்டு மென்ற ஆவலினால், தனக்குப் புத்திர பாக்யமில்லை என்ற கவலை மிகுதிப்பட்டு நின்றது. வேறு ஸ்திரீயை மணம் புரியவும் மனமில்லை.

எனவே மாதவ சிங்கன் சதா ஸ்ரீராமனுடைய சரணங்களைப் பஜித்துத் தனக்கும் தன் ராணியாகிய ராதைக்கும் பிள்ளைப் பேறு அருள வேண்டுமென்று தியானம் செய்து கொண்டிருந்தான். ஒரு நாளிரவு கனவில் இவனுக்கு ஹனுமானுடைய ரூபம் தோன்றிற்று. ஸ்ரீராம பக்தி யுடையோர்க்கு ராமனைக் காட்டிலும், ஹனு

மானிடம் அன்பதிகமாக ஏற்படுதல் வழக்கமாதலால், இவன் ஹனுமானைக் கண்ட மாத்திரத்தில் தன் இஷ்ட தெய்வமாகிய பரமாத்மாவைத் தர்சனம் செய்ததைவிட நூறு மடங்கு அதிக மகிழ்ச்சி எய்தியவனாய், மீள மீளத் திருவடிகளில் வணங்கி எழுந்து, கைகளைக் கூப்பி முடி வணங்கி நின்று, "மஹாப் பிரபுவே! என் ஜன்மம் பலிதமாய் விட்டது" என்றான். "உனக்கென்ன வரம் வேண்டும்?" என்று ஹனுமான் கேட்டான். "எனக்குப் புத்திர பாக்யமில்லாத குறை ஒன்று தான் இருக்கிறது. மற்றப்படி பகவத் கடாக்ஷத்தால் எனக்கெல்லா பாக்யங்களுமிருக்கின்றன. ஆதலால், எனக்கு ஸந்தானம் அருள் செய்ய வேண்டும்" என்றான்.

அப்போது ஹனுமதேவன்:— "துஷ்டனாகவும், குடிகளால் பகைக்கப்படுவோனாகவும் ஓராண் பிள்ளை உனக்கு வேண்டுமா? அல்லது குடிகளால் கண்மணி போலே போற்றப்பட்டு நல்லொழுக்கத்திற்கும் ராஜ தர்மத்துக்கும் இலக்கியமாக விளங்கி அரசு புரிவாள் ஒரு பெண்மகவு வேண்டுமா?" என்று கேட்டான்.

"பெண் மகவு வேண்டும்" என்றான் மாதவ சிங்கன். "தந்தோம். வாழ்க" என்று கூறி ஹனுமதேவன் மறைந்து போய் விட்டான்.

## 2

மேற் கூறப்பட்ட செய்தி நிகழ்ந்து, ஆறு மாதங்கள் கழிந்த பின்பு, மகதராஜனுடைய பட்டத்திய ராணியாகிய ராதாதேவி கருத்தரித்திருக்கிறாள் என்ற செய்தி நாட்டில் பரவலாயிற்று. சரியான காலமான பிறகு, அந்த ராதாதேவி வயிற்றில், ஸாக்ஷாத் மின்னல் தெய்வம் வந்து பிறந்தது போலே ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு முறையே எல்லாவிதமான மங்களக் கிரியைகளும் நடத்தி, மன்மத ராணி என்ற பெயரிட்டார்கள். மன்மத ராணிக்கே தனக்கப்பால் பட்டம் கட்ட வேண்டுமென்று மாதவசிங்கன் அந்தக் குழந்தை பிறந்தன்றைக்கே ராஜ சபையில் தெரிவித்து விட்டான். அவனுக்கு வேறு குழந்தை பிறக்காதென்றே ஜனங்களுக்கு நம்பிக்கை இருந்தபடியாலே மன்மத ராணிக்குத் தான் அடுத்த பட்டமென்ற எண்ணம் அந் நாட்டு ஜனங்களின் மனதில் சகஜமாக ஏற்பட்டு விட்டது. மன்மத ராணிக்குச் சிறு வயதிலேயே வித்தியாப்யாஸம் செய்வித்தனர். ராஜ பதவிக்கு வர வேண்டிய குழந்தை யாதலாலே, அதற்கிசைந்தபடி குதிரை யேற்றம், யானை யேற்றம், மல் யுத்தம், வில் வித்தை, வாள் வித்தை முதலிய போர்த் தொழில்களும் அவளுக்குப் பயிற்சி செய்விக்கப்பட்டன. சாஸ்திரப் பயிற்சிகளில் அவள் தனக்குக் கற்றுக் கொடுத்த பண்டிதர்களை மிஞ்சினது மாத்திரமே யன்றிக் காலக்கிரமத்தில் சுத்தமான யுத்தப் பயிற்சிகளிலும் கூடத் தன் காலத்திலிருந்த மிகக் கீர்த்தி சான்ற ஆண் மல்லரையும், வில்வல்லோரையும், வாள் வீரர், வேல் வீரர்களையும் எளிதிலே தோற்கடிக்கக் கூடிய திறமை படைத்து விட்டாள். வாதிலே இவ

ளால் வெல்லப்படாத பண்டிதனில்லை. மேலும், அந்தக் காலத்தில் வாளிலே இவளால் வெல்லப்படாத வீரனில்லை. செய்யுளின்பத்தில் இவளால் வெல்லப்படாத கவிராஜனில்லை. தெய்வ பக்தியில் இவளால் வெல்லப்படாத துறவியுமில்லை, இல்வாழ்வானுமில்லை. ஞானத்தில் இவளால் வெல்லப்படாத பிராமணனில்லை. சங்கீதத்தில் இவளால் வெல்லப்படாத குரலுமில்லை, கருவியுமில்லை. இத்தனையுடன் அழகில் இவளால் வெல்லப்படாத ஸ்திரீ கிடையாது. இவளுடைய தாயாகிய ராதாதேவியைப் பற்றிப் பேசுமிடத்தே அவளைப் போலழகி பரத கண்டத்தில் கிடையாதென்றோம். மகள் மன்மத ராணியைப் போல் வனப்புடைய மாதர் வையகத்தில் கிடையாது. இன்பச் சித்திரம், ரஸப்பெட்டி, ஞானக்கூடு, ஒளி வீடு, வித்தைக் களஞ்சியம், வேதக் கற்கண்டு, மின்னற் பெண், சூர்யகுமாரி, கனவு விக்ரஹம்—இந்த மன்மத ராணி யென்ற பெண்ணின் அழகையும், அறிவையும், மற்ற அமைப்புக்களையும் வர்ணிக்க தேவ பாஷையிலே கூடப் பதங்கள் அகப்பட மாட்டா என்று நினைக்கிறேன். மனித பாஷையில் அவளை வர்ணிப்பது ஸாத்தியமில்லை யென்பது நிச்சயம். இப்படிப்பட்ட செல்வக் குமாரிக்கு வயது பதினைந்து, பதினாறு கழிந்த பின்னரும் அவளுடைய பிதா, இவளை மணம் புரிவித்து, இவளுடைய விடுதலையைக் கட்டுப்படுத்த மனமில்லாமல், கன்னிப் பெண்ணாகவே வைத்திருந்தான். எனினும் சாதாரண குடும்பமா? ராஜ குடும்பமன்றோ? அதிலும் சாதாரணப் பெண்ணோ? அடுத்த பட்டத்துக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் பூமண்டலேசுவரி. இவளைப் பருவமடைந்த பிறகும் நெடுங்காலம் மணம் புரியாமல் வைத்திருந்தால் ஊரார் பொறுத்துக் கொண்டிருப்பார்களா? ஊர் வாயை மூட உலை மூடியுண்டோ? நாட்டின் வாயை மூடுவதற்கு நாழி யுண்டோ? எனவே மந்திரிமாரும், பிறரும் மன்மத ராணிக்கு வரன் தேடி மணம் புரிவிக்க வேண்டுமென்று மாதவ சிங்கனிடம் வற்புறுத்திக் கூறலாயினர். அவனும் இவர்களுடைய பலாத்காரத்துக் கிணங்கி ஸ்வயம்வரம் நாட்ட உடன்பட்டான்.

## 3

ஸ்வயம்வரத்துக்கு விதிக்கப்பட்டிருந்த தினத்திற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவே வட திசையில் ஜப்பானிலிருந்தும், சீன தேசத்திலிருந்தும், மக்காவிலிருந்தும், பக்தாத் நகரத்திலிருந்தும், யவனமென்று அக்காலத்தில் நம்முள் பெயர் வழங்கிய கிரேக்க தேசத்திலிருந்தும், சிங்களம், பர்மா, ஸயாம், ஜாவா, சுமத்ரா, போர்னியோ, எகிப்து தேசம், மொராக்கோ, திபெத், ஆப்கானிஸ்தான், பாரஸிகம் முதலிய பல வெளி நாடுகளிலிருந்தும், இந்தியாவில் ஐம்பத்தாறு தேசங்களிலிருந்தும் எத்தனையோ ராஜகுமாரர், எத்தனையோ நடுவயது மன்னர், கிழச் சக்ரவர்த்திகள், மந்திரி குமாரர், சேனைத் தலைவர், மந்திரிகள், சிற்றரசர், பிராமணர், சங்கீத

வித்வான்கள், கவிராஜர்கள், முதலிய எண்ணற்ற மனிதர் வரத் தொடங்கி, நாள்தோறும் மகத தேசத்து ராஜதானியாகிய பாடலி புத்திர நகரத்துக்குள் வந்து குவிந்து விட்டார்கள். மகத நாட்டரசனு டைய கார்யஸ்தர், பாடலிபுத்திர நகரத்தில் அரண்மனையின் வாயில் முற்றத்திலே பிரமாண்டமான மண்டபம் கட்டினார்கள். அதைப் பொன்னாலும், பளிங்காலும், மாணிக்கத்தாலும், சீனத்துக் கண்ணாடி யாலும், வைர மணிகளாலும் தேவேந்திரனுடைய ஸபா மண்டபம் போல் சமைத்தார்கள். விசுவ கர்மாவும், அஸுரத் தச்சனாகிய மயனும் ஒருங்கே உள்ளன்புடன் கூடிச் சூழ்ச்சி செய்து கட்டிய மண்டப மொத்ததாய், நமது மன்மத ராணியின் ஸ்வயம்வர மண் டபம் சிற்ப சாஸ்திரத்துக்கே பெரு வெற்றியாய் விளங்கிற்று.

அங்கு:பலவித மணிகளிழைத்த ஆஸனங்கள் மூவாயிரத்துக்கு மேலே போடப்பட்டிருந்தன. இவை வட்டமாகப் போடப்பட்டு, இவற்றின் நடுவே ஒரு மயிலாஸனம் நமது மன்மத ராணியின் பொருட்டு வகுக்கப்பட்டிருந்தது. அந்த மயில் முழுதும் பச்சை, நீலம், மாணிக்கம் முதலிய மணிகளாலும், பொன்னாலும் வகுக்கப் பட்டதாய், தெய்வீக ஒளி பெற்ற ஒரு மெய்யான உயிருள்ள, காட்டு மயில் போல் விளங்கிற்று. வேலனை எதிர்பார்த்து நிற்கும் வள்ளிப் பெண் போல நமது மன்மத ராணி மண்டபத்தின் மையத்தில் வகுக் கப்பட்டிருந்த அந்த மயிலர்சனத்தின் மீது வீற்றிருந்தாள். அவளைச் சூழ வட்ட வட்டமாகப் போட்டிருந்த ஆஸனங்களில் பலவகைத் தோற்றமும், பலவகை உடையும், பலவகை பாஷையும், பல மதக் கொள்கையுமுள்ள பல நாட்டு மன்னர் பல திறப்பட்ட வயதினராய் அமர்ந்திருந்தனர். ரோஜாப் பூவின் அருகே நிற்கும் மல்லிகைப் பூக்களைப் போலே மன்மத ராணியின் அருகில் சில சேடிப் பெண் களிருந்தார்கள். இவர்களிருவர் நேபாளத்தரசன் மக்கள்; மற்றவர் மன்மத ராணியின் குழந்தைப் பிராயத்துத் தோழிகள். ஆங்கு சற்றே உயரமாக வகுக்கப்பட்டிருந்ததோர் ஆஸனத்தின் மீது மந்திரி கள் முதலிய முக்ய பரிவாரங்களும், பந்துமித்ரரில் முக்யஸ்தரும், புரோஹிதரும் புடைசூழ வீற்றிருந்த மாதவசிங்கன் பேசும் பொருட் டாக எழுந்தான். காலையில் பத்து நாழிகைப் பொழுதிருக்கும். நேர்த்தியான பால சூர்யனுடைய ஒளி. இந்திரன் காணும் கனவைப் போல் பலவகைப்பட்ட அற்புத ஒளிகள் கூடிச் சமைத்ததொரு மண்டபம். அதில் முழு உலகத்து அழகையும் வீரியத்தையும் பொறுக்கித் திரட்டிய மன்னர்களின் கூட்டத்தினிடையே லாவண் யத்திலும் ஒப்பற்றவனாகிய மாதவ சிங்கனென்ற நமது மகத நாட் டரசன் பேசத் தொடங்கி எழுந்து நின்ற வுடனே, சபை முழுதிலும் வர்ணிக்க முடியாத ஆரவாரம் எழுந்தது. "ஜய விஜயீ பவ, மாதவ சிம்ஹ, மகத நாத ஜய விஜயீபவ!" என்ற ஒலிகள் வானத்தைப் பிளந்தன. ஆயிரம் சங்குகள் வெற்றியொலி முழங்கின. அப்போது சபையோரை நோக்கி மாதவ சிங்கன் சொல்லுகிறான்:— "பெரியோர் களே, நேசர்களே, இதோ இந்த அற்புத மஹிமைகள் திரண்ட ராஜ

சபையின் கண்ணே எனது ஏக புத்திரியாகிய மன்மத ராணியைச் சுயம் வரத்துக்காக அழைத்து வந்திருக்கிறேன். அவள் தேர்ந் தெடுக்கப் போகிற கணவன் அறிவாலும், குணத்தாலும், ஸ்தானத் தாலும், அவளுடைய அழகுக்கும், தெய்வ பக்திக்கும், கல்விப் பெருமைக்கும், குணச் சிறப்புக்கும், குலவியல்புக்கும், பொருந்தி யவனுக இருக்குமாறும், தெய்வானுபவத்தால் நீண்ட ஆயுளும், இன்ப வாழ்க்கையும் பெறும் விதியுடையவனுக இருக்குமாறும், இவ்விருவருடைய மணத்தால் இவ்விருவருக்கும் நீடித்த இன்பமும், மற்றெல்லாப் பெருமைகளும், கூடுமாறும், நீங்கள் எல்லோரும், தத்தமக்குரிய இஷ்ட தெய்வங்களின் திருநாமங்களை உச்சரித்து ஆசீர்வதிக்கும்படி வேண்டுகிறேன்!'' என்ருன்.

அப்பால் மாதவ சிங்கன் தன் மகளை நோக்கிச் சொல்லுகிருன்: 'எனதருமைக் குமாரியே, உன்னைப் பரமாத்வாகிய ஸ்ரீ ராமபிரான் எப்போதும் கடாக்ஷம் புரிந்து இவ்வுலகில் நித்ய வாழ்வும் எண் ணற்ற இன்பங்களும் எய்தும்படி செய்து எப்போதும் காத்தருள்வார். தகுந்த வரனை நீ தேர்ந்தெடுக்கும்படி நம்முடைய குல தெய்வங் களெல்லாம் துணை செய்க. நினது செல்வத் தாயின் கற்பு நினக்கும் தெய்வீக அரணுகுக. எனதாசை மகளே! இந்தப் பூமண்டலத்தில் தனித் தனியே பலம், வீர்யம், செல்வம், அழகு, அதிகாரம், கல்வி, தவம் என்பவற்றில் சிறந்தோரும், அவற்றில் சிலவேனும், பலவேனும், அனைத்துமேனும் திரண்டு வாய்க்கப்பெற்ற மஹாபாக்ய சாலிகளில் பலரும் இந்தச் சபையில் வந்து கூடியிருக்கிருர்கள். பலம், வீரம், கல்வி என்பவற்றைப் பற்றிய சோதனைகள் எவ்வளவு காலமாயினும், எத்தனை வகைகளாயினும் செய்து பார்த்து உன் மனதுக்குப் பொருந்தும் கணவனுக்கு மாலையிடக் கடவாய். உன்னுலே விதிக் கப்படும் கல்விப் பரீக்ஷைகளும், இதர பராக்ரமப் பரீக்ஷைகளும் இன்று மாலைக்குள் முடிவு பெருவிடின் நாளைக் காலை மறுபடியும் சபையைக் கூட்டுவோம். மகளே! மரண பர்யந்த மிருக்க வேண்டிய கட்டு. என் மகளே, உனக்கு மார்க்கண்டன், அசுவத்தாமன் முதலியவர்களைப் போல், எக் காலத்திலும் மரணம் நேராதபடி ஸ்ரீ ராமபிரான் காத்தருளுக. மகளே! இன்று நீ உனக்குப் பூட்டிக் கொள்ளப் போகிற தளையை எக் காலத்தும் கழற்ற முடியாது. தம் பதிக்குள்ளே காதல் இருக்கு மளவும் அந்தத் தளை சுத்த இன்ப மயமாயிருக்கும். காதலில்லாவிட்டால் ஒரே தாய் வயிற்றிலிருந்து துண்டிக்க முடியாதபடி இரண்டுடலும் ஒட்டிக்கொண்டு ஒரு நாயும் பூனையும் பிறந்து, அவ்விரண்டும் தத்தம் ஜாதிக்குரிய குணத்தையும் பரஸ்பரமான விரோதத்தையும் விடாதனவாக இருக்குமானுல், அவ் விரண்டின் வகுக்க முடியாத உலக வாழ்க்கை எத்தனை சுகமோ அத்தனை சுகந்தான் குடும்ப வாழ்க்கையில், கணவன் - மனைவி என்ற இரு திறத்தாராலும் எய்தப்படும்.

''ஆதலால் என் ஆசை மகளே! தெய்வத்தின் விதிப்படி யன்றி உன்னுடைய புத்தியினுல் இந்த விஷயத்தில் உறுதியாக நற்பய

னெய்தும்படி தொழில் செய்தல் ஸாத்யமில்லை யெனினும், தம்மால் இயன்ற வரை ஜாக்ரதையாகவும், தெளிந்த புத்தியுடனும் வேலை செய்வார்க்கே தெய்வம் அனுகூலம் செய்தல் வெளிப்படையாகக் காணப்படுவது கருதி, அவசரப்படாமல், கூட்டத்தில் புத்தியைச் சிதற விடாமல், வெறுமே வெளிப் பகட்டுக்களைக் கண்டு மயங்கி விடாமல், தெளிவாக, சாந்தியாக, ஸமாதானமாக, பொறுமையாகப் பல பரீக்ஷைகள் விதித்து, சக்திகளை மாத்திரமேயன்றி குணங்களையும், பரிசோதித்தறியும்படியாக வேலை செய்து, தெய்வத்தின் துணையை உறுதியாக நம்பி உனக்கிஷ்டமான வரனைத் தெரிந்து கொள்ளக் கடவாய். நீ எவனைக் கணவனாக வரிக்கிறாயோ உன் கையிலுள்ள மாலையை அவன் கழுத்தில் போட வேண்டும். உனக்கு ஸரஸ்வதி தேவி இவ் விஷயத்தில் துணை நின்றருளுக" என்று மகத நாட்டரசனாகிய மாதவசிங்கன் கூறி மீட்டும் தனதிருக்கையில் அமர்ந்தான். மறுபடி ஸபையோர் ஆரவாரம் புரிந்தனர். வெற்றிச் சங்குகள் ஒலித்தன.

## 4

சுங்லிங்! "சுங்லிங்" என்ற விநோத எழுத்துக்கள் இங்கே காணப்படுகின்றனவே, இதன் விவரம் யாதென்பீர்களாயின், இதோ தெரிவிக்கிறேன். இஃது சீனா பாஷையில் ஒரு மனிதனுக்குப் பெயர். அந்த, சுங்லிங் என்ற சீனத்து மனிதன் நம்முடைய மன்மத ராணியின் ஸ்வயம்வர மண்டபத்திற்கு வந்து முன்னணி யாசனங்களில் ஒன்றின் மீதே மிகவும் ஒளிதிகழ வீற்றிருந்தான். இவன் சீனத்துச் சக்ரவர்த்தியின் இளைய குமாரன். மூத்த குமாரன் ஏற்கெனவே பல ஸ்திரீகளை மணம் புரிந்து, உலக அனுபவத்திலும், குடும்ப அனுபவத்திலும் முதிர்ச்சி பெற்றவனாய், சாதாரண பௌத்தக் கொள்கையை நம்பி ஏற்கெனவே குடும்ப வாழ்க்கையில் அருவருப் பெய்தியவனாய், ஸந்யாசத் துறையில் இறங்குவதில் யோசனை செய்து கொண்டிருந்தானாதலால், இந்த ஸ்வயம்வரத்துக்கு வரவில்லை. தம்பி சுங்லிங் வந்திருந்தான். அவனுக்கு வயது 24 இருக்கும். சந்திரனைப் போல் நிறம்; சித்திரித்த, தீயொளி வீசுகிற நீலப் பூக்களைப் போன்ற விழிகள்; நேர்த்தியான பிஞ்சுத் தாடி, மீசை; அர்ஜுனனைப் போன்ற மேனிக்கட்டு; ஸ்ரீராமனைப் போலே முக வெட்டு. அவன் கண்களைப் பார்த்தவுடனே அவன் மஹா வீரனென்பதும், மஹா உதாரி யென்பதும், சிறந்த புத்தி நுட்பமும் கல்வித் தேர்ச்சியும் உடையோனென்பதும், மனிதரிடத்தில் அன்பிலும் அதற்கு மூல காரணமாகிய தெய்வ பக்தியிலும் மிக உயர்ந்தோனென்பதும் மிகத் தெளிவாக விளங்கின.

ஏற்கெனவே சுயம்வரத்துக்கு வந்திருந்தவர்களில் முக்யஸ்தரனைவரும் தத்தம் பெயர், நாடு, பதவி, குலம், திறமைகள் முதலியவைகள் குறித்து விஸ்தாரமான விவரங்களெழுதி அவற்றுடன் தம் தம் படங்களையும் சேர்த்து மன்மத ராணியின் பார்வைக்கனுப்பி யிருந்தார்கள்.

சென்ற மூன்று மாசங்களாக நாள் தவருமல் இரவும் பகலும், ஒவ்வொரு க்ஷணமும், இவ்விதமான ராஜவிருதோலேகளும், பிராமணர் முதலிய மற்ற வகுப்பார்களின் பராக்ரமப் பத்திரிகைகளும் படங்களும், நமது மன்மத ராணியின் பார்வைக்கு வந்தன.

அவளும், ஏறக்குறைய மூவாயிரம் பேருடைய சரித்திர விவரங்களை ஒரு வரி விடாமல் பொறுமையுடன் படித்துணர்ந்து கொண்டதுமன்றி, அந்தத் தொகைக்குப் பெரிதும் மேற்பட்டனவாகிய சித்திரங்களையும் மீள, மீள, மிகவும் உற்றுக் கலை கலையாகக் கவனித்துப் பார்த்து வந்தாள். இது நிற்க.

மேற்கூறிய ஸ்வயம்வர சபையில் பாடலி புத்திரத்தரசனுகிய மாதவ சிங்கன் பேசி முடித்து, ஆஸனத்தில் அமர, அப்பொழுது எழுந்த ஆரவாரங்கள் தணியு முன்பாகவே, அண்டங்கள் பிளந்து விடும்படியான வேருெரு பெரிய ஆரவாரம் எழுந்தது. யாது பற்றியோ? எனில் ஸ்வயம்வரம் பூர்த்தியாய் விட்டதுபற்றி; மன்மத ராணி மணமாலை சூட்டியாய் விட்டது என்பதுபற்றி. யாருக்கு மணமாலை சூட்டிஞள்? எனில் இன்னும் தெரியவில்லையா? சீன தேசத்துச் சக்ரவர்த்தியின் இளைய குமாரஞன சுங்லிங் என்ற சுந்தர வடிவம் கொண்ட வீரனுக்கு மன்மத ராணி மாலை சூட்டிஞள். அந்தச் சபையிலிருந்த சாதாரண மனிதர்களின் காதுக் கெட்டாதபடி தேவ துந்துபி ஒலித்தது. எவருடைய கண்ணுக்கும் புலப்படாதபடி வானவர் மலர்மாரி பொழிந்தனர். சபையோரின் ஆரவாரம் அடங்கிய வுடனே, மஹா பாக்யவசத்தால் மன்மத ராணியால் மாலை சூட்டப்பெற்ற புண்ணியவான் இன்னுன் என்பதைச் சபையில் அனைவருக்கும் அறிவிக்க வேண்டி அங்கிருந்த பரிவாரத்தாரில் ஒருவன் எழுந்து நின்று, "பெரியோர்களே, ராஜகுல திலகர்களே, நேசர்களே! திருப்பாற்கடல் கடையும்போது எத்தனையோ தேவர்களும் பிறரும் வந்து கூடியிருப்பினும் அந்தக் கடைதலிடையே தோன்றிய மஹாலக்ஷ்மி தேவி ஸ்ரீமந் நாராயணனுகிய எம்பெருமான் ஒருவனையே சேர்ந்தாற்போல் இத்தனை சிறப்போங்க மன்னரும் பிறரும் திரண்ட சபையில் அமிர்த கலசமும், சந்திரனும் ஒரே பொருளாகக் கலந்து மானிடப் பெண் வடிவம் கொண்டு போந்தது போன்ற மகத ராஜகுமாரி மன்மத ராணியின் காதலுக்கும், மாலைக்கும் பாத்திரமான இந்த மஹா பாக்யசாலி ஜன்மாந்தரங்களில் ஒப்பற்ற தவங்களைக் கொடூரமாகப் புரிந்ததன் பலனுக இந்த ஜன்மத்தில் இவ்வளவு சுலபமாக இத்தனை அபூர்வமான பயனென்று கிடைக்கப்பெற்ற மஹா புருஷன். இவன் யாரென்பீரேல், சீனத்துச் சக்ரவர்த்தியின் இளைய குமாரன். இவன் பெயர் சுங்லிங். சபையோர்களே, மிகக் கருணை புரிந்து இவனுக்கும் இவன் காதலிக்கும் எல்லாவிதமான லௌகிக, பரமார்த்திக இன்பங்களும் தந்து நீண்ட ஆயுளும் தரும்படி தம் தம் இஷ்ட தெய்வங்களை மனதினுல் ஸ்மரித்து வாழ்த்துரை கூறக் கடவீர்" என்ருன்.

"வாழ்க, வாழ்க சுங்லிங்! வாழ்க, வாழ்க மன்மத ராணி! வாழ்க, வாழ்க, வாழ்க, சுங்லிங் மன்னனும், மன்மத ராணியும் எக்காலும் வாழ்க!" என்ற ஆரவாரங்கள் வானத்தைப் பிளந்தன.

## 6. வேணு முதலி

### "காளிதாசன்" எழுதுகிறார்

*[வேதபுரம் என்று புதுவை நகரத்துக்கு ஒரு மாற்றுப் பெயர் உண்டு. பாரதியார் வேதபுரம் என்ற பெயரைப் பல இடங்களில் உபயோகித்துள்ளார். வேணு முதலி என்ற நபரைப் பற்றியும் பல கதை, கட்டுரைகளில் குறிப்பிடுகிறார்.*

*இக் கதை "சுதேசமித்திர"னில் முதலில் வெளிவந்தது; பிறகு "மித்திரன்" அலுவலகம் 1920-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்ட "கதாமாலிகா" என்ற நூலில் வெளியாயிற்று.*

*"காளிதாசன்" என்பது பாரதியாரின் புனை பெயர்களில் ஒன்று.]*

வேதபுரத்து வேணு முதலிக்கு வயது முப்பது, முப்பத்தைந்து இருக்கும். கரு நிறம். இவனுடைய உடம்பு சிங்கத்தின் உடம்பைப் போல வலிமை யுடையது. இவன் சிறு பிள்ளையாக இருக்கும்போது இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் மூன்று நான்கு வருஷம் வாசித்துக் கொண்டிருந்தான். இங்கிலீஷ் படிப்புக்கும் இவனுக்கும் ஒத்து வரவில்லை. படிப்பை விட்டான். தகப்பனார் இவனை ஏதேனுமொரு வேலைக்குப் போகச் சொன்னார். ஒரு வியாபார ஸ்தலத்தில் குமாஸ்தா வேலைக்குப் போனான். மூன்று மாதம் வேலை பார்த்தான். அதுவும் பிடிக்கவில்லை. விலகி விட்டான். பிறகு வீட்டிலிருந்த படியே இங்கிலீஷ் புத்தகங்களும் தமிழ்ப் புத்தகங்களும் வாசித்துக் கொண்டிருந்தான். இரண்டு பாஷைகளிலும் அவனுக்குச் சிறிது தேர்ச்சி ஏற்படலாயிற்று.

மறுபடியும் வீட்டாரின் வேண்டுதலின்படி சில குழந்தைகளுக்கு இராப் பாடம் கற்றுக் கொடுத்து மாஸம் பத்துப் பதினைந்து ரூபாய் சேர்க்கலானான். ஏழெட்டு மாஸத்திற்குள் அவனுக்கு இந்தத் தொழிலும் கசந்து போய் விட்டது. அப்பால் பரதேசி, பண்டாரம், லாடர், யோகிகள், வகையராக்களுடன் இவனுக்குப் பழக்கம் உண்டாயிற்று. அவர்களுடனே வட தேசத்தில் நெடுங்காலம் சுற்றி வந்தான். சென்ற பத்துப் பதினைந்து வருஷங்களாகத்தான் வேதபுரத்தில் மனைவி மக்களுடன் வாழ்ந்து வருகின்றான். குடும்ப விஷயங்களை இவன் கவனிப்பதே கிடையாது. இவனுடைய பத்னி மிகவும் நல்லவள். அவளை ஸ்ரீதேவிக்குச் சமானமாகச் சொல்ல வேண்டும். இவனுடைய பிதா கொடுத்த நிலத்திலிருந்து வருஷச்

செலவுக்கு நெல் விளைந்து வருகிறது. அதை வைத்துக் கொண்டு அந்தப் பெண் - அவள் பெயர், ஸத்ய பாமை - செட்டாகக் குடித் தனம் நடத்திக் கொண்டு வருகிருள். வேணு முதலியோ விடுதலேயே வழியென்று வாழ்கிருன். இன்றிரவு வீட்டிலே படுப்பான்; மறு நாளிரவு கடற்கரை மணலிலே படுத்துத் தூங்குவான். மழை, வெயில், காற்று ஒன்றுக்கும் பயப்பட மாட்டான். யாருக்கும் தலே வணங்கான். நெடுங் காலமாக வாயினுல் வார்த்தை சொல்லும் வழக் கத்தை விட்டுத் தன் கருத்தைப் பாட்டாகவும், சிலேடையாகவும் சொல்லிக் காட்டிக் கொண்டிருந்தான். தனியே வானத்தைப் பார்த்து நகைப்பான். கடவுளேத் தொழுவான். குழந்தைகளேக் கும்பிடுவான். நாம் பேசும்போது மிகவும் கவனத்துடன் கேட்டிருப் பான். அவன் பேசுவது ஸங்கீத ஸாஹித்யம். இப்படி இவன் நடப்பதிலிருந்து இவனுடைய ஸ்நேகிதரில் சிலர் ஏதோ பொய் வேஷம் போடுகிருனென்று நிஃனத்து வந்தனர். இப்பொழுது நாலேந்து தினங்களாக இவன் தன்னுடைய பாதி மவுனத்தையும் கைவிட்டுப் பச்சைத் தமிழை நம்மைப் போல் வசன நடையிலே பேசத் தொடங்கி விட்டான். நேற்றிரவு கடற்கரையில் நான் உலாவி வருகையிலே வேணு முதலி எதிர்ப்பட்டான்.

"வேணு முதலி, பேசத் தொடங்கி விட்டாயாமே, மெய்தானு? ஏன் விரதத்தை மாற்றினுய்? விஷயமென்ன?" என்று விசாரணே செய்தேன்.

வேணு முதலி சொல்லுகிருன்:— "ஸ்வப்னத்தில் ரிஷிகள் என் னிடம் தோன்றி மறுபடி பேசத் தொடங்கலாம் என்று உத்தரவு கொடுத்தார்கள். அதனுலே பேசுகிறேன். முன்பு குமரக் கடவுள் கனவில் அருள் செய்தபடி பாட்டையே பேச்சாகக் கொண்டிருந் தேன்" என்ருன்.

நான் வியப்படைந்து, "என்ன வேணு முதலி, விழித்துக் கொண் டிருக்கிருயா? தூங்குகிருயா? என்ன சொல்லுகிருய்? ரிஷியாவது, காரியமாவது!" என்று கேட்டேன்.

வேணு முதலி சொல்லுகிருன்:—

"காளி தாஸரே, ஒரு சங்கதி கேளும். வான் உண்டு; தேவர் உண்டு; வேதம் ஸத்யம்; புனர் ஜன்மம் உண்டு. ரிஷிகள் இக் காலத்திலும் இருக்கிருர்கள். என் கனவிலே முதலாவது வந்த ரிஷி பராசரர். இவர் தவத்தினுலே சக்தியருள் பெற்றிருக்கிருர். பிறகு வசிஷ்டர் வந்தார். பிறகு கௌசிகர் வந்தார். சிதம்பரச் சித்தர், தாயார் முனி என்ற இரண்டு மஹாத்மாக்களேயும் கண்டேன். அவர்கள் என்னிடம் தேவ ரஹஸ்யங்களே யெல்லாம் வெளிப் படுத்திச் சொல்லி யிருக்கிருர்கள். நான் அவற்றை இப்போது உம் மிடம் சொல்ல மாட்டேன். பக்குவம் ஏற்படும்போது உமக்கும் கனவிலே தோன்றி உம்மிடத்தில் அவற்றை உரைப்பதாகச் சிதம்பர முனிவர் தெரிவித்தார்" என்ருன்.

எனக்கு நம்பிக்கை யுண்டாகவில்லை.

"வேணு முதலி, இதெல்லாம் கனவென்பதை மறந்து போகாதே" என்று சொல்லி நகைத்தேன். வேணு முதலி பாடுகிறான்:—

*"கனவென்று நனவென்று முண்டோ?—*
*காண்பது காட்சி யல்லாற் பிறிதாமோ? இங்கு*
*மனையிலிருப்பது வானம்—அந்த*
*வானத்தின் வந்தவர் தேவர் முனிவர்,*
*நினைவது செய்கை யறிவீர்—எந்த*
*நேரத்துந் தேவர்கள் காப்பது வையம்,*
*வினவிற் பொருள் விளங்காது—அக*
*விழியைத் திறந்திடில் விண்ணிங்கு தோன்றும்*
*தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்."*

இங்ஙனம் வேணு முதலி பாடியதைக் கேட்டு நான் மவுனத்துடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன். வேணு முதலி உண்மையாகவே ஞானதிருஷ்டி யுடையவனா இல்லையா என்பதைப் பற்றி யோசித்து யோசித்துப் பார்த்தேன். தீர்மானமாக ஒன்றும் புலப்படவில்லை. விடிந்தால் தெரியும் வெளிச்சம்.

## 7. வேணு முதலி விசித்திரம்

### "காளிதாசன்" எழுதியது

*[வேணு முதலி என்ற ஒருவரைப் பற்றி முந்தைய கதையில் பாரதி குறிப்பிடுகிறார். இந்த வேணு முதலியின் ஞானானுபவங்களைப் பற்றியது இந்தக் கதையும். வேதபுர மென்பது புதுவையின் பெயர்.*

*இக் கதையும் முதலில் "சுதேச மித்திர"னிலும், பிறகு 1920-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் "மித்திரன்" காரியாலயம் வெளியிட்ட "கதாமாலிகா" என்ற நூலிலும் பிரசுரமாயிற்று.]*

வேதபுரத்து வேணு முதலி நம்முடைய ஹிந்து தர்மத்தைக் கண் போலே கருதுகிறான். அன்னிய மதங்களில் அவனுக்குக் கோபம் கிடையாது. பற்றும் கிடையாது. நமக்கும் அவனுக்கும் இந்த விஷயத்தில் சற்றே அபிப்பிராயபேதம் உண்டு. நான் ஸமரஸவாதி, அவன் பச்சை ரிக்வேதம்.

இவன் நேற்று மாலை இருபது, முப்பது கிறிஸ்தவப் புஸ்தகங்கள், துண்டுப் பத்திரிகைகள், குட்டிப் புஸ்தகங்கள் இவற்றை ஒரு பெரிய மூட்டையாகக் கட்டிக்கொண்டு வந்து என் மேஜையின் மேலே எள்ளுப் போட இடமில்லாமற்படி விரித்தான். இங்கிலீஷிலும் தமிழிலும் முழுமையில் ஒன்று. புதிய ஆகமம் இரண்டு பிரதி. மத்தேயு, லூக், யோவான், மார்க், என்ற நான்கு தலைச்சீடர் எழுதிய 'சுவிசேஷம்' (அதாவது இதிஹாஸம்), தனித்தனியாகப் பதிப்பிக்கப் பட்ட குட்டிப் புஸ்தகங்கள், லண்டன் பதிப்பு—நேர்த்தியான சித்தி ரங்கள்—பள பளப்பான காயிதம்—கால் காலணு விலை. ஆனால் தமிழ் மாத்திரம் கொஞ்சம் தெளிவில்லாமலும் விஜாதீயமாகவும் இருக்கிறது. மேற்படி புஸ்தகங்களை யெல்லாம் ஒவ்வொன்றாக எனக்குக் காட்டினான். "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவா?", "நீ புண்யம் செய்வதில் பிரயோஜனமில்லை யென்பதை நீ அறி வாயா?", "ஒரு நேர்த்தியான ஆடு மேய்ப்பவன்" என்று பலவித மான மகுடங்களிட்டு கிறிஸ்தவ மத ஸ்தாபனம் பண்ணி இனாமாகக் கொடுக்கப்படும் துண்டுப் பத்திரிகைகளும் பல கொண்டு வந்திருந் தான். இதை இவன் ஏன் வாங்கினானென்று எனக்குத் தெரிய வில்லை. இவனோ வீர ஹிந்து. அதாவது பூமி முழுவதையும் அன்னிய மதங்கள் இல்லாமல் கிறிஸ்து மதத்தைச் சேரும்படி செய்ய வேண்டுமென்று கிறிஸ்தவப் பாதிரிகள் விரும்புவது போல இந்த வேணு முதலி பிற மதங்களில்லாமல் உலகமுழுவதையும் ஹிந்து மத மாகச் செய்துவிட வேண்டுமென்ற நோக்கமுடையவன். அவன் பணம் கொடுத்துக் கிறிஸ்தவப் புஸ்தகங்கள் வாங்கினது எனக்கு வியப்புண்டாக்கிற்று. "ஏன் வாங்கினாய்?" என்றேன்.

வேணு முதலி:— "அத்தனையும் சேர்ந்து ஒன்றரை ரூபாய்க்கு மேலே போகவில்லை காணும். சண்டை சமயத்தில் இவன் காசைக் கண் தலை தெரியாமல் செலவிடுகிறான் என்று நினைத்துவிட வேண் டாம். பாவ மன்னிப்பு விஷயமான காயிதங்களெல்லாம் இனாமாக வாங்கினேன், அறியவும்" என்றான்.

நான் புன்னகை செய்தேன். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற குறளை எடுத்துச் சொன்னேன்.

வேணு முதலி சொல்லுகிறான்:—

"காளி தாஸரே, நான் இவற்றை யெல்லாம் வாசித்துப் பார்க்கும் பொருட்டாகவே வாங்கினேன். ஏற்கனவே இந்த இலாகாவில் பல பகுதிகள் வாசித்திருக்கிறேன். ஏனென்றால் இந்த யுத்தம் முடிந்த வுடனே நான் ஐரோப்பாவுக்குப் போவேன். அங்கே ஹிந்து தர்மத்தை நிலைநிறுத்தப் போகிறேன். ஆதலால் எனக்கு ஐரோப் பாவில் ஏற்கனவே வழங்கி வரும் மதத்தைப் பற்றி ஸம்பூர்ண ஞானம் இருக்க வேண்டுமென்று கருதி இவற்றை வாங்கினேன்" என்றான்.

மேலும் வேணு முதலி மேற்படி கிறிஸ்து மதப் புஸ்தகங்களின் விஷயமாக ஏதெல்லாமோ சொல்லிக் கொண்டிருந்தான். முதல் நாளிரவு குளிர்ந்த காற்றில் படுத்துறங்கினபடியால் எனக்குக் கொஞ்சம் இலேசான தலைநோவு போலிருந்தது. நான் கொட்டாவி விட்டேன்.

அப்போது வேணு முதலி பளிச்சென்று எழுந்து நின்றான். மீசை நுனிகளைக் கண்ணுக்குள்ளே திருகிவிட்டுக் கொண்டான். கண்ணிலே குத்திற்று. பிறகு இரண்டு காதுக்குள்ளேயும் இழுத்து விட்டுக் கொண்டான். கடகடவென்று சிரித்தான். "காளிதாஸரே, உம்முடைய கொட்டாவி, குறுகுறுப்பு எல்லாவற்றையும் ஒரு நிமிஷத்துக்குள் ஓட்டி விடுகிறேன், பார்க்கிறீரா?" என்றான்.

"செய்" என்றேன்.

வேணு முதலி மார்க் எழுதின சுவிசேஷத்தில் பதின்மூன்றும் அதிகாரத்தைத் திருப்பிப் பின்வருமாறு வாசிக்கலானான்:—

"யேசு சொல்லுகிறார்:—

" 'ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாக இருங்கள்.........யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப் படும்போது கலங்காதேயுங்கள். இவைகள் சம்பவிக்க வேண்டியதே. ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாக ஜனமும் ராஜ்யத்திற்கு விரோதமாக ராஜ்யமும் எழும். பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும். இவை வேதனைக்கு ஆரம்பம். நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்—'........" என்று தொடங்கி அரை மணி நேரம் வாசித்தான்.

கடைசியாக, "அந் நாட்களிலே, அந்த உபத்திரவத்திற்குப் பிறகு சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் ஒளி கொடாது. வானத்தின் நக்ஷத்திரங்கள் விழும். வானங்களிலுள்ள சக்திகள் அசைக்கப்படும். அப்போது மனுஷ குமாரன் மிகுந்த வல்லமையோடும் மஹிமையோடும் மேகங்களின் மேல் வருவதை உலகத்தார் காண்பார்கள்" என்று வாசித்து முடித்தான்.

பிறகு என்னை நோக்கி, "காளிதாஸரே, இந்தக் கதையின் குறிப்பென்ன? மனுஷ குமாரன் யார்?" என்று கேட்டான். "எனக்கொன்றும் சரியாக விளங்கவில்லை" என்றேன். வேணு முதலி சொல்லுகிறான்:—

"அப்படியானால் சொல்லுகிறேன், கேளும். இதற்கெல்லாம் ஐரோப்பாவிலுள்ளவர்கள் வெளிப்படையாக அர்த்தம் சொல்லுகிறார்கள். யுகமுடிவில் யேசுநாதர் வரப் போவதாகவும் அப்போது மேற்கண்ட உற்பாதங்களெல்லாம் நடக்குமென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். நான் இதற்கெல்லாம் அத்யாத்மப் பொருள்

சொல்லுகிறேன். கிறிஸ்து மதம் ஆசியா கண்டத்தில் உண்டானது. மதங்களே ஆசியாவில் தான் பிறந்தன. ஐரோப்பியருக்கு ஞான சாஸ்திரம் ஏற்படுத்தத் தெரியாது. ஆசியாவிலிருந்து கொண்டு போன ஞான சாஸ்திரங்களையும் அவர்கள் நேரே அர்த்தந் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி மார்க் எழுதின வசனங்களின் மனுஷ குமாரன் என்பது நம்முடைய யோக சாஸ்திரங்களில் சொல்லியபடி மனுஷனுக்குள்ளே ஆத்ம ஞானத்தால் பிறப்போனுகிய குமார தேவன், அதாவது ஸுப்ரமண்ய மூர்த்தியாகிய அக்னி தேவன். மனுஷ்யனுக்குள்ளேயே ஏழு லோகங்களும் இருக்கின்றன. தேவர், அஸுரர், இராக்ஷஸர், சித்தர், சாத்தியர், கின்னரர், கிம்புருஷர், பூத, ப்ரேத, பிசாசரர், மனுஷ்ய ம்ருக பக்ஷி நாகர் முதலிய சகலமும் நம்முடைய அந்தக்கரணத்திலேயே உள்ளவையாகும். மேற் சொல்லிய யுத்தங்கள் பூமியதிர்ச்சிகள் முதலியன வெல்லாம் அந்தக்கரணத்தில் ஞானகுருவாகிய ஸுப்ரமண்ய மூர்த்தி தோன்றி ஜீவன் முக்தியாகிய அமிர்த நிலையைக் கூட்டுவதற்கு முன்பு தனக்குள்ளே தோன்றும் பல உத்பாதங்களாகக் கருதப்படும். இதற்கெல்லாம் ஐரோப்பியக் கிறிஸ்தவர் உட்பொருள் கொள்ளாமல் புறப்பொருள் கொள்வது அவர்களுடைய ஞான சாஸ்திர பரிச்சயக் குறைவைக் காட்டுகிறது'' என்றான்.

எனக்கு ஸந்தோஷ முண்டாயிற்று. தலைநோவு பறந்தோடிப் போய்விட்டது. வேணு முதலியைக் கட்டித் தழுவிக்கொண்டு, "வேணு முதலியாரே, ஐரோப்பாவில் ஹிந்து தர்மத்தை நிலை நிறுத்தும் தகுதி உமக்குண்டென்றே கூறலாம்'' என்றேன். வேணு முதலியார் நகைத்து விடை பெற்றுக் கொண்டு சென்றார். நான் உடம்பு நேராகிப் பாட்டெழுதத் தொடங்கினேன்.

## 8. ஆவணி அவிட்டம்

*[வாழ்க்கையில் அன்றாடம் நடக்கும் விஷயங்களைக் கதை போலே எழுதுவதில் பாரதியார் சமர்த்தர். நம் தமிழ்நாட்டுச் சமூகத்தின் உயர்வும் தாழ்வும் யாவும் இத்தகைய கதைகளில் பளிச்செனத் தெரிகின்றன.*

*"ஆவணி அவிட்டம்" என்ற இக்கதையும் முதலில் "சுதேச மித்திர"னில் வெளியாகி, பிறகு "மித்திரன்" காரியாலயம் 1920-இல் வெளியிட்ட "கதாமாலிகா" நூலில் பிரசுரமாயிற்று.]*

வேதபுரத்தில் அத்வைத சமாஜம் ஒன்றிருக்கிறது. இதில் பிராமணர் மட்டும்தான் சேர்ந்திருந்தார்கள். வாரத்துக்கொரு முறை ஞாயிற்றுக்கிழமைதோறும் தண்டுல சாஸ்திரி என்பவர் அங்கே உபந்நியாசமோ கதையோ நடத்துகிறார். இந்த அத்வைத சமாஜத்துக்கும் கும்பகோணம் சங்கர மடத்துக்கும் ஸ்நேஹம்.

ஸமாஜத்துக் காரியதரிசியின் பெயர் முத்துசாமி அய்யர். இவருக்கு நாற்பது வயதிருக்கும். இங்கிலீஷில் எம். ஏ. பரீக்ஷை தேறி நூற்றைம்பது ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு உச்சி குமாஸ்தா வேலை பார்க்கிறார். இவரகத்தில் குழந்தை குஞ்செல்லாம் எப்போதும் இங்கிலீஷ் தான் பேசும். மனுஷ்யன் நல்லவர், பெரிய ஸம்ஸாரி, கொஞ்சம் பயந்தவர்; அதிலே கொஞ்சம் லோகோபகார சிந்தை. வேதபுரத்து வைதிக, லௌகிக பிராம்மணர்களை ஒன்று சேர்த்துத் தான் சொன்ன திதியில் ஆவணியவிட்டம் வகையராக்கள் நடத்தும் படியாகவும், தன்னைக் கும்பகோண மடத்தார் பொருள் தெரிந்து மதிக்கும்படியாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், அந்தத் தொழிலையே லோகோபகாரமாகவும் நடத்தி வருகிறார்.

கொஞ்சம் ஆசார திருத்தக் கொள்கையுடையவர். ஆனால் அதிலும் பயக் கலப்பில் மெதுவாகத்தான் வேலைசெய்து கொண்டு வருகிறார். பரபரப்புக் கிடையாது. பொறுமையுடையவர். நிற்க.

இன்று காலையில் நான் நம்முடைய ஸ்நேகிதராகிய இடிப்பள்ளிக்கூடம் பிரமராய வாத்தியாரைக்கண்டு, புரோஹிதர் வந்தால் என் வீட்டுக்கு ஆவணியவிட்டம் பண்ணுவிக்கும்பொருட்டு அனுப்பும்படி சொன்னேன். பிரமராயர் சொன்னார்:—"பெரிய வாத்தியாருடைய தங்கைக்கு உடம்பு சரியில்லை. மிகவும் ஆபத்தான நிலையிலிருப்பதாகக் கேள்விப்பட்டேன். என்ன செய்யலாம்? ஐயோ, பாவம்! கிழவி; அந்த ஆனி பெஸன்ட் வயது இவளுக்குமிருக்கும். அதனாலே அந்த வாத்தியார் இன்றைக்கு உபாகர்மம் பண்ணிவைக்கக் கோயிலுக்கு வருவதே ஸந்தேஹம். அவருடைய மருமகன் குமார சாஸ்திரி வருவான். நான் கோயிலுக்குத் தான் போவேன். ராமராயர் உங்களைப்போலே, உபாகர்மம், உபநயன, விஷயங்களை வீட்டுக்குள்ளேயே ரஹஸ்யமாக நடத்தி வருகிறாராகையால், அந்தக் குமார சாஸ்திரி என் வீட்டுப் பக்கமாக வருவான். நான் உங்கள் வீட்டுக்கு உடனே அனுப்புகிறேன்" என்று சொன்னார்.

நான் அவரிடம், "அதென்ன, ஸ்வாமி, இந்த ப்ராமண ஸமூகத்தில் வருஷந்தோறும் இன்றைக்கு ஆவணியவிட்டமா, நாளை ஆவணியவிட்டமா என்கிற சண்டை நியதமாகவே நடந்துகொண்டு வருகிறதே. காரணமென்ன?" என்று கேட்டேன்.

அவர் சொன்னார்:—"ஹிந்துக்களிலே பத்தாயிரத்தில் ஒன்பதினாயிரத்துத்தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேர் அபண்டிதர்கள். பஞ்சாங்கமே முழுவதும் தப்பிதம். உத்தராயண தக்ஷிணாயனக் கணக்கில் 22 நாள் தப்பிதம் போட்டிருக்கிறான். இருபத்திரண்டுக்கும் இருபத்து மூன்றுக்கும் நடுவிலே. அதாவது, பஞ்சாங்கம் பிரயோசனமில்லை. நம்முடைய வருஷ மாஸம் தேதி எல்லாம் தப்பிதம். இதைக் கவனிக்க நாதனைக் காணோம். ஆவணி

யவிட்டச் சண்டை நிர்த்தூளி படுகிறது! அஹோ அபண்டிதாஹ்" என்றார்.

"பத்திரிகைகளிலே நடக்கிறதே, அதைத் தவிர இந்த உள்ளூர்ப் பண்டிதர்களுக்குள்ளே வேறே லடாயிகள் உண்டோ?" என்று கேட்டேன்.

"அதை என்ன சொல்வேன், போம்! அத்வைத ஸமாஜமே மிகவும் த்வைத ஸ்திதியில் இருக்கிறது. உச்சி குமாஸ்தா முத்து ஸாமி அய்யர் வியாழக்கிழமை தான் பூணூல் போட்டுக்கொள்ள வேண்டும் என்ற கக்ஷி. மணிலாக்கொட்டை மஹாதேவய்யர் வெள்ளிக்கிழமைக் கக்ஷி. வெங்காயக்கடை வெங்கு அய்யர் தெரியுமோ உமக்கு? அவருக்கு முத்துஸாமி அய்யரே திதி, நக்ஷத் திரம் எல்லாம். யாராவது நம்மிடம் வந்து இன்றைக்குத் திதி என்ன என்று கேட்டால் நாம் பஞ்சாங்கத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன் என்போமா மாட்டோமா? அந்த இடத்தில் அவர் முத்துசாமி அய்யரைப் பார்த்து வந்து சொல்கிறேன் என்பார். அவர்கூட இந்தத் தடவை ஸர்க்கார் ரஜா ஆவணியவிட்டத்துக்காக வெள்ளிக் கிழமைதான் விடுகிறார்களென்பதையும், அவருடைய மாப்பிள்ளை ஸர்க்கார் உத்தியோகத்தில் இருப்பதாலும் அவருக்கு வியாழக் கிழமை ரஜா கிடையாதாகையாலும், வெள்ளிக்கிழமையன்று உபாகர்மம் நடத்தினால்தான் மாப்பிள்ளையும் தானும் சேர்ந்து நடத்த முடியும் என்பதையும் உத்தேசித்து, இந்த நிலைமையில் முத்துசாமி அய்யரைக் காட்டிலும் கும்பகோணமே ப்ரமாணம் என்பதாகத் தீர்மானம் செய்துவிட்டார். ருஷ்யாவிலே குழப்பம் எப்படியிருக் கிறது, ஸ்வாமி?" என்று பிரமராயர் முடித்தார்.

"அது எக்கேடும் கெட்டுப் போகிறது. மேலே உபாகர்ம விஷயத்தைச் சொல்லும்" என்றேன்.

இந்த ஸமயத்தில் கோயில் தர்மகர்த்தா வீரப்ப முதலியாரும் அங்கே வந்து சேர்ந்தார். வந்தவர் என்னை நோக்கி;—"இன்று கோயிலில் பிராமண அட்டகாசம் அதிகமாக நடக்கும். நீங்கள் கோயிலிலே பூணூல் போட்டுக் கொள்ளுகிறீர்களா? வீட்டில்தானா?" என்று கேட்டார். ஆமென்றேன். வீரப்ப முதலியார் பேசத் தொடங்கினார்:—"பூணூலை எடுத்துப் போடுங்கள். இந்தியா முழுவதும் ஒரே ஜாதி, ஒரே ஆசாரம் என்று செய்துவிட வேண்டும். அதுவரை பிராமண சபை, அப்ராமண சபை, ரெட்டி சபை, வன்னியர் சபை, முதலியார் சபை இந்த இழவெல்லாம் தீராது. ஒரே கூட்டம் என்று பேசு; பூணூலென்ன, கீணூலென்ன! வீண்கதை!" என்றார். பிரமராயர் ஸமாதானப்படுத்தப் போனார். வீரப்ப முதலியார் சொல்லுகிறார்:—"எல்லாம் தெரியும், தெரியும். யாரோ ஒரு ராஜாவாம். அவன் பூணூலை ஒரு தட்டிலும், பொன்னை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்துப் பார்த்தானாம். பூணூல் கீழே இழுத்ததாம். பொன் மேலே போய்விட்டதாம். இதென்ன மூட்டை! எல்லோரையும் சரி

சமானமாக்கு. ஐரோப்பியர்களைப்போலே நடப்போம். ஜப்பானிலே அப்படித்தான்- ஜாதி வித்தியாசத்தை முதலிலே நீக்கிவிட்டுத்தான் மறுவேலை பார்க்கத் தொடங்கினார்கள். ஜப்பானியரைப் போலே இருப்போம்'' என்றார்.

''ஹிந்துக்களைப் போலவே யிருப்போம்'' என்று நான் சொன்னேன்.

''எப்போதும் பிரிவும் சண்டையும் இருக்கவேண்டும் என்பது உம்முடைய கக்ஷியோ?'' என்று வீரப்ப முதலியார் கேட்டார்.

''வேண்டியவர்களெல்லாம் பூணூல் போட்டுக் கொள்ளலாம். அது யாகத்துக்கு வெளியடையாளமாக அந்தக் காலத்தில் ஏற்பட்டது. இஷ்டமான ஹிந்துக்களெல்லாரும் பூணூல் போட்டுக் கொள்ளலாம். மற்றவர்கள் ஸரிஸமானமாக இருக்கலாம். பூணூல் இருந்தாலும் ஒன்றுபோலே, இல்லாவிட்டாலும் ஒன்றுபோலே. ஹிந்துக்களெல்லாம் ஒரே குடும்பம். அன்பு காப்பாற்றும். அன்பே தாரகம்'' என்றேன்.

''அன்பே சிவம்'' என்று பிரமராயர் சொன்னார். இவ்வளவுடன் காலை சபை கலைந்தது.

## 9. பிராயச் சித்தம்

### ''பிஞ்சுக் காளிதாசன்'' எழுதியது.

*[கப்பல் பயணம் செய்தால் ஜாதி விலக்கு என்றிருந்த காலத்தில் பாரதியார் எழுதிய நாடகம் இது.*

*இந் நாடகம் முதலில் ''சுதேச மித்திர''னிலும் பிறகு ''கதா மாலிகா'' என்ற நாலிலும் வெளி வந்தது.*

*''பிஞ்சுக் காளிதாசன்'' என்பதும் பாரதியார் உபயோகித்த பல புனை பெயர்களில் ஒன்று.]*

### நாடகத்தில் வரும் பெயர்வழிகள்

1. *வெங்கு சாஸ்திரி :* குண்டனூரில் புரோஹிதர். இடையன் குடி நிஷ்கர்ம ஸ்வாமிகள் மடத்துக்குக் குண்டனூரில் இருக்கும் தோப்புக் குத்தகைக்காரர்.
2. *நாணி :* வெங்கு சாஸ்திரியின் மனைவி.
3. *புனலூர் குள்ள நரி அய்யர்.*
4. *இங்கிலீஷ் ராமச்சந்திரய்யர் :* குண்டனூரில் பணக்காரர்; ''மேரி குட்ரிச்'' (ஸீதா தேவி) என்ற ஆங்கிலேயப் பெண்ணை விவாகம் செய்து கொண்டவர்.

5. ஸீதா தேவி : "மேரி குட்ரிச்" என்ற ஆங்கிலப் பெண். ராமச்சந்திரய்யரை மணம் செய்து கொண்ட பின் ஸீதா தேவி என்ற புதுப் பெயர் வைத்துக் கொண்டாள்.

6. மாஷாபூப தீக்ஷிதர் : இடையன்குடி மடத்து ஸர்வாதிகாரி.

7. ராமச்சந்திர அய்யருடைய வேலையாள்.

## இடம்: குண்டனூர்.

### முதற் காட்சி

[குண்டனூரில், வெங்கு சாஸ்திரி வீட்டில் மேற்படி சாஸ்திரியும், குள்ளநரி அய்யரும் வார்த்தை சொல்லிக் கொள்கிறார்கள்.]

வெங்கு சாஸ்திரி : எனக்கு முந்தியே தெரியும். இந்த ராமச்சந்திரன் குழந்தை முதலாகவே கெட்டுப் போனான். இவன் அப்பன் இருந்தான். அப்பனும் நாஸ்திகவாதி தான். சிராத்த காலத்தில் நம்மைப் போலொத்தவர் போனால், "மந்திரத்தை ஓட்டும்; சீக்கிரம் கதை முடியட்டும்" என்பான். குறுக்குக் கேள்வி போடுவான். நெய்ப் பாத்திரத்தை ஹோம நெருப்புக்கு வடக்கே வைக்கச் சொன்னால், தெற்கே வைத்து விட்டு, "எந்தப் பக்கம் வைத்தாலென்ன? தெற்கே வைத்தால் குடி கெட்டுப் போகுமா?" என்பான். "தெய்வமில்லை" என்று சொல்லுவான். அப்பன் யோக்கியதை இப்படி. பிள்ளை விஷயம் சொல்ல வேண்டியதே இல்லை. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயுமென்று கேட்டதில்லையா? இந்த ராமச்சந்திரன் குழந்தையாக இருக்கையிலே இவனுக்கு ஒரு முதலிப் பையனுடன் சிநேகம். வீட்டிலே பிராமண நியமம் ஏதேனும் இருந்தாலன்றோ, பிள்ளைக்கு வெளியே பயமிருக்கும்? இந்தப் பயல் மேற்படி முதலிப் பிள்ளை வீட்டில் மெள்ள மெள்ள தோசை தின்னத் தொடங்கினான். படிப்படியாக ஏற வேண்டியது தானே? இங்கிலீஷ் படிப்பில் ஏதோ பரீக்ஷை தேறினான். தலை மயிரைக் கத்திரித்துக் கொண்டான். சீமைக்குப் போனான். வெள்ளைக்காரப் பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டான். அங்கே கலெக்டர் பரீக்ஷைக்கு வாசித்தான். தேறவில்லை. இப்போது யாதொரு வேலையுமில்லாமல், வெள்ளைக்கார சம்சார சஹிதமாக நம்மூரிலே வந்து சோபிக்கிறான். தகப்பனார் வைத்து விட்டுப் போன சொத்தில் முக்காற் பங்கு கிருஷ்ணார்ப் பணமாய் விட்டது. இன்னும் காற் பங்கிருக்கிறது. அதுவும் சீக்கிரத்தில் தொலைந்து போகும்.

குள்ளநரி அய்யர் : நேற்று அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். பூணூல் போட்டுக் கொண்டிருக்கிறார். ஸந்தியா வந்தனாதி நித்ய

கர்மானுஷ்டானங்களெல்லாம் தவருமல் செய்து வருகிருர். அந்த வெள்ளைக்காரச்சி பிராமண ஸ்திரீகளைப் போலே புடவை யுடுத்திக் கொண்டிருக்கிருள். நெற்றியில் குங்குமம் வைத்துக் கொள்ளு கிருள். தமிழ் நன்ருகப் பேசுகிருள். வாழையிலை போட்டு இரண்டு பேரும் பக்கத்திலே உட்கார்ந்து சாப்பிடுகிருர்கள். பிராமணப் பிள்ளைதான் சமையல் செல்கிருன்.

வெங்கு சாஸ்திரி: அடடா! இது வேறு வைபவமா? அந்தப் பிராம் மணப் பிள்ளைக்கு 'மிலிடரி' (மாம்ஸச்) சமையல் எப்படி வந்தது?

கு. அய்யர்: சீச்சீ! சும்மா சொல்லி விடலாமா? வாய் புளிக்குமா மாங்காய் புளிக்குமா என்று வார்த்தை சொல்லுதல் எளிது. சாதம், குழம்பு, ரசம், பச்சடி, பாயஸம், காய்கறிகள், அப்பளம், வடை, போளி முதலிய வைதிக வஸ்துக்களைத் தவிர மற்றதைத் தொடுகிறதேயில்லை. புருஷனும் அப்படி, பெண்டாட்டியும் அப்படி. சொத்து நஷ்டமென்று சொன்னதும் வீண் கதையைத் தவிர வேருென்றுமில்லை. அந்த வெள்ளைக்காரப் பெண்ணுக்குப் பத்து லக்ஷமோ, பதினைந்து லக்ஷமோ கையிருப்பு. அதை யெல் லாம் இவர் வசத்தில் ஒப்புவித்து விட்டாள். ரிஷியும் ரிஷி பத்தினி யும் போலக் குடியிருக்கிருர்கள்.

வெ. சாஸ்திரி: உளருதேயுங் காணும். அநேக ரிஷிகளைப் பார்த்தீர்! இந்தப் பயல் குடிக்கிருனென்று கூடக் கேள்வி.

கு. அய்யர்: சீச்சீ! தோஷம் சொல்லலாமா? ஊரிலே ஆயிரம் பேர் ஆயிரம் வார்த்தை சொல்லுவார்கள். அதையெல்லாம் நம்பிவிட லாமா? தங்களைப் பற்றிக்கூட இவ்வூரிலே பலர் பலவித அபவாதம் சொல்லுகிருர்கள். உங்கள் மைத்துனி சொத்து விஷயமொன்று, வட்டிக் கடைச் செட்டி விஷயமொன்று, மூலைத் தெரு தாசி விஷயமொன்று.

வெ. சாஸ்திரி: மெள்ளச் சொல்லும் காணும். அகத்துக்காரி காதிலே விழுந்தால் உம்மை இரண்டு துண்டாக்கிப் போடுவாள்.

[வெங்கு சாஸ்திரியின் மனைவியாகிய நாணி வருகிருள்.]

நாணி: என்ன சங்கதி? ஏது, கண்டவர்களிடத்திலெல்லாம் என்னை தூஷிப்பது தான் உமக்கு வேலையோ? நான் வெட்டிப் போடுவே னென்கிறீரே, நான் யாரை வெட்டினேன்? உங்கம்மாவை வெட்டி னேனு? உங்கக்கா இருக்கிருளே, மஹராஜி, அவளை பகவான் தான் துண்டு துண்டாக நறுக்க வேண்டும். நான் யாரை வெட்டினேன்?

வெ. சாஸ்திரி: பேசாதடி பயித்தியமே. விஷயம் தெரியாமல் கூ கூவென்று கத்துகிருயே. உன்னை யார் என்ன சொன்னுர்கள்?

அந்த ராமச்சந்திரன் விஷயமாக ஏதோ வார்த்தை சொல்லிக் கொண்டிருந்தோம்.

*நாரணி:* சரி, சரி, சரி, உமக்கு வார்த்தை கிடைத்ததோ இல்லையோ, இனிமேல் கொண்டாட்டம் தான். எதற்காக அவனை வந்தவர்களிடத்திலெல்லாம் தூஷிக்கிறீர்? அவன் வெள்ளைக்காரியைக் கலியாணம் பண்ணிக் கொண்டால் உமக்கென்ன, பச்சைக் காரியைக் கலியாணம் பண்ணிக் கொண்டால் உமக்கென்ன? உமக்குப் பத்து காபூல்காரியைக் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சொன்னால் சம்மதம். நானுச்சுதென்று தலையில் அக்ஷதையைப் போட்டுக் கொண்டு மணையிலே உட்காருவீர். உம்மை யாரும் விரும்புவாரில்லை. குப்பைக்குடி சேஷனொருவன்தான் என்னைத் தள்ள இடமில்லாமல் உம்முடைய காலிலே கொண்டு தள்ளினான்.

*வெ. சாஸ்திரி:* சமயம் தெரியாமல் உளருதே. அவர் சொல்ல வந்ததைக் கேட்போம்.

*[பிறகு ஏதோ கிசுகிசென்று பேசிக் கொள்ளுகிறார்கள். காதில் படவில்லை.]*

## இரண்டாம் காட்சி

*[இங்கிலீஷ் ராமச்சந்திரய்யர் வீட்டில் அவரும் அவர் மனைவி ஸீதாதேவி (மேரி குட்ரிச்) என்பவளும், குள்ளநரி அய்யரும் பேசிக் கொள்ளுகிறார்கள்.]*

*ராமச்சந்திர அய்யர்:* என்ன, குள்ளநரி அய்யரே, சாஸ்திரி என்ன சொல்லுகிறார்?

*குள்ளநரி அய்யர்:* காரியத்தை நடத்தி விடலாமென்று சொல்லுகிறார். மடத்தாரையும் கைக்குள்ளே போட்டுக் கொண்டால் நல்லதென்று சொல்லுகிறார்.

*ராம:* பணம் எவ்வளவு கேட்கிறார்?

*கு. அய்யர்:* தனக்கு மாத்திரம் பதினாயிர ரூபாய் வேண்டுமென்கிறார்.

*ராம:* பதினாயிரமா! (இங்கிலீஷில்) மேரீ, டியர், காதில் விழுகிறதா?

*ஸீதாதேவி:* பெரிய காரியமில்லை.

*ராம:* பதினாயிர ரூபாய் செலவு செய்து வேடிக்கை பார்க்கலாமா? இது நியாயமா?

*ஸீதாதேவி:* நேர்த்தியான வேடிக்கை, லக்ஷ ரூபாய் வரை செலவிடலாம். இனிமேல் எந்தச் செலவும் என்னிஷ்டப்படி செய்ய வேண்டாம். இந்த ஒரு செலவு மாத்திரம் என் சொற்படி நடக்கட்டும். இனிமேல் ஒற்றைக் காசாக இருந்தாலும் நீ இட்டது சட்டம்.

*[வேலையாள் வருகிறான்.]*

வேலைக்காரன் (ராமச்சந்திரய்யரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துச் சொல்லுகிறான்):—சாஸ்திரியார் வீட்டுப் பிள்ளை இந்தக் கடிதத்தைத் தங்களிடம் கொடுக்கச் சொல்லி என்னிடம் கொடுத்தார்.

ராம: அவனெங்கே?

வேலை: போய் விட்டார். பதில் குள்ளநரிச் சாமி மூலமாக அனுப்பச் சொல்லி விட்டுப் போனார்.

ராம: சரி, நீ போ.

*[வேலையாள் போய் விடுகிறான். ராமச்சந்திர அய்யர் கடிதத்தைப் பிரித்து வாசிக்கிறார்.]*

ராம: கேட்டீரா, குள்ளநரி அய்யரே?

கு. அய்யர்: சாஸ்திரியார் கடிதந்தானே?

ராம: ஆமாம், வாசிக்கிறேன் கேளும். (சாஸ்திரியின் கடிதத்தை வாசிக்கிறார்.) "சிரஞ்சீவி ராமச்சந்திரனுக்கு சர்வா பீஷ்டமுண்டாகட்டும்! வெங்கு சாஸ்திரி அநேக ஆசீர்வாதம். இன்று ஸாயங்காலம் நமது வீட்டுக்கு இடையன் குடியில் எழுந்தருளியிருக்கும் சதுர்தச லோகாசார்யராகிய நிஷ்கர்ம ஸ்வாமிகளுடைய ஸர்வாதிகாரியான மாஷாபூப தீக்ஷிதர் தவணை வசூலுக்கு வருவதாக இப்போதுதான் ஆள் வந்து சொல்லிவிட்டுப் போனான். உன்னுடைய கிருகத்துக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். தீக்ஷிதர் வரப்போகிறபடியால் நின்றுவிட்டேன். நாளை அவசியம் உன்னை வந்து பார்க்கிறேன். மடத்துக்கு ரூபாய் 2,000 செலுத்த வேண்டும். கையில் ஒரு காசுகூட இல்லை. பிள்ளை கலியாணத்தில் அளவுக்கு மேலே செலவு செய்துவிட்டேன். ஆகையால் இக் கடிதம் கண்டவுடன் குள்ளநரி அய்யர் மூலமாக ரூபாய் 2,000 கொடுத்தனுப்ப வேண்டும். மடத்து ஸர்வாதிகாரிக்கு என் விஷயத்தில் மதிப்பும் நம்பிக்கையும் ஏற்பட்டால் அதிலிருந்து நம்முடைய காரியத்துக்குப் பலவித அனுகூலமுண்டாகும். உன்னுடைய பத்தினியை நம்மகத்துக்காரி வந்து ஸந்திக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றாள். உன்னுடைய மாமனாரை நான் குழந்தையாக இருக்கும்போது மலையாளத்தில் பார்த்திருக்கிறேன். பிற்பாடுதான் அவர் சீமைக்குப் போனதும் அங்கே குடித்தனம் போட்டதும், இந்தப் பெண் பிறந்ததும்—எல்லாம். பிராம்மணப் பெண்ணாக இருந்தாலும் உன்னுடைய பத்தினியாகிய ஸீதை சீமையில் பிறந்தமையால் வெள்ளைக்கார மேனி யேற்பட்டிருப்பதைக் கண்டு இந்த ஊரில் சில மூடர் நீ வெள்ளைக்காரப் பெண்ணை விவாகம் செய்துகொண்டு வந்ததாகக் கூறுகிறார்கள். ஏற்கனவே, விஷயம் தெரிந்தவனாகையால், நான் அப்படி வார்த்தை சொல்வோரை அப்போதைக்கப்போது கண்டித்துக் கொண்டு வருகிறேன். நீயோ லௌகிகம் தெரிந்த பிள்ளை. உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. குள்ளநரி

அய்யரிடம் சீக்கிரம் பணம் கொடுத்தனுப்பவேண்டும்.''—இவ்வித மாக, சாஸ்திரி எழுதியிருக்கிறார். குள்ளநரி அய்யரே, உம்முடைய கருத்தென்ன?

*கு. அய்யர்*: சாஸ்திரி பொருளாசை கொண்டவர். ஆனால் சொன்ன காரியத்தைச் செய்து முடிப்பார். நல்ல தந்திரி.

*ராம*: அப்படியானால் இப்பொழுதே உம்மிடம் பணம் கொடுக்கிறேன். அவரிடம் கொடுத்துக் கையெழுத்து வாங்கிக்கொண்டு வாரும்.

*கு. அய்யர்*: உடனே செய்கிறேன்; ஆக்ஷேபமென்ன?

*[ராமச்சந்திரய்யர் குள்ளநரி அய்யரிடம் 2,000 ரூபாய் கொடுத்தனுப்புகிறார். எல்லோரும் கலைந்து செல்கிறார்கள்.]*

### மூன்றாம் காட்சி

*[வெங்கு சாஸ்திரி வீட்டில், வெங்கு சாஸ்திரியும், குள்ளநரி அய்யரும், மடத்து ஸர்வாதிகாரி மாஷாபூப தீக்ஷிதரும் பேசிக் கொள்ளுகிறார்கள்.]*

*மாஷாபூப தீக்ஷிதர்*: தாங்கள் இந்த ஸமயத்தில் இந்த ஆயிர ரூபாய் கொடுத்தது மடத்துக்கு இனும் கொடுத்தது போலே. ஸ்வாமிகளுடைய ஸ்ரீ நக்ஷத்திரமும் ஆதி நிஷ்கர்மாசார்யர் திருநாளும், இரண்டும் அடுத்த மாஸத்தில் சேர்ந்துள்ளன. செலவதிகம். தாங்கள் அவசியம் உத்ஸவத்திற்கு வரவேண்டும். உங்களுக்கென்று தனியாகப் பார்த்து நல்ல காசி சால்வை வாங்கி வைத்திருக்கிறது. ஸந்நிதானத்தில் அடிக்கடி உங்களுடைய வார்த்தை வரும். சாஸ்திர சம்பத்தும், லௌகிக தந்திரமும், குரு பக்தியும், யோக்கியதையும், நாலும் தங்களிடத்தில் சேர்ந்திருப்பதுபோல் வேறு யாரிடத்தும் இல்லையென்று ஸந்நிதானத்தில் பலதடவை உத்தரவாகியிருக்கிறது.

*வெ. சாஸ்திரி*: தங்களுடைய கடாக்ஷமிருந்தால், ஸந்நிதானத்துக் கடாக்ஷ முண்டாகிறது. அவ்விடத்துக் கடாக்ஷத்தால் ஸாக்ஷாத் பரமசிவனுடைய கடாக்ஷ முண்டாகிறது. தங்களுடைய கடாக்ஷத்தினால் நான் பாக்கியசாலியானேன்.

*கு. அய்யர்*: சாங்கீபுரத்தில் போன மாஸம்-வைதிக பண்டிதர்களின் சபை நடந்ததே. அதில் கப்பல் யாத்திரை நிஷேதமென்று முடிவு செய்யப்பட்டது. தவறி யாரேனும் செய்துவிட்டால் அதற்குப் பிராயச்சித்தம் எப்படி? தீக்ஷிதரவர்களும் சாஸ்திரிகளும் கலந்து யோசனை பண்ணி எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

*[மாஷாபூப தீக்ஷிதரும் வெங்கு சாஸ்திரியும் இதன் பிறகு தமக்குள் சம்பாஷணை செய்துகொள்ளு*

கிருர்கள். இவர்களுடைய வார்த்தையின் கொச்சை ஸம்ஸ்கிருதமெல்லாம் பண விஷயம், தமிழ் பிராயச்சித்த விஷயம். படிப்போர்க் குதவியாக நாம் இங்கு மேற்படி ஸம்ஸ்கிருத வசனங்களுடன் தமிழ் மொழிபெயர்ப்புக் காட்டி இருக்கிறோம்.]

மா. தீக்ஷிதர்: அஸ்ய வாக்யம் ஸபலம் வா ந வா. (இவருடைய வாக்கியத்தில் பயனுண்டா?) பிராயச்சித்தம் எட்டு வகைப்படும். பிராம்மண பிராயச்சித்தம், க்ஷத்திரிய பிராயச்சித்தம், வைசிய பிராயச்சித்தம், சூத்திர பிராயச்சித்தம், உத்தர பிராயச்சித்தம், பூர்வ பிராயச்சித்தம், பஸ்சிம பிராயச்சித்தம், தக்ஷிண பிராயச் சித்தம் ஆக எட்டு.

வெ. சாஸ்திரி: யுஷ் மதர்த்தே ரௌப்யஸஹஸ்ரம் (உங்களுக்கு ஆயிர ரூபாய்.) உலூகராஜர் ஸ்மிருதியிலே பிராயச்சித்த விஷயம் விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறது.

மா. தீக்ஷிதர்: ஸஹஸ்ரத்வயம் தாத்வ்யம் (இரண்டாயிர ரூபாய் கொடுக்கவேண்டும்.) கடல் ஏழு. அதில் இந்த லவண சமுத்திரத்தை (உப்புக் கடலைத்) தாண்டுவதுதான் குற்றம். மற்றபடி பாற்கடல், தயிர்க் கடல், நெய்க் கடல், கள்ளுக் கடல் முதலியவற்றைத் தாண்டிப் போனால் தோஷமில்லை. அதற்குப் பிராயச்சித்தம் வேண்டியதில்லை.

வெ. சாஸ்திரி: ஸஹஸ்ரோபரி பஞ்ச சதம் ஸாத்யம் (ஆயிரத்து ஐநூறு முடியும்.) மஹாவிஷ்ணுவே பாற்கடலுக்கு நடுவிலே போய்ப் படுத்துக்கொண்டிருக்கிறார். அவருக்குப் பிராயச்சித்தம் சொல்லப்படவில்லை. உப்புக் கடல் மாத்திரம்தான் தோஷம்.

மா. தீக்ஷிதர்: ததுபரித்விசதம் (அதற்குமேல் இருநூறு வேண்டும்.) ஹனுமார் உப்புக் கடலைத் தாண்டிப் போனார். ஆனால் அவர் அதி சீக்கிரமாகத் தாண்டிவிட்டபடியால் நித்திய கர்மானுஷ்டானங் கள் தவறவில்லை. மேலும் அவர் கப்பலில் போகவில்லை. இந்தக் காலத்து ஜனங்கள் கப்பலிலே போகிறார்கள். அதுதான் குற்றம். இதை பரத்வாஜர் நன்கு எடுத்துக் கூறியிருக்கிறார்.

வெ. சாஸ்திரி: விஷயத்தைப் பேசுவோம். இந்த ஊரில் விசுவ நாத கனபாடி இருந்தாரே தெரியுமா? உங்களுக்குத் தெரியாது. அவர் இறந்துபோய் நெடுங்காலமாய்விட்டது. அவர் பிள்ளை ராமச்சந்திரய்யர் சீமைக்குப் போய்ப் பெரிய செல்வத்துடன் வந்திருக்கிறார். வைதிக ஆசாரங்களிலே ஒரு தவறுதல்கூடக் கிடையாது. நியம நிஷ்டைகளெல்லாம் நம்மைக் காட்டிலும் சிரத்தையுடன் செய்து வருகிறார்கள். அவருடைய ஸம்சாரம் மலையாளத்துப் பக்கம். அந்தப் பெண்ணுடைய பிதாவும் சீமை யிலே போய் உத்தியோகம் பண்ணினார். குழந்தைப் பிராயத்தில்

அங்கே போயிருந்தபடியால் அந்தப் பெண் நிறத்தில் நல்ல வெள்ளையாக இருப்பாள். தமிழ் நன்ருகப் பேசுகிருள். பூஜை புனஸ்காரம், ஆசார விஷயங்களில் ஸாக்ஷாத் உலூகராஜருடைய வாத்தியார் ஸம்சாரத்திற்கு ஸமானமாக விளங்குகிருள். இருவரையும் பிராயச்சித்தம் பண்ணி பிராம்மண கோஷ்டியில் சேர்க்க வேண்டும். தாங்களிருந்து நடத்திவைக்க வேண்டுமென்பது என்னுடைய அபேக்ஷை.

மா. தீக்ஷிதர்: குடிலம் இகம் ஸர்வம்: மஹ்யம் பஞ்ச ஸஹஸ்ரம் தாதவ் யமேவ (இதெல்லாம் திருட்டு வார்த்தை. எனக்கு ஐயாயிரம் கொடுத்துவிடவேண்டும்.) சரி. பிராயச்சித்தம் செய்து விடலாம். ஆக்ஷேபமில்லை. "ப்ராம்ஹணு மம தேவா!" (பிராமணர் எனக்கு தெய்வம்) என்று ஸ்ரீமந் நாராயணனே சொல்லுகிருர். அப்படியிருக்கையில் யாரும் பிராமண பதவியிலிருந்து நழுவக்கூடாது. நழுவினுலும் மறுபடி சேர்ந்துகொள்ளவேண்டும். பிராயச்சித்தம் மிகக் கடினமானது. பணம் சரியாகச் செலவிட்டால் நடத்தலாம்.

வெ. சாஸ்திரி: அதி லோபேந கர்யோ நரசோ பவிஷ்யதி. (மிதமிஞ்சி ஆசைப்பட்டால் காரியம் கெட்டுப் போகும்.) இந்தப் பெண்ணுடைய பெயர் ஸீதா தேவி. பிராம்மண ஸ்திரீகளிலும் உத்தம ஸ்திரீயினிடம் இருக்கவேண்டிய லக்ஷணங்களெல்லாம் அவளிடம் பொருந்தி யிருக்கின்றன. குல முத்திரை அழியுமா?

மா. தீக்ஷிதர்: சதுஸ் ஸஹஸ்ரம் தீயதாம். நசேத் அஹம் தஸ்ய கார்யஸ்ய விரோதிபவிஷ்யாமி. (நாலாயிரம் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் நான் அந்தக் காரியத்திற்கு விரோதம் செய்வேன்.) பிராயச்சித்தம் நடத்துவதற்கு முன் ஒரு வாரம் ராத்திரி போஜனம் கூடாது. முப்பதுக்கு மேற்போகாமல் பழங்கள் தின்னலாம். நாலு படிக்கு மேலே போகாதபடி பால் குடிக்கலாம். அன்றைய தினம் ஹோமங்கள் பிராமண ஸந்தர்ப்பணம், கோதானம், பூதானம், ஸுவர்ண தானம், குரு தானம், சய்யா தானம், கன்யாதானம் முதலிய தானங்கள் நூற்றெட்டுக்குக் குறையாமல் செய்யவேண்டும். ஆசார்ய ஸம்பாவனை ஸர்வ பாவங்களுக்கும் சிறந்த பிராயச்சித்தமாகும். அதுவும் நடத்தவேண்டும். நவக்ரக பூஜை, அஷ்ட நாகவிரதம், ஜலஸஹஸ்ரநாமம், பூக ஹோமம், விடம்ப யாகம் முதலான கார்யங்களும் செய்ய வேண்டும். மொத்தம் ஐம்பதினுயிரம் செலவாகும். ராமச்சந்திரய்யர் செய்வாரா?

கு. அய்யர்: செய்வார்.

வெ. சாஸ்திரி: அவசியம் செய்வார். அப்படியே நடத்திப் போடுவோம். குள்ளநரி அய்யரே, ஐம்பதினுயிரம் தயாராக வைத்துக் கொண்டிருக்கும்படி ராமச்சந்திரய்யரிடம் சொல்லும். நாலு தினங்

கள் கழிந்தவுடன் ஸாமக்கிரியைகள் சேகரிக்க வேண்டும். வைதிகர்களுக்கெல்லாம் கடிதம் எழுதவேண்டும்.

கு. அய்யர் : அப்படியே செய்கிறேன்.

[கலைந்து செல்லுகிறார்கள். மறு மாஸம் நல்ல லக்னமொன்றில் பிராயச்சித்தம் நடத்துவதாக நிச்சயமாய்விட்டது.]

## 10. கதவு

### "காளிதாசன்" எழுதுவது

*[அன்பே வழி என்ற கருத்துடைய "கதவு" என்ற இக்கதை 1917-ஆம் ஆண்டு டிஸம்பர் 12-ஆந்தேதி வெளியான "சுதேச மித்திரன்" வருஷ அனுபந்தத்தில் பிரசுரமாயிற்று.*

*சமீப காலத்தில், "கல்கி" தீபாவளி மலரில் 1957-ஆம் ஆண்டு வெளியாயிற்று.]*

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவன் தன்னுடையமந்திரியை நோக்கி, "மூலம் எது?" என்று கேட்டான். மந்திரி யோசனை பண்ணிப் பண்ணிப் பார்த்தான். ராஜா எதனுடைய மூலத்தை விசாரணை செய்கிறான் என்பதே மந்திரியின் புத்திக்குப் புலப்படவில்லை. அந்த ராஜாவிடம் எதையும் திரும்ப விளக்கச் சொல்லிக் கேட்கக்கூடாது. அவனிடம் குறிப்பறிந்து வேலைசெய்ய வேண்டும்.

ஆதலால் மந்திரி சிறிது யோசனை செய்துவிட்டு, "நாளை வந்து சொல்லுகிறேன்" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு போனான்.

அன்று மந்திரி தன் வீட்டுக்கு வந்து, இரவில் போஜனம் செய்யாமல் உட்கார்ந்து யோசனை செய்துகொண்டிருந்தான். அவனுடைய பத்தினி ஒரு பொற்கிண்ணத்தில் பாலும் சோறும் பிசைந்து கொண்டு வந்தாள். இரண்டு கொய்யாப் பழங்களும் கொண்டு வந்தாள். அவன் அவற்றைக் கவனியாமலும் அவளை நிமிர்ந்து பாராமலும் யோசனை செய்து கொண்டிருந்தான்.

"என்ன யோசனை செய்கிறீர்?" என்று மந்திரியின் பத்தினி கேட்டாள்.

"ராஜா ஒரு கேள்வி கேட்டான். எனக்கு ஜவாப் தெரியவில்லை. திகைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று மந்திரி சொன்னான்.

மந்திரியின் பத்தினி, "அது என்ன கேள்வி?" என்று வினவினாள்.

"மூலம் எது?" என்று மந்திரி ராஜாவின் வினாவைத் திருப்பிச் சொன்னான்.

மந்திரியின் மனைவி, "எதன் மூலம்?" என்று கேட்டாள். "அதை ராஜா குறிப்பிடவில்லை" என்று மந்திரி பெருமூச்சு விட்டான்.

அபபோது மந்திரியின் பத்தினி சொல்லுகிருள்:—"உலகத்துக்கு மூலம் ஓம்'' என்ருள்.

சரியென்று சொல்லி அவள் கொண்டுவந்த உணவை உண்டு மகிழ்வெய்தி அன்றிரவு நித்திரை செய்தெழுந்து மறுநாள் ராஜனிடத்தில் மந்திரி போய், "உலகத்துக்கு மூலம் ஓம்'' என்று சொன்ஞன்.

"ஓம் என்பது யாது?'' என்று ராஜா கேட்டான். "அது பரப்ரஹ்ம ஸ்வரூபத்துக்குப் பெயர்'' என்று மந்திரி சொன்ஞன்.

"சரி, ஓம் என்ற மந்திரத்தை முதலாவது கண்டு பிடித்தது யார்?'' என்று ராஜா கேட்டான்.

மந்திரி, 'இதென்னடா பயித்தியங் கொண்டவன் கேட்கிற கேள்விபோல் இருக்கிறதேயன்றி சமர்த்தனுடைய கேள்வியாகத் தோன்றவில்லை. ஓம் என்ற மந்திரத்தை ஆரம்பத்தில் எவன் கண்டு பிடித்தானே! எவன் கண்டான்? இந்த மூடன் நம்மைக் கேட்கிருனே! நாம் எப்படி விடை சொல்லக்கூடும்?' என்று மனஸில் சஞ்சலப்பட்டுவிட்டுக் கடைசியாக முன்போலவே, "நாளை வந்து சொல்லுகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனுன்.

வீட்டுக்கு வந்து தன் மனைவியிடம் ராஜனுடைய கேள்வியைச் சொல்லி, "இந்த ஸங்கடத்துக்கென்ன செய்யலாம்?'' என்று கேட்டான்.

அப்போது மந்திரியின் மனைவி, "நம்முடைய நகரத்துக்கு மேற்கே இரண்டு காதம் தூரத்தில் ஒரு மலை இருக்கிறது. அந்த மலையில் ஒரு குகையில் மௌன ஸ்வாமிகள் என்பதாக ஒரு பரதேசி இருக்கிருர். அவரிடம் போய்க் கேட்டால் இதற்கு விடை எழுதிக் காட்டுவார்'' என்று சொன்ஞள்.

மறுநாள் பொழுது விடிந்தவுடனே, மந்திரி பல்லக்கில் ஏறிக் கொண்டு மலைக்குப் போய் மேற்படி மௌன ஸ்வாமியைக்கண்டு, "ஓம் என்ற மந்திரத்தை ஆரம்பத்தில் யார் கண்டு பிடித்தது?'' என்று கேட்டான்.

அவர் பின்வருமாறு கையினுல் மணல்மேல் எழுதிக்காட்டினுர்:

"இந்த மந்திரம் ஆதியில் பராசக்தியால் பாமசிவனுக்கு உபதேசம் செய்யப்பட்டது. அதன் குறிப்பே விநாயகர். செவி பெரிதாகவும் வாய்மூடியும் விநாயக முத்திரை தரித்து வீடேறி எவன் சக்தி உபாசனை செய்கிருனே அவனுக்கு மூலாதாரத்தில் ஓம்கார மந்திரம் தெரியும்படி விநாயகர் கருணை செய்வார். இது அநாதியான மந்திரம். ஆனுல் பூமண்டலத்தில் இது முதலாவது அகஸ்தியருடைய புத்திக்குப் பிரகாசப்பட்டது.''

இங்ஙனம் மௌனஸ்வாமி கையால் எழுதிக் காட்டினதை மந்திரி ஓர் ஏட்டில் எழுதுவித்துக் கொண்டு ராஜனிடம் கொடுத்தான்.

ராஜா, "அந்த மௌன ஸ்வாமியிருக்கும் இடத்துக்கு நான் நேரில்போய் அவரிடம் சில கேள்விகள் கேட்கவேண்டும்'' என்று சொல்லி மந்திரியையும் கூட்டிக்கொண்டு, இருவருமாக மௌன ஸ்வாமி இருக்கும் குகைக்கு வந்து சேர்ந்தார்கள்.

ராஜா மௌன ஸ்வாமியிடம் கேட்டான், "மூலம் எது?'' என்று. அப்போது மந்திரியை நோக்கி மௌன ஸ்வாமி கண்ணைக் காட்டினார்.

மந்திரி, "உலகத்துக்கு ஓம்காரமே வேர்'' என்றான்.

அதற்கு ராஜா, "உம்மைக் கேட்கவில்லை. நீர் சும்மா இரும். நான் மௌன ஸ்வாமியிடம் இன்னும் தெளிவான மறுமொழியை எதிர்பார்க்கிறேன்'' என்றான்.

அப்போது மௌன ஸ்வாமி எழுதிக் காட்டுகிறார்: "ஓம்காரமே சிருஷ்டியின் காரணம். ஓம்காரமாவது காதல்—ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ளத்தொடர்பு. அதனால் படைப்புண்டாகிறது. அந்தக் காதலை ஸாமான்ய மனுஷ்ய வியாபாரமாகக் கருதி நடப்போர் மனுஷ்யர்; மிருக வியாபாரமாகக் கருதி நடப்போர் மிருகங்கள்; தேவ வியாபாரமாக—அதாவது ஆத்ம சம்பந்தமாக, அதாவது ஸதியாகிய பத்தினியை சக்தியாகவும் தானேயாகவும் எண்ணி நடப்போர் தேவர். இந்த அறிவே ஞானம். அன்பைத் தவிர வேறு ஞானம் கிடையாது. யேசுகிறிஸ்துநாதர் அன்பின் அவதாரமாக வந்தவர். அவர் சொன்னார், நானே கதவு என்று. அதாவது அன்புதான் கதவு. அதைத் திறந்தால் விடுதலையாகிற மாளிகைக்குள்ளே பிரவேசிக்கலாம்'' என்று எழுதிக் காட்டினார்.

இன்பத்தை அடைய வேண்டுமானால் அதற்குத் தானாகிற கதவைத் திறந்து அன்பு வடிவமாக நிற்பதே உபாயம் என்பது இக்கதையின் தாத்பர்யம். சக்தி துணை.

# III. கட்டுரைகள்

## 1. தென்றலுடன் பிறந்த பாஷை

*[ஐம்பத்திரண்டு வருஷங்களுக்கு முன், நம் நாட்டில் தாய் மொழிப் பற்றின்றி ஆங்கில மோகம் தலைக்கேறியிருந்த காலத்தில், ஆங்கிலப் பண்டித மணிகள் பிரெஞ்சு, ஜெர்மன், இதாலியன் முதலிய மொழிகளைப் பயின்று இடர்ப்படுவதைக் காட்டிலும் தமிழ் மொழி பயில்வதில் செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும் என்று லண்டன் மா நகரில் ஓர் ஆங்கிலேயர் ஒரு பெரிய சபை முன் கூறினார். அறிஞர் ஜி. யு. போப் என்பவரே அந்த ஆங்கிலேயர். அவரது பிரசங்கத்தைப் படித்த "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய அய்யர் "தமிழ் பாஷையின் இனிமை" என்ற தலைப்பில் ஒரு குறிப்பெழுதி, ஆங்கில மோகம் கொண்ட தமிழர்கள் தமிழின் மேன்மையை அறியாது தமிழைக் கேவலமாய்ப் பேசி நடப்பதைக் கண்டு மனம் வருந்தினார்.*

*இந்தக் குறிப்பைக் கண்டவுடன் பாரதியாருக்குத் தமிழைப் புறக்கணிக்கும் நம்மவர் மீதுள்ள இயல்பான வெறுப்பு கோபமாக மூண்டது. உடனே, "இந்தியா" வாரப் பத்திரிகையில், 1906-ஆம் ஆண்டு செப்டம்பர் 29-ஆந் தேதி இதழில், "தென்றலுடன் பிறந்த பாஷை" என்ற இந்தக் குறிப்பை எழுதினார். தமிழே அறியாமல் தமிழில் இலக்கிய அழகேயில்லை என்று கூறும் கனவான்களை பாரதியும் தமது குறிப்பில் வன்மையாய்க் கண்டிக்கிறார்.*

*இக் குறிப்பு வந்த காலத்தில் "இந்தியா" பத்திரிகை சென்னையில் நடந்து வந்தது. இக் குறிப்பைப் பிற்காலத்தில் "கலைமகள்" பத்திரிகையின் 1941-ஆம் ஆண்டு ஜூலை இதழில் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் எடுத்து வெளியிட்டிருக்கிறார். "கலைமக"ளிலிருந்து இங்கே தரப்படுகிறது.]*

"தமிழ்ப் பாஷையின் இனிமை" என்ற தலைப் பெயருடன் சென்னை, "சுதேசமித்திரன்" பத்திரிகையிலே இனியதோர் குறிப்பு எழுதப்பட்டிருக்கின்றது. அதனை மற்றோரிடத்திலே எடுத்துப் பிரசுரித்திருக்கிறோம். தென்றலுடன் பிறந்த தமிழ் மொழியின் இனிமையைப் பற்றி டாக்டர் ஜி. யு. போப் என்னும் புகழ் பெற்ற விற்பன்னர் கொண்டிருக்கும் மதிப்பை அதில் எடுத்துக் காட்டியிருப்பது தமிழர்கள் அனைவரும் கண்டு மகிழத் தக்கதாக இருக்கின்றது. ஆங்கிலப் பெண்களின் இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்

திற்கும், அபிருசிக்கும் தமிழைப் போன்ற பொருத்தமுடையது வேறெந்த பாஷையும் இல்லையென்று போப் கூறுகிறார். தற்காலத்திலே நம் நாட்டவர்கள் நமது அருமைத் திருமொழியின் சுவையை வளர்க்க முயலாமல் அதன் இன்பமெல்லாம் பாழாக விட்டிருப்பதைப் பற்றி மேற்படி குறிப்பெழுதியவர் மிகுந்த கோபமுணர்த்தி இருக்கின்றார். நாம் அந்த விஷயங்களில் நமக்கேற்பட்டிருக்கும் அன்புகளைப் பல வாரங்களின் முன்பு ஒரு தடவை விஸ்தாரமாக எழுதியிருக்கிறோம்.

பொறுப்பென்பதே அற்ற சில மூட வாலிபர்கள் தாம் அரைகுறையாகக் கற்றிருக்கும் அன்னிய பாஷைத் தருக்கு மேலிட்டவர்களாகித் தமிழ் மொழியே இறந்துபோய்விட வேண்டுமென்றும் கூறுவதை நன்கு கண்டித்துப் பேசியிருக்கிறோம். இவர்கள் கிடக்க, மற்றப்படிப் பொதுவாக இந்நாட்டில் ஆங்கிலம் கற்றோரெல்லாம் சுபாஷாபிமானம் என்பது மிகவும் குன்றியிருப்பது அன்றி, அதன் நயமறியாது திட்டுவதை நினைக்கும்பொழுது நமக்கு வருத்தமுண்டாகிறது. இதன் சம்பந்தமாகச் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய மஹா வித்வான் ஸ்வாமிநாதையர் சொல்லிய வார்த்தையொன்று நமது நெஞ்சை விட்டு ஒருபோதும் அகல மாட்டாது. மேற்படி காலேஜ் தமிழ்ச் சங்கத்தில் ஒரு 'மீட்டிங்' நடந்தது. தமிழ்ப் பாஷையின் அருமையைப் பற்றி ஏதோ பிரஸ்தாபம் வந்தது. அப்போது ஸ்வாமிநாத ஐயரவர்கள் எழுந்து பின்வருமாறு பேசினார்:— "ஆங்கிலேய பாஷையின் இலக்கிய நூல்களில் எத்தனையோ அருமையான கருத்துக்கள் ததும்பிக் கிடப்பதாகச் சொல்கிறார்கள். அந்தப் பாஷை எனக்குத் தெரியாது. அதனால் அவ் விஷயத்தில் ஒரு விதமான அபிப்பிராயமும் என்னால் கொடுக்க முடியாது. என்றபோதிலும் மேற்கண்டவாறு சொல்வோர் தமிழ்ப் பாஷையிலே அவ்விதமான அருமையான விஷயங்கள் கிடையாவென்று சொல்லும் பொழுது உடன் எனக்கு வருத்தமுண்டாகிறது. இவ் வகுப்பினர்களுடன் நான் எத்தனை முறையோ சம்பாஷணை செய்திருக்கிறேன். அந்தச் சமயங்களிலே நான் இவர்களது தமிழ் வன்மையைப் பரிசோதனை புரிந்திருக்கிறேன். இவர்கள் அத்தனை சிறந்த பண்டிதர்களென்று எனக்குப் புலப்படவில்லை. பழங் காலத்துத் தமிழ் நூல்களிற் பயிற்சி யில்லாத இவர்கள் அவற்றைப் பற்றி இழிவான அபிப்பிராயம் கொடுப்பது தான் வெறுக்கத் தக்கதாக இருக்கின்றது" என்று அப் பண்டிதர் முறையிட்டார். வாஸ்வந்தானே? ஆனையையே பார்த்திராத குருடனா அதன் நிறம் முதலியவற்றைப் பற்றி ஓர் அபிப்பிராயம் கொடுக்க வேண்டும்? "போப் முதலான விற்பன்னர்கள் இவர்கள் இருக்கும் திசை நோக்கிக் காறியுமிழும் வண்ணமாக" நம்மவர்களிற் சிலர் நடந்து கொள்கிறார்களென்று மேற்கூறப்பட்ட "மித்திரன்" குறிப்பில் எழுதப்பட்டிருப்பதை நாம் முற்றும் அங்கீகாரம் செய்கிறோம்.

"சுதேசமித்திர"னில் வெளிவந்த குறிப்பு வருமாறு:

### தமிழ் பாஷையின் இனிமை

["மித்திரன்", 1906 ஸெப்டம்பரில் வெளிவந்த குறிப்பு]

பாற் கடலிலே பிறந்த மீன்கள் பாலைப் பெரிதாகப் பாராட்டுவது வழக்கமே கிடையாதென்பது நெடுங் காலமாக வழங்கி வரும் உண்மையாகும். அவ்வசனக் கருத்து முற்றும் மெய் யென்பதற்குச் சிறிது காலத்தின் முன்பு டாக்டர் போப்பையர் லண்டனில் ராயல் ஏஷியாடிக் சபையார் முன்பு செய்த உபந்நியாசத்திலே நல்லதோர் திருஷ்டாந்தம் அகப்பட்டது. திருக்குறள், திருவாசகம் என்னும் தெய்வீக நூல்களை இங்கிலீஷிலே மொழி பெயர்த்தவரும் அநேக இலக்கண நூல்கள் பிரசுரித்திருப்பவரும் ஆகிய டாக்டர் போப்பைத் தமிழ் நாட்டாரில் பெரும்பான்மையோர் நன்கு அறிவார்கள். இவர் சொல்கிறார்:— "அநேகர் (அதாவது அநேக ஆங்கிலேயர்கள்) பிரெஞ்சு, ஜெர்மன், இடாலியன் முதலிய பாஷைகளைப் போய்ப் படித்துக்கொண்டு இடர்ப்படுகிறார்கள். இப்படிச் செலவிடப்படும் காலத்தைத் தமிழ் கற்பதில் செலவிட்டால் எவ்வளவோ விசேஷமாகும். நான் அநேக (ஆங்கில) மாதர்களுக்குத் தமிழ் கற்பித்திருக்கிறேன். அவர்களுடைய இதழ் நயத்திற்கும், செவி நுட்பத்திற்கும் அபிருசிக்கும் அந்தப் பாஷையைப் போல் எந்தப் பாஷையும் ஒத்து வருவதில்லை'' என்றார். இவர் தமிழ்ப் பாஷையின் இனிமையையும் பெருமையையும் குறித்து எவ்வளவோ சிலாக்கியமாகப் பேசியிருக்கிறார். ஆனால் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மவர்களோ அந்தப் பாஷையின் இனிமையைப் பாதுகாக்க வேண்டுமென்றேனும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றேனும் சிறிதும் முயல்வதில்லை.

தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களிற் சிறுபாலார் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றுணர்ந்தவர்கள் இவ் விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள். இவர்கள் தமிழ்ப் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும், இவ் விஷயத்தில் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பக்ஷத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கிக் காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

## 2. தமிழில் எழுத்துக் குறை

[உலகில் எந்த மொழியும் தனித்து வளர்வதில்லை. கால, தேச, வர்த்தமானத்தால் மொழிகளும் பாதிக்கப்பட்டு மாறுதலடைகின்றன. தமிழ் மொழி இதற்கு விதிவிலக்கல்ல. தமிழால் ஸம்ஸ்கிருதம், கிரேக்கம், ஆங்கிலம் முதலிய மொழிகள் புதுச் சொற்களையும் உச்சரிப்புகளையும் பெற்றது போலவே தமிழும்

*பிற மொழிச் சொற்களால் புதுச் சொற்களையும் உச்சரிப்பு களையும் பெற்றுள்ளது, பெற்று வருகிறது.*

*தமிழ்ப் பத்திரிகை அலுவலகங்களில் உள்ளவர்கள் செய்தி களில் வரும் புதுப் புதுப் பெயர்களைத் தமிழ் மக்கள் சரிவர அறிந்து கொள்ளும்படி எழுதுவதற்கு முடியாமல் தவிப்பது பத்திரிகைக்காரர்கள் அறிந்த விஷயம். பிற மொழிகள் பல வற்றிலுள்ள பல உச்சரிப்புகளுக்குத் தமிழில் ஏற்ற எழுத்துகளோ குறிகளோ இல்லாததால் அவற்றை அப்படியே சரியான உச்சரிப் புடன் எழுத முடிவதில்லை.*

*நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குமுன் இதே குறையைப் பற்றி பாரதியார் எழுதியுள்ள இரண்டு கட்டுரைகளை மதுரை வி. ஜி. ஸ்ரீநிவாஸன் அவர்கள் தேடிக் கண்டு பிடித்து, "கலைமகள்" பத்திரிகையில் வெளியிட உதவினர். இக் கட்டுரைகள் "கலை மக"ளில் 1941-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியாயின.*

*பிற மொழிச் சொற்களை உச்சரிக்கத் தாம் கண்டு பிடித் திருக்கும் குறிப்பு முறையைப் பற்றி இக் கட்டுரைகளில் பாரதி யார் பிரஸ்தாபிக்கிறர். ஆனல் அவரது குறிப்பு முறை எங்கும் வெளியிடப் படாததால் நமக்குக் கிடைக்காமற் போய் விட்டது நமது துரதிர்ஷ்டமாகும்.]*

## 1

**ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காளி, மஹாராஷ்ட்ரம், குஜராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், முதலிய மற்ற பாரத பாஷைகளி லெல்லாம் வர்க்க எழுத்துக்கள் உண்டு.**

அதாவது, க-ச-ட-த-ப என்ற ஐந்து வல்லெழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வேறுபாடுகள் இருக்கின்றன. திருஷ் டாந்தமாக:

| வடசொல் | பொருள் |
|---|---|
| 1. பரம். | மேலானது |
| 2. பலம். (ப = Ph) | பயன் |
| 3. பலம். (ப = b) | வலிமை |
| 4. பாரம் (ப = bh) | சுமை |

வெவ்வேறு எழுத்துக்களை முதலாகக் கொண்ட இந்த நான்கு சொற்களையும் தமிழில் வழங்கி வருகிறோம். ஆனல், "எல்லி செட்டி லெக்க ஏகலெக்க" என்பது போல எல்லாவற்றிற்கும் ஒரே "ப" தான் போடுகிறோம்.

ஆனால் ஸம்ஸ்க்ருதச் சொற்களை ஸம்ஸ்க்ருத வழக்கப்படி நாம் உச்சரிக்க வேண்டிய அவசியம் இல்லையாதலால், நமக்கு அந்த எழுத்துக்கள் வேண்டுவதில்லை யென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். சரி, நியாயமென்று வைத்துக் கொள்வோம்.

வெளிநாட்டு ஊர்களின் பெயர்களையும் மனிதர்களின் பெயர்களையும் நாம் சரியானபடி சொல்ல வேண்டுமா, அதுவும் வேண்டாமா? "சுதேசமித்திரன்" பத்திரிகையை சென்ற 15 வருஷங்களாகப் படித்து வரும் ஓர் ஐயங்கார் நமது நிதானக் கட்சித் தலைவராகிய ஸ்ரீ கோகலேயின் பெயரைத் தப்பாக உச்சரிப்பதை நான் பார்த்திருக்கிறேன். 'தங்கம்' என்ற சொல்லில் 'க' உச்சரிப்பது போல அப்பெயரின் முதலெழுத்தாகிய "கோ" (Go)வை மெலிதாகச் சொல்ல வேண்டும். பிராமணர் "கோபுரம்" என்று சொல்லும் போது "கோ"வை எப்படிச் சொல்லுகிறார்களோ அதுபோலக் "கோகலே"யின் முதலெழுத்தைச் சொல்ல வேண்டும். இரண்டாவதெழுத்தாகிய "க" என்பதை "க்ஹ" என்ற ஒலி இலேசாகத் தோன்றும்படி அழுத்தி உச்சரிக்க வேண்டும். "மகம்" என்று வைதிகப் பிராமணர் சொல்வது போலே, ஷை ஐயங்கார் இதை "கோஹலே" என்று சொன்னார். அவர் மேல் குற்றமில்லை; "சுதேசமித்திரன்" மேலும் குற்றமில்லை; தமிழில் எழுத்துக் குறைகிறது.

பெள்ளாரி, குத்தி, பனாரஸ், பம்பாய்—என்று நாட்டு ஊர்ப் பெயர்களைக்கூட நாம் விபரீதமாக எழுதும்படி நேரிட்டிருக்கிறது. இதற்கென்ன விமோசனம்?

கல்கத்தாவில் இருக்கும்போது ஸ்ரீமான் அரவிந்த கோஷ் (இவர் பெயரையும் தமிழில் சரியாக எழுத இடமில்லை. "Ghosh" என்பதை "Kosh" என்று எழுத நேரிடுகிறது!)—ஸ்ரீமான் அரவிந்தர் தமிழ் கற்றுக்கொள்ள விரும்பினாராம். அங்குத் தென்னாட்டு மனிதர் ஒருவர் இவருக்கு நமது அரிச்சுவடி முழுதும் கற்றுக் கொடுத்தார். முதல் பாடப் புஸ்தகமும் நடந்தது. அப்படி யிருக்கும்போது ஒருநாள் ஒரு தமிழ் நாட்டுப் பத்திரிகை அகப்பட்டது. அதில், "பீரேந்திரநாத் தத்த குப்தர் வழக்கு" என்று மகுடமிட்டு ஒரு வியாஸம் எழுதியிருந்தது.

அதைப் பார்த்துவிட்டு அரவிந்தர் தமது தமிழ் வாத்தியாரிடம், "இதென்ன" என்று கேட்டார்.

வாத்தியார், "இது ஒரு பெங்காளிப் பெயர்" என்று சொன்னாராம்.

அரவிந்தர் மயங்கிப் போய், "எப்படி?" என்று கேட்டார்.

வாத்தியார், "Birendranath Dutta Gupta" என்று அச்சொல்லைப் பெங்காளி ரூபத்திலே சொன்னார்.

"இங்கிலீஷ் தெரியாத கிராமத்துத் தமிழர் இச்சொல்லை எப்படி வாசிப்பார்கள்?" என்று அரவிந்தர் கேட்டார்.

"நீர் வாசித்தது போலவே Pirendiranata Tatta Kuptar (t...த) என்றுதான் வாசிப்பார்கள்" என்று வாத்தியார் சொன்னாராம்.

இன்றும் அரவிந்தர் இந்தக் கதையைச் சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறார்.

நமது பத்திரிகைகளில் ஐரோப்பாவிலுள்ள நகரங்கள், மலைகள், முதலியவற்றின் பெயர்களைப் பார்க்கும்போது கண் கூசுகிறது. அதைத் தமிழ் மாத்திரம் அறிந்த தமிழர் எப்படி வாசிப்பார்களென்பதை நினைக்கும்போதே காது கூசுகிறது.

இங்கிலீஷ் அக்ஷரத்தில் ப்ரெஞ்ச், அரபி, பார்ஸி, ஸம்ஸ்க்ருதம் முதலிய பாஷைகளின் பதங்கள் சிலவற்றை எழுதுவதற்கு இங்கிலீஷ் அரிச்சுவடி இடங்கொடாததைக் கருதிச் சில புதிய குறிகள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லா ஐரோப்பிய பாஷைகளுமே அந்நிய பாஷைகளிலுள்ள விசேஷ உச்சரிப்புகளுக்கு இணங்கும்படி சில தனிக் குறிகள் ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டிருக்கின்றன.

நாமும் அப்படியே சில விசேஷக் குறிகள் ஏற்பாடு செய்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகும்.

ஏற்கனவே நான் இந்தக் குறையை நீக்கும் பொருட்டாக மிகவும் சுலபமாக ஐந்து நிமிஷங்களில் யாரும் கற்றுக்கொள்ளக் கூடிய சில குறிகள் தயார் செய்து வைத்திருக்கிறேன். ஆனால் இப் புதிய வழியைத் தமிழ் நாட்டுப் பத்திராதிபர்களும் பிறரும் அறியும்படி துண்டுப் பத்திரிகைகள் போட்டு வேலை செய்வதற்கு வேண்டிய சௌகர்யங்கள் எனக்கு இன்னும் சில மாதங்கள் கழிந்த பிறகு தான் ஏற்படும்.

இப் புதிய உபாயத்தை அனுஸரிப்பதால் இப்போது நாமெல்லோரும் எழுதி வரும் முறைமைக்கு யாதொரு ஸங்கடமும் உண்டாகாது. புதிய குறிகள் தெரியாதவர்கள்கூட வழக்கம் போலவே படித்துக் கொண்டு போவார்கள். யாருக்கும் எவ்விதமான சிரமமும் ஏற்படாது. நமது பாஷைக்கு நமது அரிச்சுவடி போதும். அந்நிய தேசப் பெயர்கள் முதலியவற்றுக்காக மாத்திரமே இப் புதிய முறை ஏற்பட்டது. எனது புதிய முறையை இப்போதே அறிந்து கொள்ள விரும்புவோர் கீழே கண்ட என் விலாசத்துக்கு இரண்டணா தபால் முத்திரை வைத்தனுப்பினால் அவர்களுக்கு இம் முறையை நல்ல கையெழுத்தில் தெளிவாக எழுதுவித்து அனுப்புகிறேன்.

## 2

ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களைத் தமிழ் அரிச்சுவடியில் நமது பூர்விகர் சேர்த்திருக்கிறார்கள். இவற்றைச் சேர்க்காவிட்டால்

தமிழ் நேரே பேச முடியாமலும் எழுத முடியாமலும் போய்விடு மென்று அவர்களுக்கு அச்சமுண்டாயிற்று.

தொல்காப்பியர் கட்டின அரிச்சுவடி போதாத வண்ணமாக நமது பாஷை வளர்ச்சி பெற்றவுடனே நமது முன்னோர்கள் மேற்காட்டிய எழுத்துக்களையும் சேர்த்தார்கள்.

நாமும் அப்படியே நமக்கு இக்காலத்தில் ஏற்படும் உச்சரிப்புக் கஷ்டங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு, கிரந்த எழுத்துக்களைச் சேர்க்கலாமென்று சில பெரியோர் கருதுகிறார்கள். ஆனால் அதைக் காட்டிலும் அடையாளங்கள் போடுவது சுலபமான வழி.

இப்போதுள்ள அரிச்சுவடியிலே பழகிய தமிழருக்கு மேற்படி அடையாளங்களால் எவ்வித ஸங்கடமும் நேரிடாது. தப்பாகவோ, சரியாகவோ வழக்கம்போல வாசித்துக்கொண்டு போவதை அடையாளங்கள் தடுக்க மாட்டா. கிரந்த எழுத்துக்களைக் கொண்டு சேர்த்தால் பாதி படிக்கும்போதே நிறுத்திவிட நேரிடும்.

ப்ரெஞ்ச், இங்கிலீஷ் முதலிய ஐரோப்பிய பாஷைகளிலும், ஹிந்தி முதலிய நமது நாட்டுப் பாஷைகளிலும்—உயிருள்ள பாஷைகளிலே வளர்வனவெல்லாவற்றிலும்—உச்சரிப்புத் திருத்தத்தைக் கருதிப் பழைய எழுத்துக்களில் சில அடையாளங்கள் சேர்த்து சௌகர்யப் படுத்திக் கொள்ளுகிறார்கள். இதனால் எழுத்தின் வடிவத்தில் யாருக்கும் சந்தேகம் நேரிடாது. இந்த எளிய வழியை அனுசரித்து நமது தமிழ் மொழி விசாலமடைய வேண்டுமென்பதே என்னுடைய விருப்பம்.

## 3. தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள்

### [பி. ஏ. பரீட்சை தேறிய ஒரு வாலிபனுடைய எண்ணங்கள்]

*[தமிழ் மொழியில் தற்காலத்துக்கேற்ற விஞ்ஞான, யந்திர சாஸ்திரப் பதங்கள் இல்லை; தமிழில் இலக்கிய அழகும் குறைவு என்று பேசுபவர்களுக்கு இக் கட்டுரையின் மூலம் பதிலளிக்கிறார் பாரதி. ஆங்கிலப் படிப்புப் படித்துத் தேறிய ஒரு வாலிபனுக்கும் ஒரு தமிழ்ப் புலவனுக்கும் சம்பாஷணை என்ற முறையில் எழுதப் பட்டுள்ள இக் கட்டுரைமுதலில் "இந்தியா" பத்திரிகையில் வெளி வந்தது. பிற்காலத்தில், 1941-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் "கலைமகள்" பத்திரிகை இதை மீண்டும் வெளியிட்டது.]*

வாலிபன்: தமிழ்ப் பாஷை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை. இது சீக்கிரம் அழிந்தால்தான் நமது நாடு பிழைக்கும்.

புலவன்: ஏதப்பா, உனக்கு இந்தப் பாஷையிலே இவ்வளவு கோபம் உண்டாயிருக்கின்றது?

வா: நவீன நாகரிகத்தினுடைய சங்கதி உமக்குத் தெரியாதையா! மனித ஜாதி குரங்கு நிலைமையினின்றும் மாறிக் காட்டு மனிதன் ஸ்திதிக்கு வந்தபோது உங்கள் தமிழ்ப் பாஷை ஏற்பட்டது. இப்போது உலகம் எவ்வளவோ மாறிப் போய்விட்டது. மனிதனுடைய அறிவு எவ்வளவோ விசாலமடைந்து போயிருக்கிறது. வானத்தில் உள்ள கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியவற்றையெல்லாம் மனித அறிவு ஊடுருவிச் சென்றிருக்கிறது. பதார்த்தங்களின் அணுக்களிலே எல்லாம் மனுஷ புத்தி நுழைந்து சென்றிருக்கிறது. பிரகிருதி விநோதங்களை மனிதன் எவ்வளவோ அதிகமாக ஆராய்ச்சி செய்திருக்கிறான். சமுத்திரத்து ஜலம் அனைத்தையும் குடத்துக்குள்ளே எப்படி அடைக்க முடியும்? அதுபோலவே அளவின்றி விரிந்து கிடக்கும் மனுஷ புத்தியின் நவீன சலனங்களை எல்லாம் உம்முடைய பண்டைக் காலத்துத் தமிழிலே கொண்டு நுழைப்பது மிகவும் பிராணுபத்தாய் இருக்கின்றது நாம் நாகரிகம் அடைய வேண்டுமானால் இந்தத் தமிழ் பாஷையை முற்றும் கைவிட்டு விட வேண்டும்.

புல: 'நாம்' என்று யாரையப்பா சேர்த்துச் சொல்கிறாய்? உன் மட்டிலே நீ பேசுவதைப் பார்த்தால் ஞானக் கடலின் கரை கடந்தவனாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். உன்னைப்போல் இங்கிலீஷ் படியாத மற்ற ஜனங்கள் தமிழ்ப் பாஷையை எப்படிக் கைவிட முடியும்? ஒரு பாஷையை நீ மரக்கிளை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? அதை ஜனங்கள் பிடித்துத் தொத்திக்கொண்டு விட மாட்டோம் என்கிறார்களென்று எண்ணுகிறாயா? மனுஷ பாஷைகள் மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்களல்லவோ? தலைமுறை தலைமுறையாய் எத்தனையோ நூற்றாண்டுகளாக ஒரு நாட்டார் பேசிவரும் பாஷை அவர்களின் உயிரோடு ஒன்றி விடுகின்றது. மனித அறிவு வளர்ச்சிக்குப் பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்து கொண்டு வர வர அந் நாட்டின் பாஷையும் விசாலம் அடைந்து வருகிறது. அன்னிய ராஜாங்கம், தாரித்திரியம், சரீர பலக்குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்களால் இப்போது இழிவு கொண்டு போயிருக்கும் தமிழ்நாட்டு ஜனங்கள், ஆங்கிலேயர், முதலிய சுதந்திர நாட்டாரைப் போல் விருத்தி அடைந்து வருதல் அசாத்தியமாக இருக்கிறது என்பது ஒருவாறு மெய்யாக இருக்கலாம். அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்வதிலே என்ன பிரயோஜனம் இருக்கிறது? 'ஆடத் தெரியாத தாசி கூடம் போதாது' என்பது போலக் கதை சொல்லுகிறாயே?

வா: போமையா! பொதுப்படையாகப் பேசிக் கொண்டு போவதிலே என்ன பயன் இருக்கிறது? இப்போது ஐரோப்பியர்கள் பூமி நூல், வான நூல், கடல் நூல், பிராணி நூல், அணு நூல் முதலிய நூல்களிலே எல்லாம் அளவு கடந்த முதிர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மின்சாரம், காந்தம் இவற்றின் குணாதிசயங்களைப் பற்றி நவீன

ஆராய்ச்சி வரம்பு இல்லாதிருக்கிறது. மின்சாரம், நீராவி, என்பவற்றைத் துணையாக வைத்துக்கொண்டு மனித ஜாதியின் சௌகர்யங்களுக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுமாறு ஆயிரக்கணக்கான யந்திரங்களும், புதிய கருத்துக்களும் லக்ஷக்கணக்காக உண்டாயிருக்கின்றன. இவற்றுக்கு எல்லாம் தமிழ்ப் பாஷையிலே பெயரும் கிடையாது, மண்ணும் கிடையாது. இப்படி இருக்க நீர் ஏதோ பொதுப் படையாக உருட்டிக்கொண்டு பேசுகிறீர்?

புல: அடடா! உனது விவகாரத்தின் நுட்பத்தை என்னென்று சொல்வேன்! நீ ஓயாமல் அடுக்கிக் கொண்டு போன நவீன ஆராய்ச்சிக் கதைகள் எல்லாம் தமிழ் நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ்ப் பாஷையிலே வழங்குவதற்குச் சுலபமாகும். தமிழ் நாட்டிலேயோ பொது ஜனங்களுக்கு எழுதப் படிக்கத் தெரிவதுகூட அருமையாய் இருக்கிறது. வயிற்றுப் பிழைப்பே பெரிய கஷ்டமாய் இருக்கின்றது. ராஜாங்கத்தார் பொது ஜனக் கல்விக்கு மிகவும் வெட்கக்கேடான சிறு தொகை செலவிடுகின்றார்கள். சிறுபான்மையோருக்குத் தரப்படும் கல்விகூட அவர்களைக் குமாஸ்தாக்களாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கொடுக்கப்படுவதேயின்றி வேறு எவ்விதமான பெருந் தொழிலுக்கும் தகுதியாக்க அன்று. எனவே இந்நாட்டார் பொதுவாக மிகவும் அறிவு சுருங்கிப் போயிருக்கிறார்கள். இதற்குப் பாஷை என்ன செய்யும்? நீராவியினால் ஓட்டப்படும் ரெயில் வண்டி இந் நாட்டிலே வழக்கமாய் இருக்கிறது. இப்போது பொது ஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக் கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால் தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கிக் கொள்ளவில்லையா? கோவணம் இல்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்கவஸ்திரத்துக்குப் பெயர் கிடையாதென்றால் அதற்கு அவர்களுடைய பாஷையின்மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக் கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால் முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக் கொள்வார்கள். தமிழ் நாட்டிலே தொழில் வகைப்பாடும், ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் பாஷை அன்றைக்கே வளர்ந்துவிடும். இப்படிக்கின்றி இந்தப் பாஷையையே ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லுவது மகா மூடத்தனம் அல்லவா? கண்ணிலே வியாதி கொண்டிருக்கும் ஒருவன் அதன் மூல காரணங்களைத் தெரிந்து கொண்டு ஔஷதப் பிரயோகம் செய்யாமல், இந்தக் கண்களையே ஒழித்துவிட்டு நல்ல பிரகாசமுள்ள இரண்டு பிரான்ஸ் தேசத்துக் கண்கள் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று யோசிப்பது நல்ல அறிவாகுமா? உன் கண்களை நீக்கிவிட்டுப் பிரான்ஸ் தேசத்துக் கண்களை வாங்கி வைத்துக்கொள்வது சாத்தியமா?

வா: ஏனையா சும்மா வளர்க்கிறீர்? நான் சொல்வதன் குறிப்பு உமக்குத் தெரியவில்லையே! தமிழ்ப் பாஷை இயற்கையிலேயே நவீனக் கருத்துக்களுக்குப் பொருத்தம் உடையதன்று. இப்போது

கவிதை விஷயத்தை எடுத்துக் கொள்வோம். இதற்கும் மின்சாரம், காந்தம் முதலிய பூத சாஸ்திர அபிவிருத்திகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாதல்லவா? இதில்கூடத் தமிழ்ப் பாஷை ஏன் இத்தனை சீர்கெட்டு இருக்கிறது? டெனிஸன் முதலிய நவீன ஆங்கிலக் கவிகளையும், சூரியநாராயண சாஸ்திரி முதலிய தமிழ் நாட்டுப் புலவர்களையும் ஒப்பிட்டுப் பாரும். ஆங்கிலப் படிப்பற்ற தமிழ்ப் புலவர்களின் நிலைமை சொல்ல வேண்டியது இல்லை.

*புல:* யோசனையின்றி ஏனடா பேசுகிறாய்? தமிழ்நாடு இப்போது சுதந்திரமும், செல்வமும், சரீர பலமும், மனோபலமும் இழந்து தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது. எனவே இந்நாட்டில் உயர்ந்த கவிஞர் இல்லாமல் போய் விட்டார்கள். நோய் கொண்ட மாமரத்திலே நல்ல பழம் எங்ஙனம் தோன்றும்? மரத்தின் நோயைத் தீர்த்தல்லவோ பிறகு கனியினுடைய ருசியைப் பார்க்க வேண்டும்? தமிழர்களைப் புனிதப்படுத்திப் பிறகு பார்த்தால் தமிழ்ப் பாஷையின் நறுமணம் விளங்கும். தமிழர்கள் நேர்மையாய் இருந்த காலத்தில் திருத்தக்க தேவர், இளங்கோ, கம்பர் முதலிய எண்ணிறந்த தமிழ்ப் புலவர் இருந்து இருந்து அருமையான தெய்வீகப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள்.

*வா:* சும்மா ஸ்தோத்திரம் பண்ணாதேயும்; கம்பன், டம்பன் எல்லாம் நானும் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்:

*புல:* அப்பா, தயை செய்து உளறாதே. காலேஜுகளிலே கம்ப ராமாயணம் சொல்லித் தரப்படும் மாதிரியிலே உனக்கும் உன் போன்றோர்க்கும் தமிழ்ப் புலவர்களிடம் வெறுப்பு ஏற்படுதல் சகஜமேயாம். எனினும், போப் முதலிய ஆங்கிலேய வித்வான்கள் கூடப் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் ஆழ்ந்த கருத்துக்களையும் பெருமைகளையும் கண்டு மிகுந்த வியப்படைகிறார்கள்.

கம்ப ராமாயணத்திலே ஸீதை தனியாக அசோக வனத்திலே இருக்கும்போது ராமபிரான் அவ்வப்போது செய்த செய்கைகளையும் விளையாடிய விளையாட்டுக்களையும் நினைத்து நினைத்து வருந்திக் கொண்டிருப்பதாகச் சில பாடல்கள் சொல்லப்படுகின்றன. அதிலே ஒரு பாட்டை உனக்கு எடுத்துச் சொல்லிப் பொருள் கூறுகின்றேன். அது ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் பெறும்படி கட்டளை இடப்பட்ட காலத்திலேயும், 'ராஜ்யத்தை விட்டு வனாந்தரம் செல்' என்று கட்டளையிடப்பட்ட போதும் ஒரே மாதிரி மனமுடையவனாக முகம் மலர்ந்திருந்த வியப்பை ஸீதை நினைத்துப் பார்த்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது. அப் பாட்டைக் கேள்:—

"மெய்த் திருப்பதமேவென்ற காலையும்
இத்திருத் துறந் தேகென்ற போதிலும்
சித்திரத்தி னலர்ந்த செந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்"

(பாடலின் பொருள் சொல்லுகிறார்.)

பார்த்தாயா? இதிலே என்ன ஓசை நயமும், சொல் நயமும், பொருள் இன்பமும் மலிந்து கிடக்கின்றன. இதை உனக்கு ஒரு திருஷ்டாந்தமாகச் சொன்னேன். இவ்வாறு கம்ப ராமாயணத்திலே ஆயிரக்கணக்கான பாட்டுக்கள் செறிந்து கிடக்கின்றன. மாம்பழம் அழுகி இருக்கும்போது தின்று பார்த்தவன் பொதுப்படையாக மாம் பழமே கெட்ட பொருள் என்று நிந்திப்பது போல, தமிழ்ப் பாஷையும் தமிழர்களும் பதனம் அடைந்து போயிருக்கும் இந்தக் காலத்தைக் கவனித்து விட்டு நீ பாஷையையே குற்றஞ் சொல்லுவது நியாய மன்று. மஹரிஷி பால கங்காதர திலகர் முதலிய மஹான்கள் சொல் லும் வழிகளைப் பின்பற்றி நமது நாடு செல்வமும் பெருமையும் சுதந் திரமும் பெற்ற பிறகு, நமது பாஷை இருக்கும் மாதிரியைப் பார்த்தால் அப்போது ஆச்சரியம் அடையத் தக்க விதமாக இருக்கும்.

## 4. தமிழ் நாட்டில் நாடகம்

*[பாரதியார் தம் காலத்தில் இருந்த தமிழ் நாடக உலகைப் பற்றி எழுதிய கட்டுரை யாயிருந்தாலும், இது தற்காலத்துக்கும் பொருத்தமாக இருக்கிறது. காலம் மாறினாலும் நிலைமை அதிகம் மாறி விடவில்லை.*

*இக் கட்டுரையை, "கலைமகள்" 1943-ஆம் ஆண்டு நவம்பர் இதழிலிருந்து எடுத்து இங்கே வெளியிடுகிறோம்.]*

"தமிழ் நாட்டில் நாடகப் பாட்டுக்கள் நாள்தோறும் நூற்றுக் கணக்காக அதிகப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றிலே தெளிவு, அறிவு வளம், கல்விப் பயிற்சி, சொல் நயம், ரச ஒளி முதலிய லக்ஷணங்கள் கொஞ்சமேனும் காணப்படவில்லை. வண்டிக்காரன் பாட்டு, பாம்புப் பிடாரன் பாட்டு முதலிய பாமரப் பாட்டுக்களிலே இலக்கணப் பிழைகள் இருந்த போதிலும் கவிதா ரஸம் அமைந் திருப்பது காண்கிறோம். இந்த நாடகப் பாட்டுக்கள் வெறும் பாமர மாக இருப்பதுடன் கவிதா ருசி அணுக்கூடக் கலக்காமல் பெரிய பீடையாக ஏற்பட்டிருக்கின்றன. மேலும் தமிழ்ப் பாஷையின் இயல் புக்குப் பொருந்தாத மெட்டுகளில் நாடகக்காரருக்கு எப்படியோ பிரியம் உண்டாகி யிருக்கிறது. இதற்கெல்லாம் விமோசனம் என்ன?" என்று ஒரு தமிழ்க் கவிஞரிடம் கேள்வி போடப்பட்டது. அதற்கு அவர் சொல்லிய மறு மொழியை இங்கு எழுதுகிறேன்.

"இந்த விஷயத்தில் நாடகக்காரரைக் குற்றம் சொல்வது ஞாய மில்லை. பெரும்பாலும் நமது நாட்டில் ஏழை வாலிபர்கள் சங்கீதத் திலும், உல்லாசத்திலும் பிரியமுடையவர்களாக இருக்கும்பொழுது, ஜீவனத்துக்காகவும், சில சமயங்களில் உல்லாசத்தின் பொருட் டாகவும் நாடகங்களிலே சேருகிறார்கள். இவர்களுக்கு ஏராளமான பாட்டு வேண்டியிருக்கிறது. பழைய மெட்டுக்களும் அர்த்தம் தெரி யாத கடுஞ் சொற்களும் இவர்களுக்கு அவசியமில்லை. 'தமிழ்ப்

புலவர்'களிடம் போனால் நிகண்டுக்குக்கூட அர்த்தம் தட்டும்படியான வார்த்தைகள் எழுதிக் கொடுப்பார்கள். சாமான்ய பாஷையில் எழுதும் தொழில் புலவர்களுக்குத் தெரியாது. பெரும்பாலும் இவர்களுக்கு சங்கீதம் தெரியாது. தீவிரமான தாள கதியும், மதுரமான இசையும் உடையனவாய் நடிகனுக்கு உதவக்கூடிய பாட்டுக்கள் நாடகக்காரருக்கு வேண்டும்.

"தவிரவும், தமிழ் சங்கீதம் பல வருஷங்களாகப் புதுமையும் உல்லாஸமும் இழந்து சோர்ந்து இருக்கிறபடியால், நாடகக்காரரும் நாடகம் பார்க்கப் போகும் பொது ஜனங்களும் ஹிந்துஸ்தானி, பார்ஸி மெட்டுகளையே விரும்புகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட மெட்டுகளுக்குச் சரியான பதங்கள் சேர்த்துக் கொடுப்போர் எவ்வளவு மூடராக இருந்தாலும், இவர்களை நாடகக்காரர் ஆவலுடன் ஏற்றுக்கொள்ள நேருகிறது. கவிதா ரஸங்களைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தால், இன்றைக்கு நாடகம் நடக்க வேண்டுமே. இதற்கென்ன செய்வது? புதிய கவிதை புலவர்களிடம் தோன்ற வேண்டும். புதிய மெட்டுகள் தமிழ்நாட்டு சங்கீத வித்வான்கள் ஏற்படுத்த வேண்டும். அப்போது தமிழ் நெறிக்கு இசையாத பார்ஸி மெட்டுகளும், காதைத் தொளைக்கும் பாமரமான பத வரிசைகளும் நாடகத்தை விட்டு நீங்கும்."

## 5. இந்தியாவுக்குப் பொது பாஷை

*[நம் பாரத நாட்டுக்குப் பொது மொழியாக எதைக் கொள்ளலாம் என்பதைப் பற்றித் தற்காலம் விவாதங்கள் பலமாயிருக்கின்றன. ஹிந்தியா, ஆங்கிலமா என்பது ஒரு வாதம். ஸம்ஸ்கிருதமே இருக்கலாம் என்றொரு பழைய வாதமும் உண்டு. "ஒளிர் மணிக் கோவை" என்ற தலைப்பில் "சுதேச மித்திர"னில் பாரதியார் எழுதி வந்த குறிப்புகளில், ஸம்ஸ்கிருதத்தை இந்தியப் பொது மொழியாகக் கொள்ளலாமென்ற கட்சியை ஆதரித்து எழுதியுள்ளார்.*

*இக் கட்டுரை முதலில், "சுதேசமித்திர"னிலும், பிறகு 1942, ஜூன் மாதத்தில் "கலைமகள்" பத்திரிகையிலும் வெளி வந்தது.]*

இந்தியாவுக்குப் பொது பாஷையாக ஹிந்தியை வழங்கலாமென்று ஸ்ரீமான் காந்தி முதலிய பல பெரியோர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் பாரத தேச பக்த சிரோரத்னமென்று கூறத்தக்க ஸ்ரீமான் அரவிந்தகோஷ் முதலிய வேறு பலர் ஸம்ஸ்கிருத பாஷையே இந்தியாவுக்குப் பொதுப் பாஷை யென்றும், நாம் அதைப் புதிதாக அங்ஙனம் சமைக்க வேண்டியதில்லை யென்றும், ஏற்கனவே ஆதி காலந்தொட்டு அதுவே பொதுப் பாஷையாக இயல் பெற்று வருகிறது என்றும் சொல்லுகிறார்கள். திருஷ்டாந்தமாக, ஆங்கிலேயர்

களின் ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்படு முன்னர் தமிழ் நாட்டில் இருந்த ஒரு தமிழரசன் குஜராத்திலிருந்த ஒரு கூர்ஜர மன்னனுக்குக் கடிதம் எழுத நேர்ந்தால் எந்த பாஷையில் எழுதியிருப்பான்? தமிழில் எழுதுவதென்றால் குஜராத்து மன்னனுக்குப் பொருள் விளங்காது. கூர்ஜரத்தில் எழுதுதல் தமிழ் மன்னனுக்கு ஸாத்யமல்ல. எனவே இரண்டு நாட்டுப் பண்டிதர்களும் ராஜ குருக்களும் முக்கிய மந்திரிகளும் ஒருங்கே பயிற்சி பெற்றிருந்ததாகிய ஸம்ஸ்கிருத பாஷையிலேயே அவர்களுக்குள் கடிதப் போக்குவரத்து நடந்ததென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்குகின்றதன்றோ?

ஸம்ஸ்கிருத பாஷையில் படித்துத் தேர்ச்சி பெறுதல் கடினமாதலால் அதைத் தேச முழுமைக்கும் பொதுப் பாஷையாகச் செய்தல் சௌகரியப்படாதென்று சிலர் சொல்கிறார்கள். பழைய வழிப்படி படிப்பதானால் இவர்கள் சொல்வது ஒருவாறு மெய் யெனலாம். ஆனால் இக்காலத்தில் அந் நிலைமை கடந்து சென்று விட்டது. இப்போது பண்டாரகர் என்னும் பம்பாய்ப் பண்டிதர், உபாத்தியாயர் இல்லாமலே ஸம்ஸ்கிருத பாஷையை ஏழெட்டு மாசங்களில் கற்றுக் கொள்ளும்படியான ஆரம்ப நூல்கள் எழுதியிருக்கிறார். இவற்றுள் முதல் புஸ்தகம் ஏற்கனவே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அவ் வழியை இன்னும் சுலபமாகச் செய்யலாம். பஞ்ச தந்திரத்தை அர்த்தத்துடன் மூன்று முறை உருப் போட்டால் எவனும் தட தட வென்று தட்டில்லாமல் ஸம்ஸ்கிருதம் பேசக்கூடிய திறமை பெற்று விடுவான். பாணன், பட்டி முதலிய புலவர்கள் வருந்திச் சமைத்த நடை பழகவே நாளாகும். நாடோடியாக வழங்குதற்குரிய பாஷை பழகுவதற்கு, இயற்கை நடையைத் தழுவி எழுதப்பட்ட பஞ்ச தந்திரம் முதலிய நூல்களே போதும்.

## இந்தியாவின் சங்கீதம்

இந்தியாவுக்குப் பொதுப் பாஷையாக எதிர்காலத்தில் ஸம்ஸ்கிருத பாஷையே விளங்கப் போகின்றதென்று கண்டுகொண்ட மாத்திரத்தில் இந்தியா முழுமைக்கும் பொதுவான சங்கீதம் ஸம்ஸ்கிருத பாஷையிலே தான் அமைந்திருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். பாரத சங்கீத தேவியின் முதற் குமாரராகிய ஸ்ரீ முத்து ஸ்வாமி தீக்ஷிதரவர்கள் ஏற்கனவே அதி அற்புதமான கீர்த்தனங்கள் பல வட மொழியில் செய்தருளியிருக்கிறார். ஒருமுறை ஸ்ரீமான் அரவிந்த கோஷ், தீக்ஷிதர் கீர்த்தனம் ஒன்றைக் கேட்டுவிட்டு இது போல் சொல் நயமும் இசை நயமும் ஒருங்கே இசைந்த பாட்டுத் தாம் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் தம் ஜன்ம முதல் கேட்டதே இல்லையென்று சொன்னார். இந்தத் தீக்ஷித பந்தாவைச் சென்னையில் நாட்டுவதற்கு நம்முடைய 'சுதேசமித்திரன்' பத்திராதிபர் ஸ்ரீ ரங்கசாமி ஐயங்கார் உட்படச் சில மேதாவிகள் முயன்று வருகிறார்களென்று தெரிகிறது. இவர்களுடைய முயற்சி வெற்றி யெய்துக.

## 6. நமது கல்வி முறையிலே ஒரு பெருங்குறை

*[நம் நாட்டுப் பெரியோர்களையும் ஞானிகளையும் மகான்களையும் வீரர்களையும் பற்றி நமது கல்விச் சாலைகளில் தகுந்தபடி போதிக்கப்படுவதில்லை என்று இக் கட்டுரையில் பாரதியார் குறைப்படுகிறார். தாயுமானவர் போன்ற ஞானிகளின் பாடல்களை நமது கல்லூரி மாணவர்கள் அறிவதில்லையே என்று மனம் கசிகிறார்.*

*இக் கட்டுரை, "கலைமகள்" பத்திரிகையால் கண்டு பிடிக்கப்பட்டு 1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இதழில் வெளியிடப் பெற்றது.]*

நமது கல்வி முறையிலே எத்தனையோ குற்றங்கள் இருக்கின்றன. இவற்றுள்ளே ஒரு முக்கியமான குறையைப் பற்றி இங்கே பிரஸ்தாபிக்க விரும்புகின்றோம். நம் பாடசாலைகளிலே இந்நாட்டுப் புராதன மஹான்களையும், வீரர்களையும் பற்றிச் சரியான பயிற்சி அளிக்கப்படுவதில்லை. இந்த விஷயத்தைப் பற்றி எத்தனை பக்கங்கள் எழுதினாலும் போதாது. எனினும் இங்கு அதை மிகவும் சுருக்கமாக விவரிப்பது பயனில்லாத விஷயமாக மாட்டாது.

நம் வாலிபர்கள் பாடசாலைகளிலே சுதேச மஹான்களைப் பற்றி மிகவும் இழிவான எண்ணங் கொண்டு வளர்கிறார்கள். முக்கியமாக, கிறிஸ்தவப் பாடசாலைகளில் இவ் விஷயமாக ஏற்படும் கெடுதிக்கு அளவில்லை. வியாஸர், யாக்ஞ வல்க்யர், சங்கரர் முதலிய ஆயிரக்கணக்கான அவதார புருஷர்களையும், அர்ஜுனன், கர்ணன், விக்ரமன், சிவாஜி முதலிய மஹா வீரர்களையும் பற்றி இவர்கள் கேள்விப்படுகிறதே இல்லை. கேள்விப்பட்டாலும் அவர்களெல்லாம் நவீன நாகரிகம் தெரியாத பயித்தியக்காரர்களென்ற விஷயத்தையே கேள்வி யுறுகின்றார்கள். அவர்கள் நவீன காலத்துப் புதுமைகள் சிலவற்றை அறியாவிடினும் ஒவ்வொரு விஷயத்தில் மிகவும் அருமையான உயர்வு பெற்றவர்களாயிருக்கக் கூடுமென்று நம் இளைஞர்களுக்கு அறிவுறுத்துவதில்லை. ரெயில்வே, தந்தி, மோட்டார் வண்டி முதலிய விஷயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிராததனால் கம்பன் தெய்விகமான கவி யென்பது பொய்யாய் விடுமா? பூமி சூரியனைச் சுற்றி வட்டமிடுகிற தென்ற உண்மையை ஒப்புக் கொள்ளாததனால் ஆதி சங்கரர் மஹா வேதாந்த ஞானி யென்பது தவறாய்ப் போய் விடுமா? நம் காலேஜ் மாணுக்கர்களுக்குள்ளே தாயுமானவர், சங்கரர், முதலியவர்களின் சரித்திரத்தை உணராதவர்கள் எத்தனை ஆயிரம் பேரோ இருக்கிறார்களல்லவா?

இதே விஷயத்தில் இங்கிலாந்தின் நிலைமை எவ்வாறு இருக்கிறதென்பதைச் சிறிது ஆலோசிப்போம். கிறிஸ்து நாதர் மோட்டார் வண்டியையும், தந்தி விநோதங்களையும் அறியாதிருந்த போதிலும், அவர் நல்லொழுக்கம், தெய்விக ஞானம் என்பவற்றில் நிகரற்று

விளங்கினுரென்பது பாடசாலை மாணுக்கர்களுக்கு ஓயாமல் எடுத்து ஓதப்பட்டு வருகின்றது. எல்லாக் காலங்களிலும் ஏதேனும் ஒரு விஷயத்தில் உயர்ச்சி பெற்று விளங்கினவர்களின் சரித்திரங்களெல்லாம் எளிய, தெளிவான நடையிலே எழுதப்பட்டு மாணுக்கர்களுக்குக் காண்பித்து வரப்படுகின்றன. அவர்கள் சிற்சில விஷயங்களிலே அநாரிகமும், அறிவுக் குறைவும் கொண்டிருந்த போதிலும், அவற்றை யெல்லாம் பிரஸ்தாபிப்பதே இல்லை. அவர்கள் இருந்த காலத்தின் மாதிரி யென்பதாகக் கருதி அதை இலேசாக விட்டு விடுவதே மரபாகும்.

தாயுமானவரைப் போன்ற ஞானி ஒருவர் இங்கிலாந்திலே இருந்திருப்பாராஞல் அவரைப் பற்றி அறியாத பாடசாலை மாணுக்கன் எந்த இடத்திலும் இருக்க மாட்டான். அவரது இனிய இசை நிரம்பிய அமிருத கவிகளைக் கற்றேனும், அவரது சரித்திரம் முதலியவற்றைக் கேட்டேனும் அறியாத ஆயிரக்கணக்கான மூடர்கள் தம்மைக் கல்விமான்களென்றும், பட்டதாரிகளென்றும் கூறிக் கொண்டு இந்நாட்டிலே திரிகின்றுர்கள்.

நாம் குழந்தைப் பருவத்தில் ஒரு கிறிஸ்தவப் பாடசாலை உபாத்தியாயருடன் பேசிக் கொண்டிருந்தபோது வியாஸ பகவானைப் பற்றி விவரிக்க நேரிட்டது. அப்போது அந்த உபாத்தியாயர் நம்மை நோக்கி, "உனக்குத் தெரிந்த விஷயங்கள்கூட வியாஸனுக்குத் தெரியாதே! பூமி தட்டையாக ஒரு பாம்பின் தலைமீது நிற்கிறதென்று வியாஸன் நினைத்து வந்தான். உங்கள் முன்னேர்களெல்லாம் அநாகரிக ஜனங்கள்" என்று கூறினுர். அவர் தெய்வாவதாரமென்று தொழும் கிறிஸ்துவும், மஹா ஞானிகளென்று கருதும் ஸென்ட்பால் முதலிய நூற்றுக்கணக்கான மனிதர்களும் அதே மாதிரியானவர்களே என்பதை அந்த உபாத்தியாயர் மறந்து விட்டார். இப்படிப்பட்ட உபாத்தியாயர்களின் கீழ் நம் குழந்தைகள் இருக்குமாஞல் எத்தனை தீமை உண்டாக மாட்டாது? நமது முதலாவது கடமை யாதென்றுல், நம் பாடசாலைகளிலே பரத கண்டத்தின் புராதன மஹாத்மாக்களைப் பற்றி நல்ல பயிற்சி கொடுத்து, இளைஞர்களுக்குத் தேச பக்தி, சௌரியம், ஒழுக்கம் முதலியன ஏற்படச் செய்ய வேண்டும். சிவாஜியைப் பற்றி ஸிங்க்ளேர் எழுதியிருக்கும் குழறு படைகளும் உபநிஷத்துக்களைப் பற்றிப் பாதிரிகள் சொல்லியிருக்கும் அபிப்பிராயங்களும் நம் இளைஞர்களின் மூளையிலே ஏறும்படி விட்டு விடுவோமாஞல் நமது நாட்டிற்கு நாமே பரம சத்துருக்களாக முடிவோம்.

மாதர் :

# 1. நாகரிக வளர்ச்சியிலே ஸ்திரீகளுக்குரிய ஸ்தானம்

*["மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்து வோம்" என்று அனல் கக்கிய கவி பாரதி, நமது பெண்களுக்குக் கல்வி போதிக்க வேண்டும் என்று வாயளவில் சொல்லி நிறுத்தி விடுபவர்களை இக் கட்டுரையில் நையப் புடைக்கிறார். பெண்களே நாட்டின் எதிர்கால மேதைகளை உண்டாக்குகிறவர்கள்; அதற் கேற்றபடி அவர்களுக்குக் கல்வியளித்து பாரத நாட்டில் அர்ஜுனன் போன்ற வீரர்களும் சங்கரர் போன்ற ஞானிகளும் தோன்றச் செய்ய வேண்டாமா என்று கேட்கிறார் கவிஞர்.*

*முடிவாக, தாம் பல்லாண்டுகளுக்கு முன் நிவேதித்தா தேவி யாரைச் சந்தித்தபோது பெண்கள் முன்னேற்றம் பற்றி அவர் கூறிய மொழிகளையும் நினைவுறுத்துகிறார்.*

*"இந்தியா" பத்திரிகையில் தலையங்கமாக வந்த இக்கட்டுரை பிற்காலத்தில் "கலைமக"ளில் 1941 டிஸம்பர் மாதம் வெளியிடப் பெற்றது.]*

நாகரிகம் பெற்று வரும் ஜாதியாருக்கு முதல் அடையாளம் அவர்கள் ஸ்திரீ ஜனங்களை மதிப்புடன் நடத்துவதேயாகும். நாகரிகம் என்ற பதத்தை நாம் சாதாரண அர்த்தத்திலே உபயோகிக்கவில்லை. வெறுமே சில யந்திரங்கள் அதிகப்பட்டு, மோட்டார் வண்டிகள் ஓடுவதனால் மட்டுமே ஒரு காலம் நாகரிக காலமாய் விட மாட்டாது. ஜனங்களுக்குள்ளே பெரும்பான்மையாக இகபர ஞானமும், சற்குணங்களும், பரஸ்பர சகாய சிந்தையும், அதனால் ஏற்படும் சௌகரியங்களும் மிகுதியுறுமானால் அதையே நாகரிக நிலைமையென்று சொல்வோம்.

இப்போது நமது பாரத நாடு உண்மையான நாகரிகத்திலே முதிர்ச்சி பெற வேண்டுமானால் அதற்கு எத்தனையோ சாதனங்கள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் பற்றி இங்கே விவரிக்கத் தொடங்கவில்லை. இங்கே முக்கியமாகப் பேச வந்த விஷயமெல்லாம் நமது நாகரிக முதிர்ச்சியிலே ஸ்திரீகளுக்கு எந்த ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்பதேயாம்.

ஸ்திரீகளுக்குக் கல்வியும் அறிவும் ஊட்டித் தீர வேண்டுமென்ற ஸர்வஜன சம்மதமான பழங் கருத்தை நாம் இங்கே வற்புறுத்தவில்லை. ஆனால் நம்மவர்களிலே அக்கருத்து ஸர்வ சாதாரணமாகப்

போய் விட்டதென்ற போதிலும், அதை நாம் நடத்தைக்குக் கொண்டு வராதிருக்கும் பெருங் குற்றத்தையே இங்கே கண்டிக்க விரும்புகிறோம். கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும், வெள்ளைப் பாதிரிகளின் பள்ளிக்கூடங்களிலும், நம் கன்னியர்களிலே ஒரு சிறு பகுதியாருக்குக் கொடுக்கப்படும் பயனற்ற கல்வியானது அறியாமையைக் காட்டிலும் நூறு மடங்கு கொடியதாகும். நம்மவர்கள் தாமாகவே இவ்விஷயத்தில் பிரயத்தனங்கள் செய்து ஊருக்கு ஊர் பெண் பாடசாலைகள் ஏற்படுத்தி அவற்றிலேயே முற்றும் சுதேசி முறைமையைத் தழுவிய கல்வி கற்பிக்கச் செய்தல் வேண்டும். ஆண்கள் குணமழிந்து போய் விட்டாலும் பிறகு ஜாதி கடைத்தேறுவதற்கு ஒருவிதமான நம்பிக்கை மிஞ்சக்கூடும். பெண்கள் குணமழிந்து போய் விட்டால் பிறகு தேசம் அதோகதி அடைந்து போய் விடும். ஆகையால் பெண்களுக்குக் கற்பிக்கப்படும் கல்வியானது மிகுந்த தீர்க்காலோசனையின் பேரில் ஏற்பட வேண்டும். இவ்விஷயத்தில் தேச முழுமைக்கும் இப்போதே பொது விதிகள் அமைப்பதைக் காட்டிலும் தாய் தந்தையர் அவர் அவர்களுக்குத் தெரிந்த மட்டிலும் நன்கு ஆலோசித்து அதற்கு இசைந்த வண்ணம் அந்த அந்த ஊரில் ஒருவிதமான கல்வி முறைமையை அனுசரித்து, அது எவ்வாறு நடந்து வருகிறதென்பதைக் கவனித்துப் பிறகு பொது விதிகளைப் பற்றி நினைக்கத் தொடங்குதல் பொருந்தும்.

மாதர்களுக்குக் கல்வி வேண்டுமென்று ஒவ்வொருவரும் மனத்தில் நினைத்துக் கொண்டும் வாயினால் சொல்லிக்கொண்டும் இருந்து விடுவது பெரும் பேதைமையாகும். 'அறிவிலே உணர்ந்தவன் பிறகு, அவ்வாறு உணரப்பட்ட விஷயத்தைச் செய்கையிலே நடத்தாமல் இருப்பவன் வெறும் குழந்தைகளுக்கு நிகராவான்' என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகிறார். மாதர்கள் உதவியின்றி ஒரு தேசமும் எவ்விதமான அபிவிருத்தியும் அடைய முடியாது. ஈசுவரனுக்கே தேவிதான் சக்தி என்று மதவாதிகள் சொல்லும் உண்மைப் பொருளை மறந்துவிடக் கூடாது. சக்தியாகிய தேவியில்லாத விஷயத்தில் புருஷன் ஒன்றும் செய்ய முடியாதென்பது பல வியவகாரங்களில் மாத்திரமன்று, எல்லா வியவகாரங்களிலும் உண்மையேயாகும். பாரத நாடு இப்போது அடைந்திருக்கும் இழிவு நிலையிலிருந்து உன்னதம் பெற வேண்டுமானால் ஆண்கள் மட்டுமேயல்லாமல் பெண்களும் தேச பக்தியிலே சிறந்தவர்களாக வேண்டும். பாரதத்திலே குந்தி தேவி, சத்தியபாமை, முதலிய ஸ்திரீ ரத்தினங்களின் சரித்திரங்களை நம் பெண்கள் அறியும் சக்தி வேண்டும். புராதன ராஜபுத்திர ஸ்திரீகளின் எண்ணிலா வீரச் சரித்திரங்கள் கற்பிக்கப்படாத பாடசாலைக்குப் பெண்கள் போகலாகாது. அர்ஜுனனைப் போன்ற வீரர்களையும், பாஸ்கராச்சாரியார், சங்கரர், ராமாநுஜர், காளிதாஸர் முதலியவர்களைப் போன்ற பலவித ஞானவான்களையும் பெற்று வளர்க்க வேண்டுமென்ற ஆசை நம் பெண்களின் நெஞ்சிலே குடியேற வேண்டும்.

இது நிற்க. தேசத்தின் எந்தவிதமான பெருங் காரியமும் கை கூடி வர வேண்டுமானால் அதற்கு ஸ்திரீகளின் மனோபலம் இல்லாமல் தீராது. இதனை எழுதுபவரிடம் ஸ்ரீமதி சகோதரி நிவேதிதா தேவி சில கற்பனைகள் கூறிவருமிடையே அந்த அம்மை, "ஐயா, மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு, அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்து கூட முயல்வது வீண் முயற்சி. அது ஒரு போதும் நடக்க மாட்டாது" என்றார். இந்த வசனத்தை ஒவ்வொரு தேசாபிமானியும் மனத்திலே பதித்துக் கொள்ளும்படி விரும்புகிறோம்.

## 2. ருதுமதி விவாஹம்

*[பெண்களைச் சிறு வயதிலேயே விவாகம் செய்து கொடுக்கும் வழக்கம் மலிந்திருந்த காலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை, தேசத்தின் ஆசாரங்கள் காலத்திற்கொப்ப மாற வேண்டுமென்று வலியுறுத்துகிறது.*

*இக் கட்டுரையும் "கலைமகள்" பத்திரிகை தேடி வெளியிட்ட பாரதி கட்டுரையாகும். "கலைமக"ளில் 1943-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இது வெளிவந்தது.]*

சென்ன பட்டணத்தில்...சாஸ்திரியார் தம் பெண்ணை ருதுவான பின் விவாகம் செய்து கொடுத்த செய்தி எனக்கு சந்தோஷம் தருகிறது.• நம் ஜன சமூகத்தில் மாறுதல்கள் நடக்க வேண்டும். மாறுதலே உயிர்த் திறமையின் முதற் குறியாகும். மேன்மேலும் சௌகரியத்தை விரும்பித் தானாகவே புதிய புதிய மாறுதல் செய்து கொள்ளாத ஜந்துவை, இயற்கை தெய்வம், வலிய வந்து, கீழ் நிலைமைக்கு மாற்றுகிறது. புராதன ஆசாரங்களில் நல்லதைக் கடைபிடித்துக் கெட்டதை நீக்கிவிட வேண்டும். "புராண மித்யேவ ந ஸாது ஸர்வம்". பழமை என்ற ஒரே காரணத்தால் எல்லாம் நல்லதாகி விடாது. மேலும் விவாக சமயத்தில் சொல்லும் சில வேத மந்திரங்களைக் கொண்டே பூர்வ காலத்தில் பிராமணர்கூட ருதுவான பிறகுதான் பெண்களுக்கு மணம் செய்வித்தார்கள் என்று சாஸ்திரியார் ஏற்கெனவே எழுதி வெளியிட்டிருக்கும் புத்தகம் ஒன்றில் ருஜுப்படுத்தி யிருக்கிறார். ஆகவே குழந்தைக் கல்யாணம் வேதோக்தமென்றும், தெய்வக் கட்டளை என்றும் இவர் நம்பவில்லை. இடைக் காலத்தில் நம் ஜாதியார் அறிவும், தைரியமும், சக்தியும் இழந்துவிட்ட பிறகு வந்து நுழைந்த அசம்பாவித வழக்கங்களில் இது ஒன்றென்பது சாஸ்திரியார் கொள்கை. இக்கொள்கையை நம் நாட்டில் எத்தனையோ ஜனங்கள் மனத்திற்குள்ளே அங்கீகாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இங்ஙனம் ஒப்புக்கொண்ட பிறகும் புதிய சீர்திருத்தத்தை நடையிலே கொண்டு வருவதற்குத் தைரியமில்லை.

பொதுவாக இங்கிலீஷ் படித்தவர்களிலே பலரும், இங்கிலீஷ் படிக்காவிட்டாலும் விஷயங்களைத் தாமாகவே யோசனை செய்து பார்க்கும் வழக்கமுடைய வேறு பலரும் நமது ஜனக்கட்டிலே எத்தனையோ குற்றங் குறைகள் இருப்பதாக ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவனவனுக்கு நியாயமாகத் தெரிந்ததை அவனவன் தன் அனுஷ்டானத்தில் காட்டும் முறைமை நமது நாட்டில் நன்றாக ஏற்படவில்லை. தருமத்துக்காகத் தாங்கள் சங்கடப்படுவதிலே பெரும்பாலோர்க்குச் சம்மதமில்லை. அதிலும் இங்கிலீஷ் படித்த கூட்டத்தாரில் மனோதைரியமுடையவரின் தொகை மிகவும் சொற்பமென்பது என் அபிப்பிராயம். உள்ளும் புறமும் ஒன்றுபோல் நடக்க வேண்டும். படித்த வித்துவான்கள் வஞ்சக நடை நடந்தால் அந்தத் தேசம் சூன்யமாகிவிடும். மனோதைரிய மில்லாவிட்டால் பயனுடைய செய்கை எதுவுமே செய்ய முடியாது. விதி வசத்தால் நம் ஜனங்களுக்கு இந்த க்ஷணத்திலே பல விஷயங் களிலும் வழி காட்டக்கூடிய திறமை இங்கிலீஷ் படித்த சிலரிடத்தி லேதான் காணப்படுகின்றது. அதற்குக் காரணம் பூமண்டலத்தின் சாஸ்திரங்களும் நவீன யோசனைகளும் நமது பாஷையில் மொழி பெயர்க்கப்படாமல் இருப்பதொன்று; நம்மவர் அந்நிய தேசங்களில் யாத்திரை செய்து தற்கால அனுபவங்களைத் திரட்டிக்கொண்டு வராமல் இருப்பது இரண்டு; நமக்குள் வந்து புகுந்திருக்கும் கோர மான வறுமை மூன்றாவது.

எனவே இந்தக் கூட்டத்தாரில் சிலர் கொஞ்சம் துணிவாகச் செய்கைகள் செய்வதைக் காணும்போது ஆரம்பத்தில் சொல்லியபடி எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. இப்படி நம்மவர் எல்லா விஷயங்களிலும் நியாயத்தைத் துணிவுடன் செய்து காட்டி நாட்டில் புதிய உயிரை நிலைநிறுத்தும்படி தேவர் கருணை செய்க!

# மலிவு நூல்கள்

1. கரிகால் வளவன்
2. தேரோட்டி மகன்
3. பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்
4. மல்லியம் மங்களம்
5. பாரதியார் மொழிபெயர்த்த தாகூர் சிறுகதைகள்
6. நாலுவேலி நிலம்
7. பாரதி நினைவுகள்
8. நாயன்மார் கதை - I
9. வாடா விளக்கு - I
10. வாடா விளக்கு - II
11. மருமகள் அல்லது மன்மதன் காதலி
12. இரண்டு பெரியவர்கள்
13. காலி டமாரம்
14. குப்பன் பித்தலாட்டங்கள்
15. கலைச் செல்வி

ஒவ்வொன்றும்

**30**

நயாபைசா


அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்

தபால் பெட்டி 1457 :: சென்னை-18